FRIENDS MISSIONARY PRAYER BAND
YOUTH & TEENS WING

# கேரீத்

A monthly Prayer Bulletin for Youth & Teens

Vol 13 - Transmit 03 - March 2020




## பயணத்தின் காலம்

12 STAGES OF BIBLE

EXODUS STAGE 3

Private circulation only



# பயணத்தின் காலம்

(யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்)

பயணத்தின்
காலம்
சுமார் 325
ஆண்டுகள்

பயண காலத்தின் முக்கிய நிகழ்வாக கடவுள் இஸ்ரவேல் மக்களை எப்படி எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டார் என்பதையும் பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை எப்படி சுதந்தரித்தார்கள் என்பதையும் காணலாம்.பழைய ஏற்பாட்டின் நூல்கள் எல்லாவற்றிலும் இந்த நூலில்தான் மிகுதியான அற்புதங்கள் எழுதப்பட்டுள்ளன.தண்ணீரில் மிதக்க விடப்பட்ட குழந்தை, முட்செடிகள் கர்த்தர் தரிசனமாகுதல் எகிப்தில் பல அற்புதங்கள், செங்கடலை பிளந்து, மாராவின் தண்ணீர் மதுரம் ஆகுதல், கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மன்னாவை தந்து போஷிக்கிறார் (யாத்திராகமம் 16:14),ஓய்வு நாளின் முக்கியத்துவத்தை இதில் பார்க்கிறோம் (யாத் 16:23-30), கர்த்தர் தமது ஜனங்களுக்கு 10 கற்பனைகளை தருகிறார் (யாத் 20:3-17).

01. இங்கே ஆசரிப்பு கூடாரத்தை எப்படி கட்ட வேண்டும் என்று மோசேயிடம் கூறுகிறார்.(யாத் 40-ம் அதிகாரம்) இஸ்ரவேல் ஜனங்களின் அவிசுவாசம் முறுமுறுப்பின் நிமித்தம் கர்த்தர் "நீங்கள் தேசத்தை சுற்றிப்பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொருநாள் ஒரு வருமாக, நீங்கள் நாற்பது வரும் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்" எனக் கூறுகிறார் (எண்ணாகமம் 14:34) இந்த காலத்தில் வசித்த மிகப் பிரதானமான நபர்கள் மோசே, ஆரோன், காலேப் மற்றும் யோசுவா.

## முக்கிய நபர்கள்


ஆரோன்


பிலேயாம்


மோசே


மிரியாம்


ஜெத்ரோ


கெர்சோம்


எலியேசர்

02. இந்தக்காலத்தில் வாழ்ந்த முக்கிய பெண்கள் மிரியாம் மற்றும் பார்வோனின் மகள் ஆகியோராவார். பத்துக்கட்டளைகள் ஆனது யாத்திராகமத்தின் காலத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும் லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் என்னும் காலங்களில் அதின் வாழ்வு முறைகளை காணமுடிகின்றது.எகிப்தின் ராஜா இஸ்ரவேல் மக்களை மிகவும் ஒடுக்க தொடங்கினார்கள் (யாத் 1 அதிகாரம்).இங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரேப் பர்வதத்தில் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று மோசேக்கு தரிசனமானார் (யாத் 3).

03.பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை அனுப்ப மறுத்த போது, இதில் மோசேயின் முதல் வாதையாக நதியின் நீரை இரத்த மாக மாற்றியது. செங்கடலைப்பிளக்குதல், மற்றும் மாறாவின் கசப்பான தண்ணீரை பற்றி பார்க்கிறோம் (7-12: 1-30).

04.கர்த்தர் மோசேயை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரருக்க கொடுக்கும் கானான் தேசத்தை சுற்றி பார்ப்பதற்கு மனிதரை அனுப்பு.வேவுக்காரர்கள் தேசத்தை 40 நாட்கள் சுற்றிப்பார்க்கிறார்கள்.அவர்களில் யோசுவா, காலேப் தவிர மற்றவர்களுடைய அவிசுவாசத்தினால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள்.இதன் விளைவாக அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் பிரவேசிக்க முடிய வில்லை.(எண்ணாகமம் 13,14)

05.கர்த்தர் மோசேயை நோக்கி, நீ கன்மலையை பார்த்து பேசு என்று சொன்னார்.ஆனால் மோசேயோ அதை கோலினால் இரண்டுதரம் அடித்ததின் நிமித்தம் கர்த்தர் வாக்குதத்தம் பண்ணின கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை (எண்ணாகமம் 20:7-13).அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான்.

## முக்கிய நிகழ்வுகள்


10 கற்பனைகள்

06.இதில் மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தப்படியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்.மோசேக்கு பின்னர் கர்த்தர் தமது ஜனங்களை வழிநடத்த யோசுவாவை தெரிந்து கொண்டார் (எண் 27:15-23, உபா 34:9).

07.இங்கு கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார்.அது பிலேயா மிடம் பேசுவதை பற்றி பார்க்கிறோம்(எண்ணா22).

08.கேராகு என்பவன் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக பேசினதின் நிமித்தம் பூமி தன் வாயைத் திறந்து, அவர் களையும், அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனி தரையும் அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது (எண் 16).


பஸ்கா


ஆசரிப்பு கூடாரம்


செங்கடல்

12 STAGES OF BIBLE

EXODUS STAGE 3

EDITORIAL

# பயணத்தின் நாயகர்

வாழ்க்கை ஒரு பயணம். நாம் போகும் போது, எங்கே போகிறோம் என்பது தெரியவேண்டும் அதை தெரிந்தால் மட்டுமே நம்முடைய பயணங்கள் சிறப்பாகவும், சரியானதாகவும் இருக்கும். பயணங்களின் காலத்தில் தேவன் இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைதன வாழ்வில் இருந்து,வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு பயணப்படும் காலங்கள் வரைக்குறிக்கும்.இப்பயணத்தில் 6 லட்சத்திற்கும் அதிகமானோர் பயணங்களை தொடர்ந்தாலும் போய் சேரும் இடத்தை அடைந்தவர்கள் 2 பேர் மட்டுமே என்பது வருந்தத்தக்கதே.இந்த பயணத்தின் தலைவனாக தேவன் மோசேயை தெரிந்தெடுத்து,அவரே வழி நடத்தி சென்றார்.போகும் போது, பின்பற்ற தேவையான கட்டளைகளை யாத்திராகமத்தில் கொடுத்தார். அதின் விரிவாக்கத்தை லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் போன்ற ஆகமங்களின் மூலமாய் வெளிப்படுத்துகிறார்.ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படிந்தோரை கடைசி வரைக்கும் கொண்டு சேர்க்கிறார். கீழ்படியாதவர்களை வனாந்திரத்தில் அழித்து போடுகிறார். நாமும் நம்முடைய வாழ்க்கை என்னும் பயணத்தில் அவரின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர் சொல்லும் பாதையில் செல்லும் போது மட்டுமே,நித்திய வாழ்வை கண்டடைய முடியும்.இப்பயணத்தில் இருந்த இஸ்ரவேல் மக்கள் அனைவரும் எகிப்தை விட்டு செல்ல முடிவெடுத்தனர். ஆனால் அவர்களின் உடல் மட்டுமே கானானை நோக்கி சென்றது, ஆனால் அவர்கள் முழு எண்ணமும் எகிப்திலேயே இருந்தது. எகிப்தை பார்த்து கொண்டே பின்னோக்கியே கானானுக்கு சென்றது போல் தோன்றுகிறது.40 நாட்களில் சென்று அடைய வேண்டிய கானானுக்கு 40 ஆண்டுகளாக சென்றனர். அதற்கு காரணம் அவர்கள் பயணத்தில் வந்த சூழ்நிலைகளில் தேவனுக்கு எதிராக முறுமுறுப்பும், கீழ்படியாமையே ஆகும் .இஸ்ரவேல் மக்கள் கேட்டது எல்லாம் தேவன் கொடுத்தார்.இறைச்சி, சுவையான மன்னா மற்றும் இரவில் வழி காட்ட அக்கினி வெளிச்சமாகவும், பகலில் வெயில்படாமல் இருக்க மேகத்தை குடையாகவும் ஏற்படுத்தினார். அவர்கள் சட்டை புதுசாகவே இருந்தது, செருப்பு தேயவில்லை, ஆனாலும் இவர்கள் எண்ணம் முழுவதுமே எகிப்தையும், உடல் மட்டுமே நகர்ந்து போவது போலவும் காணப்பட்டார்கள். நமது பயணத்தில் ஆவிக்குரிய பயணத்திலும், ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதுமே அவரை மட்டும் பிற்பற்றுவதாக இருக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே நாம் போய் சேர வேண்டிய பரம கானானை அடைய முடியும். 6 லட்சம் பேரை வழிநடத்தின மோசே கானானுக்குள் போகமுடியாமல் போனதும் வருந்தத்தக்கதே.இதிலிருந்து அநேகரை வழிநடத்தும் தலைவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

தேவனுடைய திட்டத்தின்படி, எதற்காக உங்களை அழைத்தாரோ அந்த நோக்கத்தை மட்டும் அறிந்து பயணப்படுவோம். பரமகானானை சென்று அடைய முடியாத அநேக தேவையில்லாத காரியங்களை, முறுமுறுப்புகளை, கீழ்படியாமைகளை இம்மாத பயணத்தின் காலத்திலிருந்து குறிப்பெடுத்து தேவனை பிரியப்படுத்தும் காரியங்கள் மட்டும் செய்து பயணப்படுவோம். உங்கள் பயணம் இனிதாக வாழ்த்துகிறோம்.பயணத்தின் நாயகராம் நமது இயேசு கிறிஸ்து உங்களை முற்றும் முடிய வழிநடத்துவாராக ஆமேன்.

kerithmagazine@fmpb.org
9841973060 , 9445001563

இயேசு கிறிஸ்துவின் பணியில்
ப.செல்வின்

## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும்
வாலிபர் மற்றும் இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்

## தரிசனம்

இந்தியாவின் எதிர்கால தூண்களாகிய
இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை
விதைத்திடவும், சிந்தனைக் கூர் கொண்டு
இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையில்
இளைஞர்களுக்கான ஓர் இறை படைப்பு.

## நோக்கம்

வாலிபர் – இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களை வலுப்படுத்தும் மாத இதழ்

## தயாரிப்பு & வடிவமைப்பு

வாலிபர் மற்றும் இளம் வாலிபர் பிரிவு

FMPB Youth wing
9, Rhenius Street
Palayamkottai
Tirunelveli - 627002
Cell : 9003251982

FMPB Youth wing,
90/86 Basanthi Devi Aparts,
Kothaval Chavadi St
Saidapet, Chennai -15
Cell : 9841032224

www.fmpbyouth.org
Kerithmagazine@gmail.com

தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-

Youth & Teens Wing
29,High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn.277

சந்தா மற்றும் முகவரி
மாற்றத்திற்குக் கூப்பிடுங்க

Cell : 9445001563
9445052797

## ஜெபக்குழுத் தலைவர்களுக்கு...

ஜெபக்குழுவில் நீங்கள்
தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும்
கேரீத் இதழின் செய்திகளும்
ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப்
பிரித்து நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம்.
ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றைத்
தனியாக எடுத்து ஜெபநேரத்தில்
பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனைய
பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவிற்கு வரும்
வாலிபர்களுக்கு படிக்கக் கொடுக்கலாம்.
ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை
மாதம் ஒருமுறை சந்திப்போம்.
பயன்படுத்துங்கள், ஜெபக்குழுவை
வலுப்படுத்துங்கள்...

## தொடர் ஜெபத்திற்கு

அறைகூவல்
மாத இதழ் பயன்படுத்தவும்




# சாக்கு போக்கு



தேவன் தம்முடைய திட்டங்களை நிறைவேற்ற தனி நபர்களையே தேடுகிறார். இஸ்ரவேல் மக்களின் பிள்ளைகளின் ஜனத்தொகை அதிகரிக்க எகிப்து நாடு இஸ்ரவேல் மக்களால் நிறைய ஆரம்பித்து (யாத் 1:7) அந்நாட்களில் யோசேப்பை அறியாத புதிய ராஜா ஒருவன் எகிப்தில் தோன்றினான் (யாத் 1:8). அவன் இஸ்ரவேல் மக்களை அதிகமான கொடுமைப்படுத்தினான்.இஸ்ரவேல் மக்கள் தேவனிடம் ஜெபித்தனர் (யாத் 2:23).ஆண்டவர் அவர்கள் பெருமூச்சை கேட்டு ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு உடன் செய்த உடன்படிக்கையை நினைவுக்கூர்ந்தார்(வசனம் 24).நீங்களும் நானும் ஆராதிக்கிற தேவன் அவர் நம் உபத்திரவத்தை பார்க்கிறவர் (3:7) வேதனை அறிபவர்.கூக்கூரலை கேட்கிறவர்,நம்மை விடுவிக்கிறவர் பரமகானான் வரை வழி நடத்திட பயணங்களின் நாயகர் அவர் நமக்காக இறங்கி வருவார்.ஒவ்வொரு நபரையும் தம்முடைய திட்டத்திற்கு நேராக வழிநடத்தும் ஆண்டவர் மோசேவை தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற அழைக்கிறார். அதற்காகவே அவன் உயிரை பாதுகாத்து (யாத் 2:1-10) (perserved)கொண்டு வந்தார். அதற்காகவே அவனை பக்குவப்படுத்தி (Prepared) ஆயத்தப்படுத்துகிறார் (யாத் 2:23) தேவன் தன்னுடைய திட்டத்தை (Plan to workout) மோசேயின் மூலம் செய்ய முயற்சிக்கிறார்.40 ஆண்டுகள் அரண்மனை வாழ்வு,அடுத்த 40 ஆண்டுகள் வனாந்திரத்தில் ஆடுகளுக்கு முன்னால் இப்பொழுது அவன் வானந்திரத்தில் மக்களை வழிநடத்திட ஆயத்தப்படுத்தி ஆண்டவர் பணி செய்ய அடுத்த 40 ஆண்டுகள் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த அழைக்கிறார்.ஆனால் அவனோ பல சாக்குபோக்குகளை சொல்கிறான் (யாக் 3:10)"உன்னை பார்வோனிடத்தில் அனுப்புவேன் வா" என்று மோசேயை அழைக்கிறார். ஆண்டவர் பணிக்கு அழைக்கும் போது மோசே கூறிய 5 சாக்குபோக்குகள் இன்றைய சூழ்நிலையிலும் அநேக வாலிபர்களை கூறுகின்றனர்.

### 1. நான் எம்மாத்திரம்: "I am not worthy"




பைபிளில் மோசே மட்டுமல்லாமல் யோனா, கிதியோன், பேதுரு நீ மற்றும் நானும் கூறிய சாக்குபோக்குகள் இது போன்றே. நான் ஆண்டவர் பணியை செய்ய தகுதியற்றவன் என்பதே. இந்த எண்ணம் நமக்குள் வந்தாலே அதுவே தகுதி.ஏனென்றால் தகுதி இல்லாதவர்களை தகுதிப்படுத்தும் ஆண்டவர் நமது தகுதியாக மாறிவிடுகிறார்.நான் வழக்கமாக சொல்லும் ஒன்று. '0' பூஜ்ஜம் தனியாக இருக்கும் போது அதன் மதிப்பு Zero மட்டுமே.ஆனால் அந்த Zero நம்முடைய வாழ்வில் எத்தனை இருந்தாலும் அது மதிப்பு அற்றது.ஆனால் Zero-வுக்கு முன்பதாக ஒரு நம்பரை போட்டால் அத்தனை Zero-வுக்கும் மதிப்பு கூடிவிடும்.அது போலவே இயேசு கிறிஸ்து நம்முடைய வாழ்வில் வரும்போது அனைத்து தகுதியின்மையும் தகுதியாக மாறும். ஆகவே இந்த சாக்கு போக்கிற்கு பவுலின் பதில் பிலி 4:13-ல் என்னை பெலப்படுத்தும் கிறிஸ்துவால் எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு என்கிறார். ஆகவே மோசேயை போல் புறப்பட்டு போ. ஆண்டவரின் அழைப்பிற்கு தாமதியாதே.

### 2. எனக்கு தெரியாது(யாத் 3:13) I have no message:

பார்வோனுக்கு முன்பாக நின்றால் அநேக கேள்வி கேட்பார்கள், பதில் தெரியாது என்று மோசே சொல்கிறான்.அவனை பார்வோன் அரண்மைனையில் வைத்து அனைத்தையும் படிக்க வைத்து,அனைத்தும் அறிந்தவன் சாக்குபோக்கு சொல்கிறான். ஆண்டவர் அழைத்தால் போவது மட்டுமே நமது வேலை பயன்படுத்துவதும், பேசச்செய்வதும் அவரே, ஆகையால் நம்முடைய படிப்பு, பட்டம், செல்வாக்குகளை நம்பிப்போகாதிருங்கள். அவரை மட்டும் நம்பிப்போகும் போது நம்மை பயன்படுத்துவார். இதற்கு பவுல் 1 கொரி 15:3,4 பதில் கொடுக்கிறார்.தேவனுடைய சத்தமாக பார்வோனோடு பேச அழைத்தார்.அதுமட்டுமல்லாமல் நம்முற்பிதாக்களுக்கு கொடுத்த வாக்குதத்தத்தை நிறைவேற்றவுமே மோசேயை அழைத்தார். அதேபோல் உங்களையும் அழைக்கிறார் சாக்குபோக்கு வேண்டாமே. எனக்காய் பேசிட நாவு வேண்டும் என்று உன்னை அழைக்கிறார்.

### 3. என்னை நம்பமாட்டார்கள் கேட்க மாட்டார்கள்

### I have no Authority:

மத் 28:18-20 சாதாரணமானவர்களை ஆசாதாரண மானவர்களாக மாற்றுகிறவர் நமது தேவன். நாம் நம்மை சாதாரணமானவர்கள் என்று நினைத்துக் கொள்வோம். ஆனால் நம்மை படைத்தவர் ஒரு நோக்கத்தோடே நம்மை நடத்துகிறார். கிரிக்கெட் பேட் யார் கையில் இருக்கிறதோ அதை வைத்தே அதின் மதிப்பு சச்சின் கையில் இருக்கும் பேட்க்கும் நமது கையில் இருப்பதற்கும் அநேக வித்தியாசம் உண்டு.யாக் 4:2 மோசேயின் கையில் சாதாரண கோல் இருக்கிறது (வசனம்17). இந்த கோலை உன் கையில் வை அற்புதம் அதன் மூலம் செய்வேன் என்றார். பின்பு வசனம் 20ல் அது தேவனுடைய கோல் என்று எழுதப்பட்டுள்ளது. நமது கையில் இரும்போது அது வெறுமனே ஒரு சாதாரண கோல். அது தேவனுடைய கையில் கொடுக்கும் போது, அதை அவர் ஆசீர்வதித்து அநேகருக்கு பயனுள்ள கோலாக மாற்றுகிறார்.அந்த கோலை வைத்து 3 அற்புதங்களை செய்து அவனை நம்ப வைக்கிறார். வானத்திலும்,பூமியிலும் சகல அதிகாரம் கொடுத்து அழைக்கிறார் பயப்படாமல் வா!! பயன்படுத்துவார் வா!!

### 4. நான் பேச்சாளர் அல்ல, பேசத் தெரியாது

### I have No Eloquence:

மோசேயை ஆண்டவர் அழைக்கும் போது, வாயை படைத்த அவரிடமே, எனக்கு பேச வராது திக்குவாயன் என்கிறான் (யாத் 4:11).ஆண்டவருடைய வாயாக பேசிட அழைக்கும் போது,அவரே பேசுகிறார்.நான் இந்த ஊழியம் வரும்வரை 4 பேர் முன்னால் பேசத்தெரியாது,ஆனால் என்று அவர் கையில் ஒப்புக்கொடுத்தேனோ அன்றுமுதல் அவர் பயன்படுத்துகிறார்(பிலி 2:13) தேவனே அவருடைய திட்டம்,அனைத்தையும் நம்மிலே செயல்படுத்துவார்

### 5. வேறே யாரையாவது அனுப்பும் - I have No Inclination:

வேறேயாராவது தெரிந்தால் ஏன் தேவன் மோசேயிடம் கேட்கிறார்.உன்னைத்தான் அழைத்தால் வேறே யாரையும் அனுப்ப அனுமதிக்காதீர்கள்.தேவை அதிகம் தேவனின் பாரம் நீங்க உன்னையே அழைக்கிறார்.

அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்வாயா? அழைக்கிறார் உன்னையே. ஆகவே சாக்குபோக்குகளை உதறி தள்ளிவிட்டு சரித்திர புருஷர்களாய் அவர் கையில் உங்களை ஒப்புக்கொடுங்கள். அவரே உங்களை அழைக்கிறார். அவரே பயன்படுத்துவார்.

- Mr. Selwyn



Character Study

# பாலாக்

மோவாபின் ராஜா

அன்பு நண்பர்களே! இந்த மாதம் இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்திலிருந்து மோசேயால் வழிநடத்தப்பட்ட போது நடந்த ஓர் முக்கிய சம்பவத்தைக் குறித்து பார்ப்போம். மோவாபின் ராஜாவின் பெயர்தான் பாலாக் அவன் இஸ்ரவேலரைக் கண்டு பயந்தான்.தன் தேசத்தை அழித்து விடுவார்கள் என்ற அச்சத்தில் தீர்க்கதரிசியான பிலேயாமிடம் தன் பிரபுக்கள் சிலரை அனுப்பினார். இந்த பிலேயாம் எவனை ஆசீர்வதிக்கிறானோ அவன் ஆசீர்வதிக்கப்படுவான் எவனை சபிக்கிறானோ அவன் சபிக்கப்படுவான். இந்நிலையில் இஸ்ரவேல் மக்களை சபிக்கும்படி பிலேயாமிடம் கூலி கொடுக்கப்பட்டது. ஆனால் அவனோ தேவன் தனக்கு என்ன சொல்லுகிறார் என்பதை அறிய அப்பிரபுக்களை இராத்தங்கச் சொன்னான். அவர்களும் தங்கினார்கள்.

கர்த்தர் பிலேயாமிடம் அன்று இஸ்ரவேல் புத்திரரை சபிக்கவும் வேண்டாம்.அவர்களோடே போகவும் வேண்டாம் என்று கட்டளையிட்டார்.அப்போதே பாலாக் மிகவும் கனம்பொருந்திய வேறு சில பிரபுக்களை அனுப்பி இஸ்ரவேலரை சபிக்க அழைத்தான். இந்த முறை கர்த்தர் அப்பிரபுக்களோடே செல்ல உத்தரவு கொடுத்தார். ஆனாலும் கர்த்தரின் வார்த்தையை மாத்திரம் செய்ய கட்டளையிட்டார். அப்போழுது பாலாக் மிகவும் கனம்பொருந்திய வேறு சில பிரபுக்களை அனுப்பி இஸ்ரவேலரை சபிக்க அழைத்தான். இந்த முறை கர்த்தர் அப்பிரபுக்களோடே செல்ல உத்தரவு கொடுத்தார். ஆனாலும் கர்த்தரின் வார்த்தையை மாத்திரம் செய்ய கட்டளையிட்டார். வழியில் கர்த்தரின் தூதன் உருவிய பட்டயத்தை வைத்துக்கொண்டு நின்றான். கழுதை இதை கண்டு வழிவிலகியது இதனால் ஆத்திரம் அடைந்த பிலேயாம் கழுதையை 3 தரம் அடித்தான்.கர்த்தர் கழுதையின் வாயை திறந்தார்.....என்ன ஒரு ஆச்சரியம்!! அது என்னை ஏன் அடிக்கிறாய்? என்று வினவியது.பின்பு கர்த்தருடைய தூதன் பிலேயாமுக்கு தென்பட்டு நீ வழிமாறி போகிறதால் உன் எதிராயாக நான் வந்தேன்.இக்கழுதை என்னைக்கண்டு விலகியது நீ விலகாவிடில் உன்னை கொன்று போட்டிருப்பேன் என்றார். அப்போதுதான் பிலேயாமுக்கு கழுதையின் செயல் புரிந்தது. அப்போது அவன் நான் பாவம் செய்தேன். நான் போகிறது தகாததாய் இருந்தால் நான் திரும்பிபோய்விடுகிறேன் என்றான். ஆனாலும் தூதன் அவனை ராஜாவிடம் அனுப்பினான்.

பிலேயாம் பாலாக்கை சந்தித்தான் அவர்கள் இருவரும் பாகாலின் மேடையில் ஏறி, இஸ்ரவேலின் கடைசி பாளையத்தை பார்த்தார்கள். அங்கே 7 பலிபீடங்களில் பலிகள் செலுத்தப்பட்டது. அவ்வேளையிலே பிலேயாம், கர்த்தர் சபிக்காதவனை சபிப்பது எப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பது எப்படி? (எண் 23:8) என்று இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்தான்.இதை கேட்ட பாலாக் கோபங்கொண்டு பிலேயாமை வேறு இடத்திற்கு அழைத்து சென்று, அங்கே இஸ்ரவேலரை சபிக்கச் சொன்னான். இங்கேயும் 7 பலிபீடங்கள் கட்டப்பட்டு, பலிகள் செலுத்தப்பட்டது. அப்பொழுதும் கர்த்தர் கூறிய வண்ணம் பொய் சொல்ல அவர் மனுஷனும் அல்ல! மனம் மாற அவர் மனுபுத்திரனும் இல்லை!! (எண் 23:17) என்று கூறி இஸ்ரவேலரை ஆசீர்வதித்தான்.

மூன்றாம் தரமும் வேறு இடத்திற்கு அழைத்து சென்று இஸ்ரவேலரை சபிக்கக் கூறினான்.முன் செய்தது போல் பலியிட்டப்பின், தேவஆவி பிலேயாமின் மேல் வந்து, இஸ்ரவேலரை ஆசீர்வதித்தான். பாலாக், நீ சபிக்கவும் வேண்டாம், ஆசீர்வதிக்கவும் வேண்டாம் என்று கூறி, அவனுக்கு கிடைக்கும் கனத்தை கர்த்தர் தடுத்தார் என்றான்.பாலாக்கும் பிலேயாமும் அவர்கள் வழியே சென்றார்கள்.பின்பு இருவரும் பட்டயத்தால் கொன்று போடப்பட்டார்கள். (எண் 31:8,யோசு 13:22)

**கர்த்தரின் நாமத்தை அறிந்த பாலாக்:**

மோவாப் தேசத்தில் விக்கிர ஆராதனையும் விபச்சாரமும் பெருகி இருந்தது.பாலாக், தன் செல்வாக்கை வைத்து அவர்களை சபித்து வென்றுவிடலாம் என்று எண்ணினான்.நாமும் பயம் நம்மை சூழும் சமயத்தில் பல குறுக்கு வழிகளை யோசிக்கிறோம்.வேலைக்கு செல்கிறவர்கள் நமக்கு மேல் உள்ள அதிகாரிக்கு எதையாவது வாங்கிக் கொடுத்து பதவி உயர்வு வாங்கலாம் என்றும்,பள்ளி கல்லூரி மாணவர்கள் பணம் கொடுத்து தேர்வில் தேர்ச்சி பெற்று விடலாம் என்றும்,அரசு ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்தால் வேலை முடிந்துவிடும் என்றும் யோசிப்பது உண்டு.ஆனால் நாமோ, நம் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரையே நம்புவது என்றும்,நம் வாழ்வின் வலுவான அடித்தளமாயிருக்கட்டும் பணத்தையும்,ஆஸ்தியையும் நம்பி பாலாக்கைப் போல் அழியாதிருப்போம்.

**கர்த்தரின் சித்தத்திற்கு மாறாய் செயல்பட்ட பாலாக்:**

1. கர்த்தர் இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பார் என்று பிலேயாமின் வழியாய் கூறினார். ஆனாலும் பாலாக் மனம் ஏற்கவில்லை. 2. பிலேயாமை 3 முறை வெவ்வேறு இடங்களில் இருந்து இஸ்ரவேலை சபிக்கச் சொன்னான். ஆனாலும் கர்த்தர் கூறிய வண்ணம் அவர்களை ஆசீர்வதித்தான். நமக்கு என்ன வேண்டும் என்பதை மட்டும் பிடித்துக் கொண்டு, ஆண்டவர் சித்தத்திற்கு மாறாய் பிடிவாதம் பிடிக்கிறவர்களா நாம்? பாலாக் பட்டயத்தால் கொன்று போட்டான். எச்சரிக்கையாய் கர்த்தரின் சித்தத்தின் படி நடப்போம்! இஸ்ரவேலை ஆசீர்வதித்தது போல தேவன் உங்களையும் உங்கள் சந்ததியையும் ஆசீர்வதிப்பாராக.

**கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்:**

1. பாலாக் கர்த்தரின் நாமத்தை அறிந்தவன்.
2. பயத்தினால் ஆஸ்தியை கொண்டு குறுக்கு வழியை தேர்ந்தெடுத்தான்.
3. கர்த்தரின் சித்தத்தை அறிந்தும் அவரது சித்தத்திற்கு மாறாய் செயல்பட்டான்.

**பாலாக் பற்றி**

எண் 22,23,24 ஆகிய அதிகாரங்கள், உபா 23:4,5, யோசுவா 24:9, நெகே 13:2, மீகா 6:5 2 பேதுரு 2:15,16, யூதா 1:11, வெளி 2:14 ஆகிய இடங்களிலும் காணலாம்.

- Mr. Tyson

ஃ வார தேவ வார்த்தை

# வழிகாட்டி GPS

GODS PATH & SALVATION



பைபிள் முழுவதுமே பயணங்கள் நிறைந்தது.ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் புத்தகம் வரை ஆதாம் முதல் பவுல்வரை தங்களது பயணங்களால் மட்டுமே வெளிப்படுத்தப்படுகின்றனர்.இதில் இந்த வார செய்தியாக நாம் கற்றுக் கொள்ளுவது இஸ்ரவேல் புத்திரர்களின் 40 ஆண்டு காலப்பயணமாகும்.இதில் எகிப்திலிருந்துப் புறப்பட்டு கானான் சென்றடையும் வரை அவர்கள் எத்தனை இடத்தில் தங்கி சென்றார்கள் என்று பார்த்தால் 42 இடங்களில்(எண்ணாகமம் 33) தங்கிச்சென்றார்கள். வேதத்தில் யாத்திராகமம், எண்ணாகமம், உபாகமம் புத்தகங்கள் மூலம் கற்றுக்கொள்ளும் இந்த 42 இடங்கள் சொல்லும் செய்தி என்ன? இதை கற்று கொள்வதன் மூலம் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அது என்ன செய்தி சொல்லுகிறது என்பதைச் சுருக்கமாக கற்றுக்கொள்ளலாம்.

## பயணச் சுருக்கம்

முதல் பதினோறு (11) இடங்களை முதல் வருடத்தில் கடந்தார்கள். 32வது நிலை முதல் 42வது வரை உள்ள (11) இடங்கள் கடைசி அதாவது 40வது வருடத்தில் கடந்தனர். மீதமுள்ள 19 இடங்களை 38 வருடம் கடந்து வந்தார்கள். அதிலும் 19 வருடங்கள் காதேஸ் என்ற வனாந்திரத்தில் இருந்தார்கள்.காதேஸ் என்பதற்கு "பரிசுத்தம்" என்று அர்த்தம். பரிசுத்தத்தில் கொஞ்சம் கூட சமரசம் செய்யாத கர்த்தர் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எகிப்தை விட்டுப் புறப்படும் போது அது கர்த்தருடைய சேனை (யாத் 12:42) என்று அழைக்கப்பட்ட போதும் பரிசுத்தம் இல்லாமல் பரம கானானை அடைய முடியாது என்பதுதான் சத்தியம்.

## 42 பயண நிலைகளின் உருவகம்:

42 இடங்களும் நம்முடைய 42 ஆவிக்குரிய வளர்ச்சியின் உருவக மாகும்.மேலும் 42 யை குறித்து சில உண்மைகளையும் நாம் அறிந்து கொள்வது நல்லது. இதில் தேவன் 42 சந்ததிகளை நினைவு கூர்ந்தார் (மத் 1) என்றும், இயேசு கிறிஸ்துவின் 42 மாத ஊழியத்தை குறிப்பதாகவும், மேலும் நம் வாழ்வியலில் ஓர் குழந்தை தன் தாய் வயிற்றில் கருவுற்று குழந்தை பிறக்கும் வரை ஆகும் காலம் 42 வாரம்.

இதில் 42 இடங்களையும் மூன்றுப்பகுதியாக அதாவது 14,14,14 இடங்களைப் பிரித்து, நாம் கற்று கொள்வது நமக்கும் எளிதில் புரியும் (மத் 1:17). இந்த 42 இடங்களும் இனி "பாளையம்" என்று குறிப்பிடப்படும். இதில் சொல்லப்படாத மற்றப் பயணங்களை நீங்கள் வேதத்துணை நூல்கள் கொண்டு கற்றுக்கொள்ள ஊக்கப்படுத்துகிறோம்.

## முதல் 14 பாளையங்கள்:

யாத் 13-ம் அதிகாரம் 37ம் வசனத்தின் படி, இஸ்ரவேல் புத்திரர்கள் ராமசேசை விட்டு கால்நடையாய்ப் பிரயாணம் பண்ணி, சுக்கோத்துக்கு போனார்கள் என்று பார்க்கிறோம். இதில் ராமசேஸ் என்பது எகிப்தின் அடிமைத்தன வாழ்க்கையைக் குறிக்கிறது.

பாளையம் 1 சுக்கோத் செல்லும் செய்தி சுக்கோத் என்பது கூடாரம் என்று பொருள்படும். இவ்வுலக வாழ்க்கை ஓர் கூடாரவாழ்க்கை,அது தற்காலிகமானது, நம் அடைய வேண்டியது கானான், இதில் எங்கும் நாம் நிரந்தரமாக தங்கிவிடக் கூடாது என்பதைதான் முதல் செய்தியாக கடவுள் நமக்கு உணர்த்தி, தொடர்ந்து முன்னேறுங்கள் என்று தேவன் இஸ்ரவேல் ஜனங்களை அழைத்துச் சென்றதாகப் பார்க்கிறோம்.இது என் சொந்த பூமி என்று எந்த ஒரு கிறிஸ்தவனும் மார்பு தட்ட இடம் கிடையாது.நாம் பயணிகள், கானானை நோக்கிய நம்முடையப் பயணம் தொடர வேண்டும்.




மேலும் பாளையம் 2,3 ஏத்தாம் மற்றும் ஈரோத் பாளையம் ஆகும்.பாளையம் 4 மற்றும் 5 மாரா,ஏலீம் என்பதாகும்.இதில் மாராவில் கசப்பான அனுபவம் மதுரமாக மாறியது. ஏலீமில் 12 நீருற்றுகளும், 70 பேரீச்சபழ மரமும் இருந்தது.இதில் 12 இஸ்ரவேல் கோத்திரங்களையும்,70 இஸ்ரவேல் பிதாக்களையும் குறிக்கிறது.இது ஒற்றுமையின் (Unity) அடையாள மாகும். மாராவின் கசப்பிலிருந்து வெளிவந்த மக்களிடம் உறுதியான அன்பை நிலைநாட்டும்(Hidden love) இடமாகவும் சொல்லப்படுகிறது.தொடர்ந்து சிவந்த சமுத்திரம்,சீன் வனாந்திரம், தொப்கா,ஆலுஸ், ரெவீதீம், சீனாய் என்றும் தொடரும் பயணம் பாளையம் 12ல் ஹப்ரோத், அத்தாவா ஆகும்.இதன் உட்பொருள் சிற்றின்ப இச்சைகளை அடக்கம் பண்ணின இடம். பாளையம் 13 அஸ்ரோத் இதன் அர்த்தம் "பட்டி" (Courtyard) தேவன் ஒவ்வொரு தனிமனிதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். (பட்டி என்பது ஆடுகள் அடைத்துவைக்கும் இடம். இதன் வாசல் வழியே ஒவ்வொரு ஆடுகளாகதான் வெளியே வர முடியும். மேய்ப்பன் தனி கவனம் செலுத்துகிறார் என்று பொருள். முதல் நிலையின் கடைசி பாளையம் ரித்மா இங்கு நடைபெற்ற நிகழ்வு 12 வேவுக்காரர்கள் இதில் 10 பேர் எதிர்மறை செய்திபரப்பினர். 2 பேர் நேர்மறை செய்தி பரப்பினர். இதின் விளைவு 38 வருடங்கள் காதேசிலே ஜனங்கள் நிற்க வேண்டியதாயிற்று. அதாவது வதந்தி பரப்பியவர்கள், சந்தேகம் கொண்டவர்கள் கானான் செல்லவில்லை என்பதுதான் சத்தியம்.

## இஸ்ரவேலர் பயணத்தில் நாம் கற்று கொள்ள வேண்டியது:

♦ பொறுமை : 40 ஆண்டு 42 இடம் என பொறுமை யோடு வாக்குத்தத்தம் பண்ணிய பூமியை அடைய காத்திருந்தது போல் இயேசுவின் வருகை மட்டும் நாமும் முன்னேறி பொறுமையாய் நாமும் நடக்க வேண்டும்.

♦ எகிப்திலிருந்து வெளிவந்த இஸ்ரவேல் எகிப்தின் சிந்தனை நிறைந்திருந்தது போல் விசுவாசிகளிடம் பாவ எண்ணங்கள் மிகுதியாக இருக்கும், தேவ வார்த்தையின் படியே நாம் நம்மை சரி செய்து கானானுக்குள் பிரவேசிக்க நம்மை தயார்படுத்த வேண்டும்.

♦ இஸ்ரவேல், ஆபிரகாமின் உடன்படிக்கையின் இறுதிமுடிவை சரிவர உணராமல் இருந்தது போல, கிறிஸ்துவின் புது உடன்படிக்கையின் பிள்ளைகளாகிய நாமும் சில வேளை கிறிஸ்துவின் உடன்படிக்கையின் இறுதிமுடிவை உணராமல் பயணிப்பது வருந்தத்தக்கது.

சகோதரனே, சகோதரியே
இஸ்ரவேல் பயணத்தில் புறப்பட்டது,
6 லட்சம் புருஷர்கள், புறப்பட்டவர்களில் 'இருவர்
(யோசுவா, காலேப்) தவிர" என்ற வார்த்தையில்
இந்த பயணம் அவ்வளவு எளிதல்ல என்பதை
உணர்த்துகிறது.நாமும் பரம கானானை
நோக்கி நம்முடைய பயணத்தை
கவணமாக தொடர வேண்டும்.

- Mr Isaac Kamalesh

# வேதாகமத்தில் அழகான பெண்கள் யார்?



மார்ச் 8ம் நாள் பெண்கள் தினமாக கொண்டாடும் பெண்களாகிய நாம் வேதத்தில் வழியாக எவ்வாறு நம் அழகுக்கு அழகுசேர்ப்பது என்பதை பற்றி காண்போம். இந்த உலகில் தன்னை அழகுபடுத்திக் கொள்வதில் ஆணைவிட பெண்ணுக்கு ஆசை, ஆர்வம் அதிகம். ஒரு பெண் தன்னை அழகுபடுத்திக் கொள்வதற்கு முகத்திற்கு cream பயன்படுத்துவது, தன் புருவத்தை சீர்படுத்துவது, உதட்டிற்கு சாயம் (Lipstick) பூசுவது, விரல் நகத்திற்கு வர்ணம் தீட்டுவது, வித்தியாசமான முறையில் மயிரை பின்னுவது, காலத்திற்கெற்ற நவ நாகரீக உடையணிவது, இன்னும் அழகுக்கு அழகு சேர்க்க அணிகலன்களை அணிவது என்று பல வழிகளில் தன்னை அழகுப்படுத்திக் கொள்கிறாள். ஒரு குறிப்பிட்டத் தொகை அழகு சாதன பொருட்களுக்கு பயன்படுத்துகிறார்கள். ஒரு குறிப்பிட்ட மணி நேரம் கண்ணாடி முன்பாக செலவழிக்கிறார்கள்.

வேதாகமத்தில் அழகான பெண்கள் யார்? அவர்கள் தங்களை அழகுப்படுத்திக் கொள்ள என்ன செய்தார்கள் என்பதை காண்போம்.

**1. சாரள்:** சாரள் பார்வைக்கு மிகுந்த அழகுள்ளவள் என்று ஆதி 12:11-14ல் காண்கிறோம். சாரான் என்றவுடன் நம் மனதிற்கு வருவது, சாராளின் விசுவாசம் தான். வயது சென்றவளாயினும் ஆண்டவரின் வாக்கின் மேல் விசுவாசம் வைத்து பிள்ளைப்பெற்றாள் என்று வேதம் சொல்கிறது(எபி 11:11)

**2. ரேபேக்காள்:** அந்த பெண் மகா ரூபவதி என்று ஆதி 24:15ல் காண்கிறோம். ரெபேக்காள் என்றவுடன் நம் மனதிற்கு வருவது மிருகத்திற்கும் இரக்கம் காட்டினது தான். ஈசாக்கிற்கு பெண்பார்க்க சென்ற எலியேசருக்கு பத்து ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுத்தது ரெபேக்காள் என்று காண்கிறோம். ஒரு ஒட்டகம் சுமார் 10 பெரிய குடம் தண்ணீர் குடிக்கும் 10 ஒட்டகம் என்றால் 100 குடம் தண்ணீர் குடிக்கும் அத்தனை குடம் தண்ணீர் கொடுத்தவள் தான் இந்த ரெபேக்கா.

**3. அபிகாயில்:** அந்த ஸ்தீரி மகா புத்திசாலியும், ரூபவதியுமாயிருந்தள் என்று 1 சாமு 25:3ல் காண்கிறோம். அபிகாயில் என்றவுடன் நம்மனதிற்கு வருவது தன் குடிகார கணவனுக்காக தாவீதினிடத்தில் பரிந்து பேசி காப்பாற்றியதுதான்.

**4. எஸ்தர்:** அந்தப் பெண் ரூபவதியும் சௌந்தரியமுடையவளுமாயிருந்தாள் என்று எஸ்தர் 2:7-ல் காண்கிறோம்.எஸ்தர் என்றவுடன் நம்மனதிற்கு வருவது தன் இனத்தை காப்பாற்றுவதற்காக உயிரையும் பொருட்படுத்தாமல் ராஜாவின் முன் நின்றது தான்.

இன்னும் அநேகர் வேதாகமத்தில் அழகுள்ளவர்களாக காண்கிறோம். யோபுவின் பிள்ளைகள் எமிமாள், கேத்சியாள், கேரானாப்புக் ஆகியோராவர். தேசத்தில் எங்கும் யோபுவின் குமாரத்திகளைப் போல் சௌந்தரியமான பெண்கள் காணப்படவில்லை என்று வேதம் சொல்கிறது. இன்னும் பலர் அழகுள்ளவர்களாய் வேதத்தில் காண்கின்றோம். ஆனால் சாராள், ரெபேக்காள், அபிகாயில், எஸ்தர் ஆகியோர் வேதாகமத்தில் இடம் பெறுவதற்கு அவர்கள் அழகும் சௌந்தரியமும் காரணமில்லை. சாராளின் விசுவாசம், ரெபேக்காளின் இரக்கம், அபிகாயிலின் பரிந்துபேசுதல், எஸ்தரின் தைரியம் இவைகள் தான் இவர்களின் மெய்யழகு. அதுதான் நூற்றுக்கணக்கான வருடத்திற்கு பின் நாம் அவர்களை நினைக்க வழிவகுக்கிறது.

அதினால்தான் வேதம் சொல்லுகிறது. மயிரைப்பின்னி பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து, தங்களை அலங்கரித்தார்கள் 1 பேதுரு 3:3-5ல் காண்கிறோம்.

வேதம் சொல்லும் பரிசுத்த அலங்காரம் இதுதான் அல்லவா? பொதுவாக தன்னை அழகுபடுத்திக் கொள்ளுகிறவர்கள் மற்றவர்களை ஈர்க்க வேண்டும் என்று நினைப்பார்கள். அழகாக இருக்கிறீர்கள் நன்றாக உடை அணிந்திருக்கிறீர்கள் என்று மற்றவர்கள் பாரட்ட வேண்டும் என்ற எண்ணம் நம் மனதின் ஓரத்தில் இருக்கத்தான் செய்யும். இயேசுவின் கவனத்தை ஈர்த்த சில பெண்களைப் பற்றி காண்போம்:

## இயேசுவின் கவனத்தை ஈர்க்காதவை

- ஒருவரின் கண்ணீரின் அழகு இயேசுவை ஈர்க்கவில்லை.
- ஒருவரின் விலைமிகுந்த வஸ்திரம் இயேசுவை ஈர்க்கவில்லை
- தன்னை ஆபரணங்களினால் அலங்கரித்தவர்கள் இயேசுவை ஈர்க்கவில்லை
- ஒருவரின் மயிற்பின்னல் இயேசுவின் கவனத்தை ஈர்க்கவில்லை

## ஈர்த்தவை

- ஒரு அன்னாளின் கண்ணீரின் ஜெபம் (1சாமு 1) இயேசுவை ஈர்த்தது.
- சுகம் கிடைக்கும் என்று இயேசுவின் வஸ்திரம் தொட்ட பெண்ணின் விசுவாசம் தான் இயேசுவை ஈர்த்தது.
- தன்னிடத்திலிருந்த 2 காசையும் காணிக்கைப் பெட்டியில் போட்ட ஏழை விதவையின் தியாகம் (மாற் 12:41-44) தான் இயேசுவை ஈர்த்தது.
- தன் மயிரால் இயேசுவின் பாதம் துடைத்த மரியாளின் தாழ்மைதான் (மாற் 14:3-9) இயேசுவின் கவனத்தை ஈர்த்தது.

நீங்களெல்லாரும் அவர் சாயலில் படைக்கப்பட்ட போதே அழகுதான். பின்னே ஏன் அழகுக்கு அழகு சேர்க்க வேண்டும். கீழ்காணும் அலங்கரிப்பால் உங்களை நீங்கள் நிச்சயம் அழகுபடுத்திக் கொள்ள வேண்டும்.

- கீழ்படிதல் என்னும் கீரிடத்தை சூடிக்கொள்ளுங்கள்.
- இரக்கம் காட்டும் கண்களை அணிந்து கொள்ளுங்கள்.
- விலையுயர்ந்த எளிமை என்னும் ஆடையை தரித்துக் கொள்ளுங்கள்.
- விசுவாசம் என்னும் ஆபரணத்தை அணிந்து கொள்ளுங்கள்.

நாமும் ஏழை விதவைப்போல் தந்தியாகம் செய்து, உணவு இல்லாதவர்களுக்கு உணவு கொடுத்தும், உடையில்லாதவர்களுக்கு உடைகொடுத்தும், ஆறுதல் இல்லாதவர்களுக்கு ஆறுதல் கொடுத்தும் அவர்கள் வாழ்க்கையில் அழகு சேர்ப்போம். இப்படிப்பட்ட அழகை, அலங்கரிப்பை தான் தேவன் எதிர்பார்க்கிறார். பிரியப்படுகிறார் தேவன் தாமே இப்படி செய்தவர்களோடு கூட என்றும் இருப்பார். கிறிஸ்துவைப்போல் தன்னுடைய வாழ்க்கையல்ல, பிறருடைய வாழ்க்கையிலே அழகு சேர்ப்போமாக. ஆமென்.

- Mrs.Sheela mary



# மிரியாம்

– உடன் தேனீர் நேரம்

coffee WITH miriam



## அன்பு வாசகர்களே!

இந்த மாதம் நம்முடன் உரையாட வந்துள்ள நபர் ஒரு பெண் தீர்க்கதரிசி அதுமட்டுமல்ல. மோசே மற்றும் ஆரோனின் அன்பு சகோதரி மிரியாம் அவர்கள் அவருடனான நமது சந்திப்பு வழக்கம் போல், நமது வாழ்க்கை பாதைக்கான சில மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரும் என விசுவாசிப்போம்.

கேரீத் பேட்டியாளர்: வணக்கம் அம்மா!

மிரியாம்: வணக்கம்!

கேரீத் பேட்டியாளர்: உங்க பேருக்கு அர்த்தம் தெரியுமா? கொஞ்சம் சொல்லுங்களேன்!

மிரியாம்: 'மிரியம்' என்ற வார்த்தைக்கு பலவிதமான அர்த்தம் கூறப்படுகிறது.யூத போதகர்கள் இதற்கு 'கசப்பு' என்றும், வேறுசிலர் 'கடலின் நட்சத்திரம்' என்றும், 'தேவனால் நேசிக்கப்படும் ஒருவர்' என்றும் பல அர்த்தம் இருக்கு, ஆனால் எனக்கு தேவனால் நேசிப்படுபவள் என்ற அர்த்தம் தான் பிடிக்கும்.

கேரீத் பேட்டியாளர்: உங்க குடும்பம் பற்றி சொல்லுங்களேன்.

மிரியாம்: எனது தந்தையின் பெயர் அம்ரோம், என் தாயார் யோகபேத் First தம்பி ஆரோன், Second தம்பி மோசே நான் ஒரே ஒரு பொண்ணுதான் என் குடும்பத்துல.

கேரீத் பேட்டியாளர்: மோசேவுடைய வரலாற்றுல மிக முக்கியமானவங்க நீங்கதான். எப்படி அந்த சின்ன வயசுல அவ்வளவு தைரியமா செயல்பட்டிங்க.

மிரியாம்: அன்பு பயமறியாது. அதுதான் அங்கு நடந்தது. பார்வோனுக்கு தெரியாம குழந்தையை அத்தனை நாள் மறைச்சி வைத்தாச்சு. அழுகாம சினுங்காம பார்த்துக்கிட்டேன். ஒரு பொம்மை மாதிரி நான் பார்த்து ரசித்த குட்டி தம்பி, நாணல் பெட்டியில் வைத்து அம்மா விட்டுட்டாங்க. என்னால சந்தோஷமாக இருக்க முடியல. அம்மாவும் ரொம்ப அழுது துக்கமா இருந்தாங்க. அவங்க கவலையையும் போக்கனும், தம்பியையும் பத்திரமா பாத்துக்கணும். அது இரண்டையும் நான் எப்படி செய்தேன்று... இல்ல இல்ல ஆண்டவர் என் மூலமா செய்தார்னு நினைக்கிறேன்.

கேரீத் பேட்டியாளர்: உங்களுடைய குணாதிசயங்களிலே எனக்கு ரொம்ப பிடிச்சது நெருக்கமான நேரங்களில் சுய மாகவும் சீக்கிரமாகவும் சிந்திக்க கூடியவரா நீங்க இருந்தது.

மிரியாம் : அது எல்லா பெண்களுக்குமே தேவையான பண்புதான். எல்லா நேரமும் பயந்து யாரையாவது சார்ந்து இருக்காம, சூழ்நிலையோடு நாமும் சேர்ந்து பயணிக்காம சூழ்நிலையை நமக்கு சாதகமா மாத்திக்கிட்டா நாம மட்டும் இல்லாம, நம்மை சேர்ந்தவர்களையும் காப்பாத்த முடியும்.

கேரீத் பேட்டியாளர்: நீங்க நல்ல பாடல் எழுதுவீங்களா?

மிரியாம்: நான் மோசே மற்றும் ஆரோனுக்கு மூத்த சகோதரி ஜனங்கள் முக்கியமா, பெண்கள் என்னை ஒரு தலைவி-யாக பார்த்தாங்க. ஆகவே (யாத் 15:20,21) அவர்களை வழிநடத்தி, உற்சாகப்படுத்தி தேவன் செய்த பல அற்புத மான காரியங்களுக்காய் நன்றி செலுத்தினேன்.எங்க இருதயத்தில் மகிழ்ச்சி. அடிமைத்தன நுகத்திலிருந்து விடுபட்ட மகிழ்ச்சி அதை வெளிப்படுத்த அமைந்த வாய்ப்பு அது, அதைதான் பாடி, ஆடி கொண்டாடினேன்.

கேரீத் பேட்டியாளர்: மோசே மீது உங்களுக்கு என்ன கோபம்?

மிரியாம்: அவன் மீது கோபம் என்பதை விட அவன் மனைவி சிப்னேராள்-ஐ பிடிக்கல.ஒரு மீதியானிய பெண்ணை திருமணம் செய்தது எங்களுக்கு விருப்பமில்லை. அதனால மோசேவை குறைவாக நினைத்தோம். அது தவறுன்னு பின்னாடிதான் புரிந்தது.

கேரீத் பேட்டியாளர்: ஆண்டவர், குறைவை மறந்து நம்மை ஏற்றுக்கொள்ளும் போது, நாமும் அதை பெரிது படுத்தாம இருக்கனும். இன்றைக்கும் இந்த பிரச்சனை ஒரு முடிவுக்கு வரலை. நிறைய வீடுகளில் வரதட்சணை, ஜாதி, நிறம், பணம் என்று திருமணங்களில் உருவாக்குவது சில பெண்கள் தான்.

மிரியாம்: எனக்கு ஆவிக்குரிய பெருமை! கொஞ்சம் அதிக மாகவே இருந்தது.கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரா? எங்களை கொண்டும் செயல்பட்டார்னு பெருமையா பேசினேன். அதனால் குஷ்ட ரோகியாக ஆண்டவரால் சபிக்கப்பட்டேன்.

கேரீத் பேட்டியாளர்: மோசே Chance-ஏ இல்ல, எப்படிப்பட்ட மனுஷனா இருந்தா ஆண்டவர் அவருக்காக சாட்சி வந்து சாட்சி சொல்லியிருப்பார். தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமா பேசுவது தாழ்வாக நினைப்பது. இன்றைக்கு சாதாரணமாகிவிட்டது. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல் காரன் மாதிரி. உண்மை உத்தமத்திற்கு முக்கியத்துவம் இல்லாம போயிடுச்சு, ஊழியர்களிடையே ஆவிக்குரிய பெருமை அதிகரிச்சிடுச்சி.

மிரியாம்: ஆனா! மோசே எனக்காக ஜெபித்தான்.அவன் நான் குஷ்டரோகியா ஆனதால சந்தோஷப்படல. அதுதான் எனக்கு ஒரு மனமாற்றத்தை கொடுத்தது.

கேரீத் பேட்டியாளர்: அன்பானவர்களே! தேவன் நமக்கு வாய்ப்புகளைக் கொடுப்பது மட்டுமல்ல, நமது சுதந்திரம் அல்லது உரிமைகளைக் குறிப்பிட்ட வரம்புக்கு உட்படுத்துகிறார். மோசேயின் அதிகாரம், வல்லமை குறித்து மிரியாம் பொறாமைப்பட்டாள்.தன்னுடைய சிறிய சகோதரன் மிக பெரியவனாவதைப் பார்த்து, பொறாமையின் நிமித்தம் மோசேயின் தலைமைத்துவத்தைக் கண்டனம் செய்து, தேவனால் தண்டிக்கப்பட்டாள். வானாந்திர பயணத்தின் கடைசிப்பகுதியில் மரித்து, காதேசிலே அடக்கம் செய்யப்பட்டாள் (எண் 20:1) நம் சக மனிதர்களின் வளர்ச்சிரயை கண்டு பொறாமை கொண்டு அவர்களுக்கு விரோதமாக திட்டம் தீட்டி, பரம கானானை பார்க்கும் வாய்ப்பை தவறவிடாதிருப்போம்.

– திருமதி. ஏஞ்சல்



# பெண்ணுரிமைக்காக வாதாடும் செலோப்பியாதின் 5 குமாரத்திகள்

9ம் வார தேவ வார்த்தை

## THE FABULOUS FIVE

இஸ்ரவேல் மக்களில் ஒரு கூட்ட ஆண்கள் விநோதமான ஜெபத்தை ஏறெடுப்பர்.அதாவது தேவனே என்னை ஒரு அடிமையாகவோ,பெண்ணாகவோ அல்லது ஒரு புறஜாதியாகவோ படைக்காமல் இருந்ததிற்கு நன்றி என்பதே.அப்படி என்றால் இவர்கள் பெண்களை இழிவாக கருதுகிறார்களா? பரிசுத்த வேதாகமம் பெண்களை எவ்வாறு மதிக்கிறது மற்றும் எவ்வளவு முக்கியத்தும் கொடுக்கிறது என்பதை 5 வாலிபப் பெண்களின் வாழ்வில் இருந்து கற்றுக்கொள்வோம். எண் 26:33, 27:1-11, 36:2-12, யோசுவா 17:3-6,1 நாளா 7:15 மேலே கொடுக்கப்பட்ட வேதப்பகுதிகளில் ஒரு குடும்பத்தைக் குறித்து வாசிக்கிறோம். ஏப்பேரின் குமாரனான செலோப்பியாத்து என்னும் மனிதனுக்கு குமாரர் இல்லாமல், குமாரத்திகள் மாத்திரம் இருந்தார்கள். அந்த ஐந்து குமாரத்திகள் மக்லாள் என்றால் வியாதி என்றும், நோவாள் என்றால் இயக்கம் (Movement)என்றும், ஒக்லால் என்றால் காடை என்றும், மில்காள் என்றால் ராணி அல்லது ஆலோசனை என்றும், திர்சாள் என்றால் மகிழ்ச்சி என்றும் அர்த்தம் கொண்ட பெயர்களை இட்டு இருந்தார்கள். செலோப்பியாத்து என்வர் யோசேப்பின் மகனான மனாசேவின் கோத்திரத்தில் வந்தவர் இவர் தன்னுடைய 5 மகள்களையும் விட்டுவிட்டு வனாந்திரத்தில் பயணிக்கும் போதே மரித்துப் போனார். இந்த சூழ்நிலையில் மோசே, எலியேசர், பிரபுக்களிடம் சென்று தங்கள் தகப்பனுடைய பெயர் இப்பூமியில் அற்றுப்போகாமல் இருக்க ஆண்பிள்ளைளுக்கு கிடைக்க வேண்டிய சுதந்திரத்தை 5 சகோதரிகளாகிய தங்களுக்கு கிடைக்க பண்ணுமாறு வேண்டிக்கொண்டனர் (எண் 27:4). இந்த கோரிக்கையை மோசே தேவனிடத்தில் வைத்தார். செலோப்பியத்தின் குமாரத்திகள் வைத்த கோரிக்கை சரியானது என்று கர்த்தர் அங்கீகாரம் கொடுத்தார். அவர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றினார். இஸ்ரவேல் மக்களுக்கு புதியதோர் சட்டத்தையும் உண்டுபண்ணினார் எண் 27:7-9.

### 1. முறையிட பயப்படவில்லை:(Fearlessness to fight)

செலோப்பியாத்தின் 5 மகள்களும் மிகவும் தைரிய சாலிகளாக இருந்தனர். இந்த நாட்களில் கூட ஆண் தலைவர்களிடத்தில் நமக்கு நியாயம் கிடைக்க பெண்களாகிய நாம் கேட்பதற்கு தயங்குவோம். இவர்கள் ஞானமாக தங்கள் காரியத்தை சரியான சமயத்தில் முறையிட்டனர். 1.தங்கள் தகப்பனாரின் மரணத்தில் அந்த தலைவர்களுக்கு இருந்த சந்தேகத்தை தீர்த்தனர் (எண் 27:3) 2. தங்கள் தகப்பனாரின் சொத்தைப் பெற்றுக்கொள்ள தங்களுக்கு அண்ணனோ தம்பியோ இல்லை என்ற நிலையை புரிய வைத்தனர். 3. இவர்கள் நடத்து கொண்ட விதத்தை அறிந்த தேவனே இவர்கள் கோரிக்கை நிறைவேற்றி புதிய சட்டத்தையும் உருவாக்கினார்.இதை வாசித்துக் கொண்டிருக்கும் இளம் நெஞ்சமே நாமும் அநேக நேரங்களில் சரியான காரியத்தை செய்யக் கூட பயந்து போய் அதை செய்ய தவறிவிடுகிறோம்.ஆனால் தவறான காரியத்தை செய்ய முற்படும் போது நமக்குள் பயம் அதாவது தேவபயம் அவசியம்.

### 2. விசுவாசத்தில் முன்னேறினார்கள்: (Forward in faith)

இந்த 5 பெண்களின் விசுவாசம் பெரியதாய் இருந்தது. 1. அவர்கள் தேவன் மேல் விசுவாசம் வைத்திருந்தனர். எங்களுக்கு அப்பா இல்லை, ஆண் வாரிசும் இல்லை என்று பிறரிடம் சொல்லி சுற்றி திரியாமல் தங்களின் தேவன் அவர்களின் காரியத்தை வாய்க்க செய்வார், நியாயம் செய்வார் என்று தேவன் மேல் நம்பிக்கையாய் இருந்தனர். 2. அவர்கள் இம்மைக்காக வாழாமல் தேவன் வாக்குப்பண்ணின கானான் தேசத்தை குறித்த விசுவாசம் அவர்களிடம் இருந்தது.அவர்கள் கோரிக்கை வைத்த நிலம் கானான் தேசத்தில் இருந்தது.அதை அவர்கள் கண்டது இல்லை.இந்த 5 சகோதரிகளின் முற்பிதாக்கள் அத்தேசத்தைக் குறித்தும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தையும் நம்பாமல் மரித்துபோய் இருந்த சூழ்நிலையிலும் இவர்கள் விசுவாசத்தில் நிலைத்து நின்றனர். தேவன் அழைத்துச் செல்லவிருக்கும் பூமி நல்லது என்றும் அதில் தங்களுக்கும் ஒரு பங்கு வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தனர். நமக்கும் தேவன் வாக்குப்பண்ணின காரியங்களைக் குறித்து சந்தேகிக்காமல் தேவனிடம் இருந்து முழுமையாக பெற்றுக்கொள் வோம்.3.தேவன் அவர்கள் மூலமாகவும் அவர்கள் நாட்டு மக்களுக்கு ஒரு மாற்றத்தை உண்டு பண்ண முடியும் என்பதை விசுவாசித்தனர். அவர்கள் தங்களுக்காக மாத்திரம் இக்காரியத்தை செய்யவில்லை.அவர்கள் பின் உள்ள சந்ததியில் உள்ள பெண்களுக்காக இந்த காரியத்தை செய்தனர். நான் ஒன்றுமே இல்லை.எனக்கு அது இல்லை, இது இல்லை என்கின்ற நம்மையும் கொண்டு இந்த சமுதாயத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.நாம் அவர்மேல் விசுவாசம் வைத்து செயல்பட வேண்டும்.

### 3. தங்கள், தகுதியான உரிமைக்காய் நின்றனர்: (Fought for their deserved rights)

இந்த நாட்களில் உலகு எங்கிலும் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காய் போராடுவதைக் காணலாம். அதில் சில கோரிக்கைகள் பெண் இனத்திற்கே பாதகமாக முடியும், சூழ்நிலையிலும் தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். நாம் நம் வீடுகளிலும் வெளியே செல்லும் போது, அறைகுறை ஆடை அணிய, இரவு நேரங்களில் வெளியே சுற்ற, ஆண் நண்பர்களோடு ஊர் சுற்ற போன்ற பல காரியங்களுக்காய் போராடியிருப்போம். அல்லது மனதளவில் சிந்தித்தும் இருப்போம். செலோப்பியாத்தின் மகள்களுக்கு இது வாழ்க்கை பிரச்சனை அவர்கள் திருமண வாழ்வும் இதில் அடங்கியிருந்தது எண் 36:3-12. இவர்கள் தங்கள் கோரிக்கைகளின் மத்தி யிலும், தங்கள் தலைவருக்கும், நாட்டு சட்டத்திற்கும் கீழ்படிந்து நடந்தனர். நாமும் நமக்காய் சில காரியங்களை முன்வைக்கும் போது இது எனக்கு தகுதியா, என் குடும்பம், என் தேவனுக்கு உகந்ததாய் இருக்குமா என்று சிந்தித்து செயல்படவே வேண்டும்.

செலோப்பியாத்தின் மகள்களிடம் இருந்து பெண்களாகிய நாம் அல்லது நம் சமுதாயத்தில் ஏதாவது மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று துடிக்கும் வாலிப தம்பிமாராக இருந்தாலும், நாம் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ளலாம். இவர்கள் தங்கள் சமுதாயத்தில் ஏதோ ஒரு அநீதி நடக்கிறது என்று அறிந்து அதை சரி செய்ய தங்களால் முடியும் என்பதையும் உணர்ந்து செயல்பட்டனர். தங்கள் செயலிலும் ஞானமாய் இருந்தனர். அவர்கள் தங்கள் தலைவரான மோசே, பிரதான ஆசாரியர்கள், மற்றும் இஸ்ரவேலின் கோத்திரங்களின் இராஜகுமாரரிடமும் தங்கள் காரியத்தை தெரிவித்தனர். அவர்களிடமும் போய் அதிகாரம் செய்து கேட்கவில்லை பிறரை தங்களுக்காய் போராட தூண்டிவிடவும் இல்லை.மாறாக மோசேயின் மூலம் கர்த்தரிடத்தில் தங்கள் கோரிக்கையை வைத்து பதிலுக்காக காத்திருந்தனர். இந்த ஐந்து பேரும் தங்கள் செயலினால் தங்கள் தகப்பனுக்கு நற்பெயரையும் பெருமையை சேர்ந்தனர். இந்நாட்களில் வாழும் நாமும் நம் சொல்செயலினால் நம் தேவனுக்கும் பெற்றோருக்கும் நற்பெயரை பெற்றுத்தர முற்பட வேண்டும்.

- Mrs.Mercy Selwyn

# ஆசாரியர்கள்



## அழைப்புக்கு கீழ்படிந்தவர்

இஸ்ரவேல் மக்களுக்கு தம்மை ஆராதிக்க தேவன் கற்றுக்கொடுக்க தொடங்கிய காலங்களில்,அதற்கு ஆசரிப்பு கூடாரத்தில் உதவுவதற்கு ஆராதனை முறைமைகள் மற்றும் தேவனுடைய கூடாரத்தின் செயல்பாடுகளையும் (Operations of the Tabernacle) மற்றும் மக்கள் தேவனோடு கொண்டிருக்கும் உறவில் நிலைத்திருக்க செய்ய உதவி ஊழியர்கள் தேவைப்பட்டனர்.அதற்காக பிரித்தெடுக்கப்பட்ட மக்கள்தான் ஆசாரியர்கள் அல்லது லேவியர்கள் ஆவர். அவர்கள் லேவி கோத்திரத்தில் இருப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் லேவி கோத்திரத்தில் இருப்பவர்களாக இருந்தால் போதாது.அவர்கள் ஆரோன் என்ற இஸ்ரவேலரின் முதல் பிரதான ஆசாரியனின் கோத்திரத்தில் வந்திருக்க வேண்டும். லேவியர்களைக்காட்டிலும் ஆசாரியர்கள் ஆசரிப்பு கூடாரத்தில் அதிக வேலையை செய்தனர்.பிரதான ஆசாரியனான ஆரோன் எல்லா ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களுக்கு பொறுப்பாய் இருந்தார்.தினந்தோறும் பலிகள், ஆசரிப்பு கூடார பராமரிப்பு வேலை மற்றும் தேவனை எவ்வாறு வழிபட வேண்டும் என்றும் மக்களுக்கு ஆசாரியர்கள் கற்றுக்கொடுத்தனர். அவர்கள் தேவனுக்கு முன் மக்களின் பிரதிநிதியாக இருந்தபடியால் அப்பரிசுத்த பணிக்கு பாத்திரவான்களாய் இருத்தல் அவசியமாய் இருந்தது.இந்த ஆசாரியர்கள் முழுநேர பணியாளர்களாவும், ஆவிக்குரிய தலைவனாகவும், காணிக்கைகளுக்கு கண்கானியாளர்களாகவும் செயல்பட்டனர்.

### ஆசாரியர்களை தெரிந்தெடுக்கும் முறை:

ஆசாரியர்களைத் தெரிந்தெடுக்கும் முறைமையை லேவி 8: 1-10 -ல் காணலாம்.

### 1. தெரிந்தெடுப்பு (Choosing):

8:1-2 தேவன் மோசேயை நோக்கி, நீ ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து இங்கு தேவனே ஆரோனை பெயரிட்டு அழைத்து தன் பணிக்கு அவனை தகுதிப்படுத்தி பயன்படுத்துகிறார். எபே 1:4ல் தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டபடியே,, அப்பொது தெரிந்தெடுப்பு என்பது அவருடைய அழைப்புக்கு கீழ்படிந்தவர்களை உலகத்தை வெறுக்கிறவர்களை சிலுவையை எடுத்து பின்செல்லும் பலரை ஆசாரியர்களாக பயன்படுத்துகிறார். ஒருசிலர் ஆரோனை போல அழைப்பில்லாமல் ஊழியத்திற்கு வரமாட்டேன் என்று சாக்குபோக்கு சொல்லுகின்றனர். ஆனால் கிறிஸ்துவின் அன்பை ருசித்தவர்கள், அனைவருமே தேவனுடைய அழைப்பில் நாமும் ஆரோனை போல ஆசாரிய ஊழியத்திற்கு தகுதி பெற்றறவர்கள் தகுதி இல்லாதவனை தகுதிப்படுத்த தம்முடைய ராஜரீக பணியை செய்தார். மீன்பிடிக்கும் சாதாரண மனிதர்களை வைத்து சரித்திரம் படைப்போராக மாற்றுகிறார். ஆகவே அழைப்பு பெற்றோர் புறப்படுவீர் இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்.

### 2. சுத்திகரிப்பு(Cleansing):

8:6ல் கர்த்தர் தனக்குக் கட்டளையிட்ட படியே...அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து...தனக்கு பணி செய்ய தெரிந்தெடுத்த ஆரோனையும் அவன் குமாரர்களையும் தேவன் தண்ணீரால் சுத்திகரிக்கிறார்.ஆனால் இந்நாட்களில் 1பேதுரு 1:2ன்படி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவுகிறார். இப்பொழுது ஆரோனின் குமாரர்களை தண்ணீரினால் சுத்தரிகரித்தார். புதிய ஏற்பாட்டின் சந்ததியை தேவன் தம்முடைய குமாரரின் இரத்தத்தினால் சுத்திகரித்து அவருடைய பிள்ளைகளாக மாற்றி அவருக்கு பணி செய்யும் வாய்ப்பை கொடுக்கிறார். தேவன் புதிய ஏற்பாட்டில் தம்முடைய தூதர்களை வைத்து பணி நிறைவேற்றாமல் நம்மையே விரும்புகிறார். தூதர்கள் அவருடைய இரத்தத்தால் சுத்திகரிக்கப்படவர்கள் அல்ல. நாமே அவருடைய கரத்தில் சுத்திகரிப்பிற்கு அவருடைய பணிக்கு தகுதியானவர்கள். ஆகவே அவர் இரத்தத்தினால் பாவ மன்னிப்பு பெற்று புதுவாழ்வு பெற்ற யாவருக்கும் ஆசாரிய ஊழியம் பொருந்தும்.

### 3. உடுத்துவிப்பு(Clothed):

8: 7-8ல் ஆசாரியர்களுக்கு என்ற விசேஷித்த உடையால் அலங்கரிக்கிறார். உள்ளங்கி, இடைக்கச்சை, மேலங்கி, ஏபோத்து, அதன் மேல் விசித்திரமான கச்சை, மார்பதக்கத்தையும் அணிவித்து அதன் மேல் தும்மீம் மற்றும் ஊரிம் என்பவைகளால் ஒரு ஆசாரியனை அலங்கரிக்கிறார். இப்பொழுது வெளிப்புறமான விசேஷித்த ஆடைகாளால் அல்ல. உள்ளான அலங்கரிபால் உடுத்துவிக்கிறார். கிறிஸ்து இயேசுவின் உள்ளான பண்புகள் நம்முடைய வாழ்விலும் அலங்கரித்து நம்மை ஊழிய பாதையில் நடத்துகிறார். பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது, கிறிஸ்துவை தரித்துக் கொள்ள வேண்டும். (கலா 3:27) அவருடைய பண்புகளை குறித்து கொலோ 3:12ல் தெரிந்து கொள்ளப்பட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையை தரித்து கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றிலும் மேலாக பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பை தரித்து கொள்ளவேண்டும் (3:14). கிறிஸ்துவின் குணாதிசயங்களை உடுத்துவித்து கொள்வதாலே மாத்திரம் நம்முடைய வாழ்வில் தேவனுக்கு பணி செய்ய முடியும்.

### 4. முடிசூட்டி அபிஷேகிப்பு (Crowed & Anoined):

8:-9-12ல் ஆசாரியனுக்கு தலையிலே பாகையைத் தரித்து பாகையின் மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கீரிடம் என்னும் பொற்பட்டத்தைக் கட்டினான். அவனை சுற்றியுள்ள பொருட்களையெல்லாம் அபிகேத்தனர். அதன்பின் ஆரோனின் சிரசின் மேலும் வார்த்து அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிகேம் பண்ணினான். தேவன் பணி பரிசுத்த பணியாகும். இதை நிறைவேற்றிட பரிசுத்த ஆவியானவரின் துணை மற்றும் அவரின் அபிஷேகம் அதிகம் தேவை. இவர்கள் பலிபீடத்தில் எரியும் அக்கினி அணையாமல் வைப்பதும் அந்த ஆசாரியர்களின் பணியாகும்.

- Mrs.Mercy Selwyn



10 மற்றும் 12ம் வகுப்பு பொது தேர்வு எழுதும்

# ஊழியரின் & விடுதியில் படிக்கும் பிள்ளைகளுக்காய்

## ஜெபிப்போம்

இந்த கல்வியாண்டு 2019-2020 -ல் அரசாங்கப் பொதுத்தேர்வு எழுதவிருக்கும் 10, 12 -ம் வகுப்புகளில் படிக்கும் மிஷனெரிகளுடைய பிள்ளைகளின் பெயர்பட்டியல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்களைச் சொல்லி ஜெபிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம். அதோடு நமது விடுதிகளில் படிக்கின்ற பிள்ளைகளையும், நமது தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்களின் பிள்ளைகளையும் தங்கள் ஜெபங்களில் நினைவுகூறும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### 10 – ஆம் வகுப்பு

| பிள்ளையின் பெயர் | தந்தையின் பெயர் |
|---|---|
| 1. ஜிம் எலியட் | அருட்திரு. பால் சம்பத் |
| 2. அர்ப்பண் பர்தன் | அருட்திரு. ஜூபராஜ் பர்தன் |
| 3. ஷைனி ஜரின் | அருட்திரு. சஞ்சீப் குமார் ஆன்ட்ரப் |
| 4. ஸ்டேயின்ஸ் B. ரிங்கள் | அருட்திரு. பென்ஹர் எம். |
| 5. பெனிடிக்ஸன் மகாபத்ரா | அருட்திரு. ஜீவன் ரஞ்சன் மகாபத்ரா |
| 6. ஆனி குட்டி மனோஜ் | அருட்திரு. மனோஜ் பி.ஜே. |
| 7. ஜெயநிசி ஆஷா | அருட்திரு. ஜாண்சன் சங்கர் |
| 8. ஆட்லின் செல்சியா ஆசீர் | திரு. ஆனந்த் ஆசீர் |
| 9. லேகோஸ் குமார் | திரு. ஹேமந்த குமார் சாபர் |
| 10. பிளஸ்ஸிங் ராஜா | அருட்திரு. எட்வர்ட் ராஜதுரை |
| 11. டேனி ஜோயல் | அருட்திரு. ராஜேஷ் கே. |
| 12. ஏஞ்சல் சுனில் வசாவா | அருட்திரு. வசாவா சுனில் குமார் |
| 13.குளோரி ஜூலியா (எ) ஸீனு | அருட்திரு. பிபாபா பானி |
| 14. நிலோலி சோப்பி | அருட்திரு. எக்டோ சோப்பி |
| 15. கிங்ஸ்லி மோரிஸ் பாய்க் | அருட்திரு. குணா சந்திர பாய்க் |
| 16. ஜாண்பால் ராக்லாண்ட் | திரு. ஐசக் தனசிங் ஆர். |
| 17. லிடியா வொய்சிலின் | திரு. டேனியல் அருள்மணி |
| 18. சுதீப்தா ராணி பீரோ | அருட்திரு. சஞ்சய் குமார் பீரோ |
| 19. சாம் லியோ சகாயராஜ் | திரு. ஐசக் ராஜா டி. |
| 20.ஹத் நிங்கய் கோங்சய் | அருட்திரு.லுன்கிம்தோங்கம் |
| 21. அனுக்ரகா மிராக்ளின் | திரு. ஜாண்பால் ஹாரிஸ் |
| 22. ஆபிரகாம் ராஜாசிங் | திரு. பால்ராஜ் ஆர். |
| 23.ஜெருஷா கரோலின் | திரு. மோசஸ் (எ) முரளிதரன் |
| 24. அஷிர் ராக்லாண்ட் | மறைதிரு. ஜேக்கப் பிரதீப் குமார் |
| 30. ஜனஸ் கே. பாபு | அருட்திரு. பாபு பி. |
| 31. சலோம் அதிகாரி | அருட்திரு. ராஜேந்திர பாபு |
| 32. ட்ரிஃபினா பிளஸ்ஸி | திரு. பென்ஹர் ஒய். |
| 33. ரோஜ் பிரகாஷ லூத்தர் | அருட்திரு. பிரசாந்த் மீசலா |
| 34. சின்நெய்ஹோய் கிப்ஜென் | திரு. தோங்கோ லுன் கிப்ஜென் |
| 35. ஜெட் ஜே. வில்லியம் | திரு. செல்வகுமார் |

### 12–ஆம் வகுப்பு

| பிள்ளையின் பெயர் | தந்தையின் பெயர் |
|---|---|
| 1. லெமுலா சாட்சி | அருட்திரு. விஜய் பிரசன்னா ஐசக் |
| 2. ஜாஸ்பர் ஜேசுதாஸன் | திரு. சாலமோன் ஜெபராஜ் |
| 3. ஜினோ எபனேசர் சாம் | அருட்திரு. ஜாண்குமார் |
| 4. ஜாண் வொய்ஸ்பெல் | அருட்திரு. கிங்ஸ்லி ஜி. |
| 5. சேனா பென்னி சாம் | அருட்திரு. சிபி செல்வின் சாம் |
| 6. ஜெரேமியா பிரெய்னார்ட் | திரு. பெஞ்சமின் பி. |
| 7. இவான்ஸ் டேவிட் ஜாண் | திரு. பால்ராஜ் ஆபிரகாம் |
| 8. டேவிட்சன் மகாபத்ரா | அருட்திரு. ஜீவன் ரஞ்சன் மகாபத்ரா |
| 9. ரஷ்மி தீப் சிங் | அருட்திரு. வினோத் குமார் சிங் |
| 10. ஜோனத்தான் லிவிங்ஸ்டன் | திரு. கிறிஸ்டோபர் பி.ஜி |
| 11. ஸ்டெய்ன்ஸ் ஜெயராஜ் | அருட்திரு. எட்வின் செல்வராஜ் |
| 12. டேவிட் ஆஷிஷ் | அருட்திரு. டேவிட்சன் ராஜாசிங் |
| 13. ஜட்சன் சாமுவேல் ராஜ் | அருட்திரு. செல்லத்துரை ஜே. |
| 14. ரோனால்ட் ஃபிராங்க்ளின் | திரு. அஜய் குமார் லிமா |
| 15. ஜாண் டைட்டஸ் | திரு. ஜாண் ஆண்ட்ரூஸ் சுகிர்தராஜ் |
| 16. சோனா சுகந்தி | அருட்திரு. கோல்டன் இன்பராஜ் |
| 17. சூசன்னா | அருட்திரு. பட்டேல் தேவுபாய் |
| 18. ரஷ்மி நிர்மல் | அருட்திரு. ரமேஷ்வர் தயாள் நிர்மல் |
| 19. பொன்சிகா பிரின்ஸஸ் | திரு. வில்சன் டி. |
| 20. ஆதித்தி தாண்டி | அருட்திரு. சித்தரஞ்சன் தாண்டி |
| 21. எலியேசர் ஜெபா விஜய்சிங் | திரு. சுகந்தோ குமார் சிங் |
| 22. கரோலின் | திரு. கம்லேஷ் சிங்காபாய் |
| 23. ஜேம்ஸ் டைட்டஸ் | அருட்திரு. பிபாபா பானி |
| 24. ஜிம் ஜே. கார்ல்சன் | திரு ஜெயசேகர் பி.டி |
| 25. கம்லேஷ் மோசஸ் பாய்க் | அருட்திரு. குணா சந்திர பாய்க் |
| 26. சாமுவேல் ராக்லாண்ட் | அருட்திரு. மேத்யூ கே. |
| 27. ரிச்சா முஷாஹரி | அருட்திரு. பிரதீப் முஷாஹரி |
| 28. எபனேசர் | அருட்திரு. வாவச்சன் எம்.பி |
| 29. ஜெஸி கே. பாபு | அருட்திரு. பாபு பி. |

### ஜெபக்குறிப்புகள்:

1. ஊழியர்களின் பிள்ளைகளுக்குத் தேவையான ஞானத்தை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.
2. இயற்கை சூழ்நிலையால் ஏற்படும் எல்லா வியாதிகளிலுமிருந்து பிள்ளைகளை தேவன் காக்க ஜெபிப்போம்.
3. ஒவ்வொருவரின் எதிர்காலக் கனவுகள் நிறைவேற ஜெபிப்போம்.
4. தேர்வுக்கு ஆயத்தமாக இவர்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
5. பெற்றோரைவிட்டு விடுதியில் இருப்பதால் எந்தவித சோர்வுக்குள்ளாகாதபடி தேவன் இவர்களை பெலப்படுத்த ஜெபிப்போம்.
6. இவர்களைப்போலவே தேர்வு எழுதப்போகும் நம் ஜெபக்குழு அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிப்போம்.

- KTM

# இமைப்பொழுது விண்ணப்பம்:

1. உலகத்தையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் மூலம் பரவும் நோயிலிருந்து மக்கள் பாதுக்கப்படவும், தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படவும், தேவன் பாதிக்கப்பட்டோருக்கு விடுதலை கொடுக்கவும் ஜெபிப்போம்.

2.10ம் வகுப்பு மற்றும் 12ம் தேர்வுகளை சந்திக்கிற மாணவர்களுக்காய் ஜெபிப்போம். எந்தவித தவறான முடிவுகளை எந்த மாணவர்களும் எடுக்காதப்படிக்கும், எவ்வித பயமுமின்றி தேர்வுகளை நல்ல முறையில் எழுதவும், ஞானத்தில் குறைவுள்ள பிள்ளைகள் தேவனிடத்திலிருந்து ஞானத்தை பெற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.

3. அரசு வேலைகளுக்கு தேர்வு செய்வதில் காணப்படும் லஞ்சம் போன்ற காரியங்கள் இல்லாமல் நேர்மையாக நடைபெறவும், ஊழல் முற்றிலுமாக ஒழிக்கப்படவும் ஜெபிப்போம்.

4. மார்ச் 4 தேசிய பாதுகாப்பு தினம் மக்களின் பாதுகாப்பு, ஆரோக்கிய பாதுகாப்பு, வேலை ஸ்தல பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவும், மக்களின் விழிப்பு ணர்விற்காகவும் ஜெபிப்போம்.

5. இந்தியாவில் 1.7 மில்லியன் மக்கள் தெரு ஓரங்களில் வசித்து வருகின்றனர்.வெயில் மற்றும் குளிரால் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.இவர்களுக்கு உறைவிடம் கிடைக்க ஜெபிப்போம்.

6. இந்தியாவில் ஒரு நாளைக்கு 80 கொலைகளும் 91 பலாத்கார வழக்குகளும் பதிவாவதாக புள்ளி விபரம் கூறுகிறது. இந்நிலை மாற ஜெபிப்போம்.

7.அநேக விதமான விபத்துக்கள் இரவு நேரங்களில் நடைபெறுகின்றன. கவன குறைவாகவும், குடித்து விட்டு வாகனம் ஓட்டுவதால் இது போன்ற விபத்துக்கள் ஏற்படுகிறது. மக்கள் ஞானமாய் செயல்பட ஜெபிப்போம்.

8. மார்ச் 8ம் நாள் பெண்கள் தினமாக கொண்டாடப்படுகிறது. பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறை சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், வேதம் கூறுகிறபடி பெண்கள் தங்களை காத்துக் கொள்ளவும் ஜெபிப்போம்.

9.இந்திய பொருளாதார மந்தநிலை சீரடையவும் அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு அடையாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

10.தேசத்தில் சுமார் 10 கோடி முதியோர்கள் வாழ்கின்றனர். இவர்கள் மதிக்கப்படவும், பராமரிக்கப்படவும் ஜெபிப்போம்.

11. போதகர்கள், ஊழியர்கள், சுவிசேஷகர்கள், மிஷெனரி என்று பல்வேறு முறைகளில் ஊழியம் செய்கிற ஒவ்வொரு பிள்ளைகளுக்காகவும், அவர்கள் செய்கிற பணியை உண்மையும், உத்தமுமாய் செய்ய ஜெபிப்போம்.

12.லெந்து காலங்களில் இயேசு கிறிஸ்து நமக்காக பாடுபட்டதை நினைத்து அவருக்கு நன்றி செலுத்தவும், அவர் வாழ்ந்து காட்டிய வழியில் நாமும் வாழ்வதற்கு தேவன் நம்மீது இரக்கம் பாராட்ட ஜெபிப்போம்.

13.தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாய் அஞ்சனம் பார்ப்பது, குறிகேட்பது போன்ற காரியங்களில் ஈடுபடுகிற மக்கள் அதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

14. சிறைச்சாலையில் கைதிகளாக காணப்படும் மக்களுக்காக ஜெபிப்போம். அவர்கள் வெளியே வரும்போது நல்ல ஒழுக்கமுள்ளவர்களாகவும், அவர்கள் மத்தியில் செய்யப்படும் ஊழியங்கள் மூலம் அவர்கள் தேவனை அறிந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

15. தீவிபத்துகளின் மூலம் அநேகம் பேர்மரித்துபோகிற நிலைமை கள் இன்றைய நாட்களில் காணப்படுகிறது.கட்டிடங்களில் தேவையான பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவும், மக்களும் தீய பழக்கவழக்கங்களை ஓட்டல்களில் பின்பற்றாமல் இருக்கவும் ஜெபிப்போம்.

16.ஆணவ கொலைகள், சாதி பிரச்சனைகள் நம் நாட்டில் அநேக இடங்களில் காணப்படுகிறது.அநேக கொடிய சம்பவங்கள் இதன் மூலம் நடைபெறுகிறது.இந்த நிலைமை மாற ஜெபிப்போம்.

17. தவறான கருத்துக்கள் மற்றும் பழக்க வழக்கங்களை சீரியல்கள் மற்றும் படங்களின் மூலமாக காண்பிப்பதின் மூலம் அநேக சிறுவர்கள் மற்றும் வாலிப பிள்ளைகள் தவறான வழிக்கு செல்கிறார்கள். இதற்காக ஜெபிப்போம்.

18.குடும்பமாக தற்கொலை செய்து கொள்கிறவர்கள் இன்றைய நாட்களில் பெருகி கொண்டிருக்கிறார்கள்.இப்படிபட்ட செயல்கள் நடைபெறாமல் இருக்கவும், எல்லா கடினமான சூழ்நிலைகளும் கண்டிப்பாக மாறும் என்ற மன உறுதியோடு மக்கள் வாழவும் ஜெபிப்போம்.

19. தனியாக தூர இடங்களில் பணிபுரியும் இளம் வாலிப பிள்ளைகள் அதிகமான மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். இவர்களுக்காக ஜெபிப்போம்.

20.அநேக மிஷெனரி குழுக்கள் இன்றைய நாட்களில் செயல்படுகிறது. அவைகளின் பண தேவைகள் சந்திக்கப்படவும், ஜெபக்குழுக்களில் அநேகர் கலந்து கொள்ளவும், சுவிசேஷம் வேகமாக பரவவும் ஜெபிப்போம்.

21.கிறிஸ்தவர்கள் பிறரிடம் அன்பு செலுத்த அழைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து முதலாவது தேவனிடமும், பின்பு நம் அயலாரிடமும் அன்பு செலுத்தும் மனநிலையை பெற வேண்டி ஜெபிப்போம்.

22.உடலில் ஊனத்தோடு காணப்படுகிற பிள்ளைகளுக்காய் ஜெபிப்போம். அரசின் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் இவர்களுக்கு சரியாய் கிடைக்க ஜெபிப்போம்.

23.பட்டாசு தொழிற்சாலை, ரப்பர் தொழிற்சாலை, கட்டிட வேலை மற்றும் பல இடங்களில் கடினமான வேலைகளை செய்கிறவர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

24.வாலிப பிள்ளைகள் படிக்கிற காலங்களில் தவறான பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதால் பிற்காலங்களில் அதிக மாக பாதிக்கப்படுகின்றனர். வாலிபர்கள் இதை புரிந்து ஞான மாய் வாழ ஜெபிப்போம்.

25.இணையத்தளங்களின் மூலமாக இன்று ஏராளமான பேர் ஏமாற்றப்படுகின்றனர். பொய்யானவற்றை நம்பி ஏமாந்து போகாதபடி மக்கள் ஞானமாய் வாழ ஜெபிப்போம்.

26அநேக சிறுவயது குழந்தைகள் மற்றும் பெண்கள் தைராய்டு மற்றும் கருப்பை கோளாறுகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பிற்காலங்களில் அநேக விதமான இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். தேவன் ஒவ்வொருவருக்கும் நல்ல சுகத்தை கொடுக்கும் படியாய் ஜெபிப்போம்.

27. வேதாமத்தை அறியாத பிள்ளைகளுக்கு வேதாமத்தை வினியோகிக்கிற பிள்ளைகளுக்காய் ஜெபிப்போம்.அதை வாசித்து மெய்யான தெய்வம் இயேசு என்பதை அவர்கள் அறிந்து கொள்ள ஜெபிப்போம்.

28. பணவசதி படைத்தவர்களுடைய பிள்ளைகள் துணிகர மாய், பணம் நம்மை காப்பாற்றும் என்று எந்த தவறையும் செய்கிறார்கள்.இப்படிப்பட்ட மனநிலை அந்த பிள்ளைளை விட்டு மாற ஜெபிப்போம்.

29.வேதாகமம் இந்தியாவில் உள்ள எழுத்து வடிவம் உள்ள எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட ஜெபிப்போம்.

30.இந்திய தேச மக்களின் இரட்சிப்பிற்காய் ஜெபிப்போம்.

சகோதரி. வின்சி மெர்வின்



## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# தென் இந்திய விரிவாக்கபிரிவு

**தென் இந்திய விரிவாக்கபிரிவு செயலர் – திரு. கில்பர்ட் வில்லியம்ஸ் & திருமதி. ஸ்டெல்லாராணி**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முன்னேற்ற பணி ஊழியங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. சபைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் உதவி செய்து சுவிசேஷம் சொல்லப்பட்டிராத மக்களின் நிலைக்குறித்தும் அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தும் பணியை செய்து–வருகிறது. இதன் மூலம் தனி ஜெபங்களில் ஜெபிக்கவும், குழுவாக சபையாக கூடி திறப்பில் நிற்கவும், ஊழியம்செய்துவரும்ஊழியர்களை பொருளாதார உதவியினால் தாங்கவும் இளைஞர்களை முழுநேர பணியாளர்களாக இணைவதற்கும் ஊக்கப்படுத்தும் பணிகளை முன்னேற்றப்பணி ஊழியர்கள் செய்து வருகிறார்கள். இதன் மூலம் நம் இயக்கத்தின் பணிகள் விரிவடையவும் ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்படவும் கர்த்தர் கிருபை செய்து வருகிறார்.

இந்தமாதம் தென்னிந்திய முன்னேற்றப்பணி ஊழியங்களான கேரளா, கர்நாடகா, ஆத்திரா, தெலுங்கானா மாநிலங்களில் 24 முழு நேர பணியாளர்களின் குடும்பங்கள் மற்றும் 48 கௌரவ செயலர்கள் இவர்களுடன் அநேக ஜெபக்குழுத் தலைவர்களின் உதவியுடன் நடைபெற்று வருகிறது. இவ்வூழியங்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ள அனைவருக்காகவும் உங்கள் ஜெபம் அதிகம் தேவை.

### கேரளா மாநிலம்

மண்டல ஆலோசகர் – திரு. ஐசாயா & திருமதி. பரிமளம்
மண்டல செயலர் – திரு. தாமஸ் மேத்யூ & திருமதி. சூசன்
தென் கேரள பிராந்திய செயலர்(மாவேலிக்கரா) – திரு. ஸ்டான்லி ஜார்ஜ் & திருமதி. கிரேஸ்
பாரசாலா முன்னேற்றப்பணி செயலர் – திரு. சைரஸ் சாமுவேல் & திருமதி. எப்சிபா
திருவனந்தபுரம் முன்னேற்றபணி செயலர் – திரு. ராபி & திருமதி. இவாஞ்சலின் ஜெமி
மத்திய கேரள பிராந்திய செயலர் (கோட்டயம்) – திரு. ஆபிரகாம் தாமஸ் & திருமதி. சௌமியா
வட கேரள பிராந்திய செயலர் (எர்ணாகுளம்) – திரு. வாவச்சன் & திருமதி. லிசி
மலபார் பிராந்திய செயலர் (பாலக்காடு) – திரு. கோல்டன் & திரு. லீகேர்ள்
இவர்களுடன் இணைந்து 18 கௌரவ செயலர்கள் ஊழியத்தில் உதவி செய்து வருகின்றனர்.

### கர்நாடக மாநிலம்

பிராந்திய செயலர் (மங்களூர்) – திரு. இளங்கோவன் & திருமதி. ஏஞ்சலின் வசந்தி
வடக்கு பெங்களூர் – திரு. ஆனந்த் ஆசீர் & திருமதி. செல்வமதி
தெற்கு பெங்களூர் – திரு. மாணிக்கம் & திருமதி. வயலா
பெங்களூர் மலையாளம் & வாலிபர் ஊழியம் – திரு. மனோஜ் & திருமதி. ஜோதி
பெங்களூர் கன்னட ஊழியம் – திரு. ராஜா & திருமதி. சுனந்தா
பங்காருப்பேட்டை & கே.ஜி.எப் – திரு. ராபர்ட் ராஜலிங்கம் & திருமதி. குளோரி
ஹூப்ளி – திரு. டேனியேல் விஜயராஜ் & திருமதி இந்திரம்மா

### ஆந்திர மாநிலம்:

பிராந்திய செயலர் (விசாகப்பட்டிணம்) – திரு. பிரசாத் & திருமதி. ஜெசிந்தா
எலூரு முன்னேற்றப்பணி செயலர் – திரு. கே. இஸ்ரேல் & திருமதி. உத்தமஸ்ரீ
நந்தியால் முன்னேற்றப்பணி செயலர் – திரு. கே.கே. இஸ்ரேல்
ராஜமுந்திரி முன்னேற்றப்பணி செயலர் – திரு. டைட்டஸ் & திருமதி. மோகனா
குண்ட்டூர் முன்னேற்றப்பணி செயலர் – திரு. ராஜேஷ் & திருமதி. பியூலா
நெல்லூர் முன்னேற்றப்பணி செயலர் – திரு. ஜாண் ஸ்டீபன் & திருமதி. ஜோதி
சித்தூர் முன்னேற்றப்பணி செயலர் – திரு. தெய்வநாயகம் & திருமதி. செல்வி
இவர்களுடன் 7 கௌரவ செயலர்கள் இணைந்து ஊழியத்தில் உதவி செய்து வருகின்றனர்.

### தெலுங்கானா மாநிலம்:

பிராந்திய செயலர் – திரு. எபி ஞான செலின் & திரு. ஜெனிலா
இவர்களுடன் 23 கௌரவ செயலர்கள் இணைந்து ஊழியத்தில் உதவி செய்து வருகின்றனர்.

**2020-2021ம் ஆண்டின் ஊழியத்திட்டங்களுக்காக ஜெபியுங்கள்:**

166 புதிய ஜெபக்குழுக்கள் – 2030 புதிய அங்கத்தினர்கள்
106 புதிய தலைவர்கள் – 206 மினெரி தாங்கும் குடும்பங்கள்
425 சிறுவர் தாங்கும் குடும்பங்கள் – 36 குழுக்களின் பணித்தள விஜயங்கள்
67 வாலிபர்கள் முழுநேரப்பணியில் இணைய

## ஜெபியுங்கள்:

1. முழுநேர ஊழியர்கள், கௌரவ முன்னேற்ற பணி செயலர்கள் மற்றும் தலைவர்களின் சரீர சுகம் மற்றும் பெலலுக்காக மற்றும் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து செயல்பட இவர்களின் பிள்ளைகளும் நமது ஊழியத்தில் ஆர்வமுடன் ஈடுபட...
2. சபைகள் மிஷினரிப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட...
3. நடத்த திட்டமிட்டுள்ள அனைத்து கூட்டங்களும் சிறப்பாக நடைபெ, நல்ல விளைவுகள் ஏற்பட..
4. மலையாளம் தெலுங்கு கன்னட மொழிகளில் நமது மாதாந்திர பத்திரிகைகள் தடையில்லாமல் வெளிவர...
5. அக்டோபர் 2020 நடைபெறவுள்ள கர்நாடகா மாநில முகாமின் ஆசீர்வாதங்களுக்காக...
6. ஆந்திர மாநில முகாம் நடத்த நல்ல இடம் கிடைக்க, ஆசீர்வாதமாக நடைபெற ஜெபிப்போம்.

திரு. கில்பர்ட் வில்லியம்ஸ்

அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணபப்படுகிறீர்கள். உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் (மத் 23:8).

மோசேயின் சட்டம் 3500 வருடங்களுக்கு முன்பே லஞ்ச ஊழலை கண்டனம் செய்தது. அப்போதிருந்தே லஞ்ச ஒழிப்பு சட்டங்களும் ஏராளமாக ஏட்டில் ஏறியிருக்கின்றன. ஆனால் லஞ்ச ஊழலோ இந்த சட்டங்களால் அணைப் போட்டு தடுக்க முடியாத பெருவெள்ளமாக பெருக்கெடுத்து வருகிறது. ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கில் லஞ்சம் கைமாறிக் கோண்டே போகிறது. அதனால் கோடிக்ககணக்கானோர் அவதிப்படுகிறார்கள்.

பரீட்சையில் பாஸாக வேண்டுமா? டிரைவிங் லைசன்ஸ் வேண்டுமா? கோர்ட்டில் கேஸ் ஜெயிக்க வேண்டுமா? கவலையே வேண்டாம். சரியான ஆளை நன்றாக கவனித்தால் போதும். நினைத்தபடியே காரியம் கைகூடும். லஞ்சஊழல் எங்கும் காணப்படும் தூய்மை கேடு போன்றது. கடந்த பத்தாண்டுகளில் மாறுபட்ட முதாலாளித்துவம் அதாவது வேண்டியவர்களுக்கு மாத்திரமே சலுகையளிக்கபடுவது. ஊழல் நிறைந்த வியாபார பழக்கங்கள், நாட்டின் பொருளாதாரம் மூழ்கியதற்கு காரணமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட ஊழலாலும் அதனால் ஏற்படும் பொருளாதார சீரழிவாலும், பெருமளவில் பாதிக்கப்படுவோர் ஏழை எளியவர்களே, தேர்தலில் ஊழல், மருத்துவத்தில் ஊழல், விவசாயத்தில் ஊழல், சத்துணவில் ஊழல், வருமான வரி ஊழல், கனிம வளங்களில் ஊழல், இராணுவத்தில் ஊழல், காவல்துறையில் ஊழல், நிவாரண தொகையில் ஊழல், பிறப்பு சான்றுக்கும் ஊழல், இறப்பு சான்று வாங்கவும் ஊழல், இப்படி இந்தி யாவில் ஊழல் வளர்க்கப்படுவதோடு பல காரணங்கள் இருப்பதாக உலகின் மிகப்பெரிய தணிக்கை மற்றும் குணக்கம் நிறுவனங்களில் ஒன்றான KKMG அதன் அறிக்கையில் குறிப்பிடுகிறது. இதற்கு நாட்டில் காணப்படும் அதிக வரிகளும், மிக அதிக அதிகாரத்து கோட்பாடுகளும் முக்கிய காரணங்கள் ஆகும். சில சமயங்களில் அதிக வரி கட்டுவதற்கு பதிலாக ஊழல்களுக்கு லஞ்சம் கொடுப்பது மிகவும் மலிவாக இருக்கிறது. இது இந்தியாவில் மட்டுமல்ல உலகில் 150 நாடுகளில் ஊழலுக்கான மிகப்பெரிய காரணம் இதுவே ஆகும். உயர்மட்ட ஊழல் மற்றும் மோசடி இப்போது நாட்டின் நம்பத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை தகர்க்க அச்சுறுத்துகிறது. துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது. (பிரசங் 8:11)

தமிழகத்தில் 62%பேர் அரசு அலுவலகங்களில் லஞ்சம் கொடுத்தே தேவையான சேவைகளை பெறுவதாக அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் 20 மாநிலங்களில் நடத்தப்பட்ட லஞ்ச ஊழல் தொடர்பான ஆய்வின் முடிவில் ஊழல் அதிகம் உள்ள மாநிலத்தில் ராஜஸ்தான் முதல் இடத்திலும், இதற்கு அடுத்தடுத்த இடங்களில் பீஹார், உத்திரப்பிரதேசம், ஜார்கண்ட் மாநிலங்களும் இடம் பிடித்துள்ளன. தமிழகம் 6வது இடத்திலும் லஞ்சம் குறைவாக உள்ள மாநிலமாக கேரளாவும் காணப்படுகிறது. நிலம் மற்றும் கட்டுமான பணிகளுக்காக 41%பேரும், நகராட்சி நிர்வாக பணிகளில் காரியம் ஆவதற்காக 19%பேரும், காவல் துறைக்கு 15% பேரும் லஞ்சம் அளித்துள்ளனர். மற்ற மாநிலங்களில் லஞ்சம் வாங்குவது குறைந்து வரும் நிலையில் தமிழகத்தில் கடந்த ஆண்டைவிட 10% லஞ்சம் பெறுவோர் எண்ணிக்கை கூடியுள்ளது. அந்நிலை மாற ஜெபிக்க வேண்டும்.

இரண்டு பலமான சக்திகள் ஊழல் என்ற உலைக்கு தீமூட்டுகின்றன. சுயநலமும், பேராசையுமே அந்த சக்திகள். ஊழல் செய்பவர்கள். தங்களுடைய தவறால் மற்றவர்கள் பாதிக்கப்படுவதைக் குறித்து கடுகளவும், கவலை படுவதில்லை. காரணம் சுயநலம், பேராசை இணைந்து இவை திருச்சபைகளில் நுழைந்து விட்டது. மாற்றங்களை நம்மிடத் தொடங்குவோம்! நாளை மாறும் என நம்புவோம்! இப்போது ஜெபிப்போம்.



# எங்கும் எதிலும் லஞ்சம்

## ஜெபிக்க:

1. லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மனப்போக்கு மக்களுக்கு உண்டாக
2. கண்களுக்கு எதிரே தவறு நடக்கும் போது, தட்டி கேட்டு உரிமைக்காக குரல் கொடுக்கும் தைரியம் அனைவரும் பெற ஜெபிப்போம்.
3. தேசத்தில் காணப்படும் லஞ்ச மற்றும் ஊழல் வாதிகள் அடையாளப்படுத்தப்பட ஜெபிப்போம்.
4. ஊழல்வாதிகளுக்கு கடுமையான அபராதம், சொத்துகள் பறிமுதல் போன்ற கடுமையான சட்டங்கள் செயல்படுத்தபட ஜெபிப்போம்.
5. அதிகப்படியான வரி மற்றும் அதிகாரணங்கள் எளிமை படுத்தப்பட ஜெபிப்போம்.
6. அடிப்படை தேவைகளை பெற கூட லஞ்சம் கொடுக்க வேண்டிய சூழல் மறைய
7. சுயநலம், பேராசை போன்ற தீய சக்திகளை தேசத்தை விட்டு தேவன் துரத்த ஜெபிப்போம்.
8. அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் லஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடாது நேர்மையாய் தங்கள் கடமைகளை செய்ய முன்வர ஜெபிப்போம்.
8. சமூகத்தை சீரழிக்கிற பொருளாசை எனும் தீமையிலிருந்து அனைவரும் விடுப்பட ஜெபிப்போம்.
9. லஞ்சம் ஊழலை தேசத்திலிருந்து முற்றிலுமாய் ஒழிப்பதற்கு ஏற்ற நிலையில் சட்டங்களும் நிர்வாக முறைமைகளும் தொழில் நுட்ப யுக்திகளும் செயல்படுத்தப்பட
10. இப்படிப்பட்ட லஞ்சங்களை கொடுக்க முடியாமல் தங்களுடைய படிப்பு மற்றும் வேலைகள், அடிப்படை தேவைகளை இழந்து நிற்கும் ஏழை எளியவர்களின் நிலை மாற ஜெபப்போம்.

-Mrs.Angel



## மாதம் ஒரு மக்கள் கூட்டம்

# மால்டோ

## மாதம் ஒரு மொழி

# மால்டோ

இந்தியாவின் கிழக்கு பகுதியிலிலுள்ள ராஜ்மஹால் மலைதொடர்களில் மால்டோ இனமக்கள் வாழ்கின்றனர்.இவர்களின் மக்கள் தொகை 10 லட்சத்திற்கும் அதிகமாக இருந்தது. ஆனால் கொள்ளை நோய்களான கலாஜார்,மலேரியா போன்றவற்றால் இவர்கள் 1 லட்சம் மட்டுமே உள்ளனர்.இவர்கள் வனப்பகுதிகளில் கிடைக்கும் பொருட்களை சேகரித்து பட்டணங்களிலுள்ள வியாபாரிகளிடம் விற்கின்றனர்.பருவ காலங்களில் இவர்கள் சோளம் பயிரிடுகின்றனர்.இம்மக்கள் அரிசி உணவுடன் பன்றி மற்றும் மாட்டிறைச்சி உண்கின்றனர். இவர்கள் வீடுகள் வட்ட வடிவில் சன்னல்கள் இல்லாமல் கட்டப்படுகின்றன.இவர்கள் தங்கள் முன்னோர்களின் ஆவியை வணங்குகின்றனர். குடிப்பழக்கம் இவர்களிடையே அதிகமாக காணப்படுகிறது.அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மலைகளில் வசிக்கின்றனர்.சாலை வசதிகளின்றி மிகவும் பின் தங்கிய இடத்தில் இவர்கள் வசிப்பதால் இவர்களை யாரும் சந்திக்க முடியவில்லை.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு 1978-ல் இங்கு ஊழியம் செய்ய தொடங்கியதற்காக தேவனைத் துதிப்போம்.1983-ம் ஆண்டு வரை ஒரு ஆத்துமா கூட கிடைக்கவில்லை. நம் முதல் ஊழியரான திரு. ஜெயராஜ் மற்றும் அவரது மகன் டேவிட் லிவிங்ஸ்டன் காலாஜாரினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தனர். அந்த நேரம் வெள்ளை அங்கி தரித்த ஒரு இளைஞன் மலையில் அழுது கொண்டு செல்வதை மால்டோ இன மக்கள் கண்டனர். இதன் மூலம் அவர்கள் இயேசு கிறிஸ்துவை கண்டு கொண்டனர்.1984-லிருந்து கூட்டம் கூட்டமாக மால்டோ இனமக்கள் ஞானஸ்நானம் பெற்று வருகின்றனர்.இது வரை 53,000மால்டோ இனமக்கள் இயேசுவின் மந்தையில் இணைந்தனர். இம்மகா பெரிய திட்டத்தை நிறைவேற்ற நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மிக பெரிய விலைக்கிரயம் செலுத்தியுள்ளது. 1983-ல் திரு. ஜெயராஜ் மற்றும் அவரது மகன் லிவிங்ஸ்டன், 1992-ல் திரு.தேவதாஸ், 1994-ல் ஜிம்எலியட், 2003ல் மோக் மற்றும் 2004-ல் அனிதா ஆகியோர் கோதுமை மணிகளாக விதைக்கப்பட்டுள்ளனர். 2013-ல் மால்டோவிலுள்ள ஆலயங்கள் அனைத்து இணைக்கப்பட்டு பேராயமாக உருவானதற்காக தேவனைத் துதிப்போம்.

மொழி : மால்டோ – எழுத்து வடிவம்: உண்டு
இம்மொழி பேசும் மொத்த மக்கள் தொகை: 2,20,000
பேசப்படும் மாநிலங்கள் : ஜார்கண்ட், பீஹார், மேற்கு வங்காளம்
மொழிக் குடும்பம் : திராவிட மொழிக் குடும்பம்
வேதாகமம்: உண்டு (2001ம் ஆண்டு புதிய ஏற்பாடும்,2018ம் ஆண்டு பழைய ஏற்பாடும் நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் மூத்த ஊழியர் டாக்டர். ஜார்ஜ் எட்வர்ட் குடும்பம் மூலம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது)

**மொழி அறிமுகம்:**

திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள மொழியானதால் அநேக வார்த்தைகள் தமிழுக்கு ஒத்தியிருக்கிறது.எழுத்து வடிவம் இல்லாத நிலையில் அழிந்து போகும் நிலையிலிருந்த மொழிக்கு எழுத்து வடிவம் கொடுத்து, முதியோர் கல்வி திட்டம் மற்றும் சிறுவர்களுக்கான கல்வி முயற்சிகள் தொடர்ச்சியாய் செய்யப்பட்டதால் இம்மொழியை பேசுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்காய் தேவனைத் துதிப்போம்.

**மொழியை பேசும் மக்கள்:**

ஜார்கண்டிலுள்ள உயர்ந்த ராஜ்மஹால் மலைத்தொடரில் இம்மக்களில் பெரும்பான்மையோர் வசித்து வருவதால் “பஹாடியா” (மல் மக்கள்) என்று அழைக்கப்படுகின்றனர். கல்வியறிவிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். கல்வி நிலையங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் தொழிற்சாலைகளோ இல்லாத நிலையில், வேலை வாய்ப்புகளோ, அடிப்படை வசதிகளோ இன்றி பெரும்பாலான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

**இம்மொழி பேசும் மக்கள் மத்தியில் சுவிசேப்பணி:**

1981ம் ஆண்டு இவர்கள் மத்தியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலமாக சுவிசேஷப் பணி துவங்கப்பட்டு, உயிர்க்கொல்லி வியாதிகளான மலேரியா, காலரா, காலஜர் மற்றும் காசநோய் போன்ற வியாதிகளினாலும், மூட நம்பிக்கை, அறியாமை மற்றும் அசுத்த ஆவியின் ஆதிக்கத்தினால் அலைக்கழிக்கப்பட்டுஅழிந்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மறுமலர்ச்சி பெற்று புதுவாழ்வுக்குள்ளாக வழிநடத்தப்பட்டனர்.

**துதிப்போம்:**

- ❖ இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட 60,000-க்கும் அதிகமான மால்டோ மொழி பேசும் மக்களுக்காக தேவனைத் துதிப்போம்.600-க்கும் அதிகமான மால்டோ சபைகளுக்காக, திருச்சபை தலைவர்களுக்காக, போதகர்களுக்காக மற்றும் இந்திய சுவிசேஷ திருச்சபை பேராயத்திற்காக தேவனைத் துதிப்போம்.
- ❖ நம் ஊழியத்தின் மூலம் விவசாய பயிற்சி, கால்நடை பண்ணை மற்றும் சமுதாய கல்லூரி தொடங்கப்பட்டதற்காகவும், விசுவாசிகளுக்கு கைத்தொழில் கற்றுக்கொடுக்க பயிற்சி மையம் அமைக்கப்பட்டதற்காகவும், இவ்வின மக்களுக்கென்று ஆரம்பப்பள்ளி மற்றும் ஆங்கில போதனா வழி பள்ளி கட்டப்பட்டுள்ளதற்காகவும் இவையனைத்தின் மூலம் இவர்களின் வாழ்க்கை தரம் உயர்வதற்காகவும் தேவனை துதிப்போம்.

**ஜெபிப்போம்:**

- சிறுவர், வாலிபர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
- இம்மக்கள் மத்தியில் காணப்படும் கொடிய கொள்ளை நோய்களான கலாஜார் மற்றும் மலேரியா போன்றவை அழிக்க
- மால்டோ இன தலைவர்களால் ஆலயங்கள் முறையாக செயல்படுத்தப்பட ஜெபிப்போம்.
- மால்டோ இன மக்கள் சமுதாயத்தில் எல்லா துறைகளிலும் முன்னேறி தேவனை மகிமைப்படுத்த ஜெபிப்போம்.
- தேவனுடைய பெரிதான இரக்கத்தால் முழுமையாக ஒழிக்கப்பட ஜெபிப்போம்.
- இம்மக்களின பொருளாதார நிலைமை மேம்படவேண்டி ஜெபிப்போம். மால்டோ இன விசுவாசிகள் தங்கள் சாட்சியுள்ள வாழ்க்கையின் மூலம் எஞ்சியிருக்கும் மால்டோ இன மக்களை இயேசுவின் மந்தையில் இணைக்க ஜெபிப்போம்.
- நம் இயக்கத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சமுதாய மற்றும் பொருளாதார திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த நம் ஊழியர்களுக்கு தேவன் ஞானம் அருள ஜெபிப்போம்.

- Sis. Sheela Mary



# குழந்தை திருமணம்

புத்தகம் சுமக்க வேண்டிய வயதில் குழந்தைகளைச் சுமக்கும் தாயாக பெண் குழந்தைகள் மாறுவது வேதனைக்குரியது. இதனால் பெண் குழந்தைகளின் கனவு சிதைக்கப்படுகிறது. உலகில் பெண் குழந்தைகள் திருமணம் அதிகம் நடக்கும் 10 நாடுகளில் இந்தியாவும், ஒரு நாடு என்கிறது உலக சுகாதார நிறுவனம். உலகில் 70 கோடி பெண் குழந்தை திருமணம் நடக்கிறது. அதில் 33% பங்களிப்பை இந்தியா தருகிறது என்கிறது யுனிசெப்.

<u>சட்டம் என்ன சொல்கிறது?</u>

குழந்தை திருமண தடுப்புச் சட்டம், சிறப்பு திருமண சட்டம், இந்து திருமண சட்டம், பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், முஸ்லீம் திருமண சட்டம் என எல்லா சட்டங்களிலும் திருமணம் செய்து கொள்ள குறைந்த பட்சமாக ஆணுக்கு 21 வயதும், பெண்ணுக்கு 18 வயதும் இருக்க வேண்டுமென கூறுகிறது. ஆனால் ஆணாதிக்கமும், கலாச்சார நடைமுறை என்ற பெயரில் நடக்கும் பழமைவாத செயல்பாடுகளும் இன்னும் குழந்தை திருமணங்கள் தொடர்வதற்கான காரணமாக உள்ளன.

<u>இரண்டாவது இடத்தில் தமிழகம்:</u>

உலக சுகாதார அமைப்பு குழந்தை திருமணம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் உலகளவில் 11% குழந்தைகளுக்கு திருமணம் நடக்கிறது. அதில் 17% தமிழகத்தில் நடக்கிறது. தேசிய குடும்ப நலத்துறையின் 2011-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 2.3 கோடி பெண் குழந்தைகளுக்கு திருமணம் நடந்துள்ளது என்றும், நாட்டில் நடக்கும் திருமணத்தில் 26.8%, 18 வயது நிரம்பாத பெண் குழந்தைக்கு நடந்துள்ளது. தமிழகத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தேனி, திருப்பூர் மாவட்டங்களில் குழந்தை திருமணங்கள் அதிகளவில் நடக்கிறது.

தமிழகத்தில் நடக்கும் 82% குழந்தை திருமணங்கள் பெற்றோர் வற்புறுத்தலால் தான் நடைபெறுகிறது. அப்படி திருமணம் செய்து முடித்து வைக்கப்பட்ட பெண் 8ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர்களாக உள்ளனர். இதில் குழந்தை திருமணம் செய்தவர்களில் 17% பேர் தங்களது கணவரை இழந்து விதவைகளாக நிற்கின்றனர் என்று அதிர்ச்சியான புள்ளி விபரம் தெரிவிக்கிறது. அத்துடன் குழந்தை திருமணம் செய்த சிறுமிகள் பிரசவத்தின் போது, கடும் உடல் பாதிப்பு, உதிரப்போக்கு, குறைபிரசவம் போன்றவற்றால் ஏராளமானோர் உயிர் இழந்துள்ளனர்.

ஒரு குழந்தையே குழந்தையை பெற்று எடுப்பதால் 23% அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நோயால் பாதிக்கப்பட்டனர். தர்மபுரி மாவட்டத்தில் 2018 ஏப்ரல் முதல் 2019 மார்ச் வரை 280 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. சாதி, பொருளாதாரம், அந்தஸ்து என்ற பல நிலையில் சில குறிப்பிட்ட சமூகங்களை சேர்ந்த குழந்தைக்கு 16 வயதில் திருமணம் செய்து வைக்கும் நடைமுறை தமிழகத்தில் தொடர்கிறது. உறவு முறை விட்டுப் போய் விடக்கூடாது என்பதற்காக சிறுமிகளுக்கு அவர்களைவிட 2 மடங்கு வயது கூடிய ஆண்களுடன் திருமணம் செய்து வைக்கும் கொடூரம் நடக்கிறது.படித்துவிட்டு பெண்கள் என்ன செய்ய போகிறார்கள் என்ற கேள்வியும், வேறு சாதி ஆணுடன் திருமணம் செய்தால் குலப்பெருமை என்னாவது என்ற சிந்தனையும்தான் இத்தகைய கொடூரத்திற்கு காரணமாக உள்ளது.

நவீனம் நிறைந்த இந்த யுகத்தில் பெண் குழந்தையை எப்படி காப்பாற்றுவது என்று பெற்றோர்கள் பயத்தில் குழந்தை திருமணம் செய்து வைக்கின்றனர். இதனை தடுத்திட ஒவ்வொருவரும் பாடுபட வேண்டியது இன்றியமையாதது. கலாச்சாரத்திற்கு போராடும் இளம் தலைமுறையினர் குழந்தை திருமணம் தடுக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். வருங்காலத்தில் 0% குழந்தை திருமணம் என்ற அறிக்கையை காண கண்ணீருடன் தேவ பாதத்தில் முழங்கால் யுத்தம் செய்வோமா?

<u>துதிக்குறிப்பு:</u>

1.குழந்தை திருமண தடைச்சட்டம் கொண்டு வர போராடின ஒவ்வொருவருக்காய் தேவனை துதிப்போம்.

2.தமிழகத்தில் 2017-ல் மட்டும் 1636 குழந்தை திருமணம் தடுத்து நிறுத்தப்பட்டதற்காய் துதிப்போம்.

<u>ஜெபக்குறிப்பு:</u>

1. குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.
2. குழந்தை நல அமைப்புகள் நன்கு திட்டமிட்டு செயல்பட, பெண் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
3. இந்தியாவில் ராஜஸ்தான், பீஹார், ஜார்கண்ட், ஆந்திரா, தெலுங்கானா, மஹாராஷ்டிரா குஜராத் மாநிலங்களில் நடைபெறும் அதிகப்படியான குழந்தை திருமணங்கள் முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.
4.பெற்றோர் பெண் குழந்தையை பாரமாக எண்ணாமல், கல்வியை கொடுத்து வாழ்வில் முன்னேற வழிவகை செய்ய ஜெபிப்போம்.
5. பூப்பெய்து விட்டாலே பெண்களுக்கு திருமணம் செய்யலாம் என்ற பாகிஸ்தானின் தீர்ப்பு மாற்றப்பட ஜெபிப்போம்.
6.இந்தியாவில் பெண்ணின் திருமண வயது 16 என்று கொண்டு வர எடுக்கும் முயற்சிகள் தோல்வியடைய ஜெபிப்போம்.
7.புத்தகம் சுமக்கும் வயதில் குழந்தையை சுமக்கும் அவல நிலை மாற ஜெபிப்போம்.
8. குழந்தை திருமணம் செய்ய முயற்சி செய்யும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க ஜெபிப்போம்.
9.கிராமப்புறங்களில் பெண் குழந்தை திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட ஜெபிப்போம்.

- Ms.Hepzi Sheela



# மத்தியப் பிரதேசம்

| | | |
|---|---|---|
| மக்கள்தொகை | : | 7,26,20,809 |
| கிராமங்கள் | : | 23,043 |
| மக்கள் இனங்கள் | : | 46 வகையான பழங்குடியினர் |
| தலைநகர் | : | போபால் |
| மாவட்டங்கள் | : | 51 |
| முதலமைச்சர் | : | கமல்நாத் |
| மக்கள் கூட்டம் | : | கொற்கு, பீலி, கோண்ட் |
| பேசப்படும் மொழிகள் | : | ஹிந்தி, மராத்தி, பீலி, கொற்கு, கோண்டு |
| பொருளாதாரம் | : | கோதுமை. சோளம்,நெல், எண்ணை வித்துக்கள், வைர சுரங்கம், உர உற்பத்தி |

மத்தியப்பிரதேசம் பல்வேறுதரப்பட்ட ஜாதி மக்கள், பழங்குடியினர் மற்றும் வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்டதொரு மாநிலம ாகும். மத்திய பிரதேசத்தின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பெருவாரியாக பழங்குடி இன மக்கள் வசிக்கிறார்கள். இந்தியாவின் காடுகளின் பரப்பளவில் 12% இங்குள்ளது. உஜ்ஜையில் நடக்கும் கும்பமேளா, காஷ்சி புத்த ஸ்தூபி, கஜீரேகா சிலைகள் உலக அளவில் பிரசித்தம் பெற்றுள்ளன. ராணுவ ஆயுத தொழிற்சாலை இட்டார்சி, கட்னி, ஜபல்பூர் ஆகிய இடங்களில் உள்ளது.

45 லட்சம் மக்கள் வறுமையிலும், 12 லட்சம் மக்கள் அநீத வறுமையிலும் வாடுகிறார்கள். 40% குழந்தைகள் சரிவிகித உணவு இல்லா காரணத்தால் மிக குறைந்த எடை கொண்டுள்ளனர். அநேக கிராமங்களில் விவசாயிகள் சரியான வருமானம் இல்லாத காரணத்தால் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். மதமாற்ற தடைச்சட்டம் அமலிலுள்ளது. இங்கு திருச்சபைகள் மிகக் குறைந்த அளவிலும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் சொற்ப அளவிலும் காணப்படுகின்றனர்.எனவே மத்திய பிரதேசத்தி ற்காக விசேஷித்த அளவில் விண்ணப்பங்களை ஏறெடுப்பது அவசியமாகிறது.

இந்துக்கள் : 90.08%
முஸ்லீம் : 6.5 %
கிறிஸ்தவர்கள் 0.30%
மற்றவர்னிகள் 2.4%

**ஜெபக்குறிப்புகள்:**

1. மத்தியப்பிரதேச மாநிலத்தில் உள்ள மதமாற்ற தடைச்சட்டம் நீக்கப்பட....
2. சோனகிரி என்ற இடத்திலுள்ள நிர்வாண சாமியார்கள் இரட்சிக்கப்பட....
3. சுவிசேஷம் சொல்வதற்கு திறந்த வாசலை தேவன் கட்டளையிட....
4. பாவ்ரா மக்கள் மத்தியில் ஒரு எழுப்புதல் உண்டாக.....
5. இம்மாநிலத்தில் தீவிரமாக செயல்படும் சுவிசேஷ எதிர்ப்பு இயக்கங்களை தேவன் மட்டுப்படுத்த...
6. ஊழியர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்த....
7. திரளான மக்கள் மனந்திரும்ப....
8. ஊழியர்களின் பிரயாண பாதுகாப்பிற்காக, சரீர சுகத்திற்காக, பிள்ளைகளுக்காக...
9. ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்பட....
10. விசுவாசிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் மிஷனெரிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக...
11. மூடநம்பிக்கைகள், அறியாமை மற்றும் பாவக்கட்டிலிருந்து மக்கள் விடுதலை பெற...
12. சத்துருவினுடைய ஆதிக்கத்திலிருந்து ஜனங்கள் விடுதலை பெற
13. மதசார்பற்ற ஆட்சி அமைந்ததற்காக தேவனை துதித்து, கிராமங்கள் தோறும் சபைகள் எழும்ப, ஜனங்கள் மனந்திரும்ப....
14. திருச்சபைகளில் எழுப்புதல் ஏற்பட்டு இம்மாநிலத்தில் ஊழியங்கள் பெருக...
15. இம்மாநிலத்தில் உள்ள வறுமை ஒழியவும், பாவக்கட்டுகளிலிருந்து ஜனங்கள் விடுதலை பெறவும் ஜெபியுங்கள்.

**மத்தியப்பிரதேச மாநிலத்திலுள்ள ஊழியர்களின் பெயர்களை சொல்லி ஜெபிப்போம்: (மார்ச் 2019ன்படி)**

மறைதிரு. ராஜேந்திரபாபு
திருமதி. மாயா தேவி
செல்வி. எமிமாள்
திருமதி. பத்மாவதி நாயக்
திரு. சத்ய பிரகாஷ்
திருமதி. அஞ்சனா மஸி
திரு. கருணாகர் கர்டா
திருமதி. கீதாஞ்சலி பெஹ்ரா
திரு. குலாம் கிஸ்கு
திரு. தாமஸ் சோரன்
திரு. எஸ். ரவி
சகோதரி. ஷாரோன் ரோஸ்
திரு. பிஜய் மால்டோ
திரு. ஹெபல் குமார்
திருமதி. பினிடா மச்சோ ஹெபல்
திரு. பினிட் பிரசாத் பர்தன்
திருமதி. அமோஜிதா நாயக்
திரு. ஹேபல் ஹெம்ரோம்
திரு. ஓம்பிரகாஷ்
திருமதி. சப்னா
திரு. கோன்கா கிரிபாபு
திருமதி. லூர்து மேரி
திரு. எம். வினு
திருமதி. சுபிலா
திரு. சாமுவேல் மராண்டி
மறைதிரு. வசாவா பான்சிங்
திருமதி. ஏமன் பான்சிங்
திரு. டி. வில்சன்
திருமதி. ரஷ்மிதா பரிடா
திரு. வெங்கடேஷ் வாடார்
திருமதி. ஷீபா
திரு. டி. டேனியேல் மார்வல்ராஜ்
திருமதி. ஜெபசீலி

இன்னும் புதிதாக இணைக்கப்பட்ட ஊழியர்களுக்காகவும் ஜெபிப்போம்

- PREM

# பக்தி வைராக்கியம்

கிறிஸ்தவர்கள் மத்தியில் பக்தி வைராக்கியம் குறைந்து, மத வைராக்கியம் அதிகரித்து கொண்டே வருகிறதை நம்மால் உணர முடிகிறது.பக்தி என்பது மதத்தையோ,ஆலயத்தையோ மையமாக வையாமல் கிறிஸ்துவையும் அவரின் பரிசுத்தத்தையும் மையமாகவே கொண்டு இருக்க வேண்டும்.அநேகருடைய பெயருக்கு முன்பதாக Rev.Dr என போட்டுக்கொள்ள விரும்புவோர்,Saint,பரிசுத்தன் என்ற வார்த்தையை பெயருக்கு முன்னால் பயன்படுத்த பயப்படுகிறோம்.நமது ஆண்டவர் பரிசுத்தர்.ஆகவே நாமும் அவரைப்போலவே பரிசுத்தமாக இருக்க அழைக்கப்படுகிறோம்.அப்படி பரிசுத்த வைராக்கியமாய் இருப்பதால் வரும் ஆசீர்வாதங்களை,எண்ணாமத்தில் பினேகாஸ் வாழ்விலிருந்து கற்றுக்கொள்வோம்.

எண்ணாகமம் 21:1-31 வரை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானானை சென்றடைய தேவன் கொடுத்த 2ம் அணுகுமுறையின் படி எல்லோரும் சீத்திம்மிலே தங்கியிருக்கும் போது நடந்த சம்பவம் நமக்கு,இன்றும் பக்தி ரைாக்கியத்தை அதிகரிக்க செய்யும்.சாத்தானின் சதிகளில் இதுவும் ஒன்று. 3 விஷயங்களில் ஆண்டவருடைய பிள்ளைளுக்கு சோதனை வரும். மண், பெண், பொன் இதில் பெண்ணின் விஷயத்தில் இஸ்ரவேலின் புதிய சந்ததி விழ்ந்தது. எண் 25:11ல் பினேகாஸ் தேவன் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்தி வைராக்கியம் காண்பித்தார் என்று வாசிக்கிறோம்.கீழ்படியாத பழைய சந்ததி யாரெல்லாம் எகிப்திலிருந்து புறப்பட்டார்களோ,அவர்கள் எல்லாரும் வனாந்திரத்தில் அழிக்கப்பட்டார்கள்.இப்பொழுது சீத்திமிலே நிற்கும் இந்த சந்ததி புதிய சந்ததி.அவர்களுக்கு சீத்திம் நாட்டிலே வாழ்ந்த மக்கள் பாவத்தை கவர்ச்சியாக காண்பித்து பாவத்துக்களானார்கள்.அவர்களின் பெண்களை கவர்ச்சியாக காண்பித்து விபச்சாரம்,வேசித்தனம் செய்ய வைத்தார்கள்.

## பாவம் என்ன செய்தது?

பாவத்தின்படிகள் எண்ணாகமம் 25:1-3 வசனங்களில் தெளிவாக கொடுக்கபட்டிருக்கிறது.பாவம் பின்வரும் விளைவுகளை மறைந்து பாவத்தை கவர்ச்சியாக காண்பித்து, விழவைப்பது பிசாசின் நோக்கம்.25:1 -ல் பாவம் பண்ண துவங்கினார்கள். 25:2-ல் பாவத்தை பணிந்து கொண்டார்கள்.25:3-ல் பாவம் அவர்களை பற்றி கொண்டது என வாசிக்கிறோம். கர்த்தரின் கோபம் அதிகரித்தது(வசனம்3) பாவத்தின் சம்பளம் 24,000பேர் மரித்து போனார்கள்.இது கொடிய நோயாகிய எயிட்ஸ் நோயாக இருக்கலாம்.

> **யோசிக்க !!**
> பாவம்செய்த 2 பேர் பெயர் மட்டும் எழுதப்படாமல் இரண்டு பேர் அப்பாவின் பெயர் எழுதப்படுகிறது. பெற்றோருக்கு தலை குனிவை கொடுக்கும் பிள்ளைகள் எவரும் ஆசீர்வாதம் பெற முடியாது. கவனமாய் வாழ்வோம் கர்த்தர் காண்கிறார். (எண் 25:14-15)

## பாவத்தின் விளைவு:

1) தேவ கோபம் வந்தது (வச 3), 2)வாதை வந்தது(வச 8), 3)24000 மரித்தனர் (வச9) பிசாசின் தந்திரங்களில் ஒன்று பாவத்தின் விளைவுகளை மறைத்து பாவத்தை முலாம்பூசி, அழகுபடுத்தி காண்பிப்பான். நாமும் நமது வாழ்க்கையில் பாவத்தோடு நேரங்களில் இசைந்து, இது எல்லாம் பாவமா? என்று பாவத்தை நியாயப்படுத்த துவங்குகிறோம்.பாவம் நம்மை தாக்கிவிட்டால் நாம் செய்யக்கூடிய 3 காரியங்கள்

1. மறைத்து விடலாம்(யாருக்கும் தெரியாமல்)
2. மன்னிப்பு கேட்கலாம்
3. மனம் திரும்பலாம் - தெரிந்தெடுப்பு உன் கையில் உள்ளது.

கர்த்தரின் கோபம் அதிகரித்தது,பாவத்தின் விளைவு 24,000பேர் மரித்து போனார்கள்.எண் 25:1-6 வசனங்கள் வரை இவ்வளவு சீரீஸாய் போய் கொண்டு இருக்கிறது.6ம் வசனத்தில் சபையார் அனைவரும் ஆசரிப்பு கூடாரத்தில் மத்தியில் அழுது கொண்டு நிற்கையில் துணிகரமாக இந்த சம்பவம் நடக்கிறது.விபச்சாரம் பண்ண ஒரு ஸ்திரியை அழைத்து கொண்டு போகிறான். தேவகோபத்தால் அநேகர் மரித்து கொண்டு இருக்கிற இந்த பஞ்சாயத்து மத்தியில் ஆசரிப்பு கூடாரத்தின் முன்பு நிற்கையில் ஒரு சகோதரன் (பெயர் சிம்ரி) (வசனம் 15) சல்லுவின் மகன், ஒரு சகோதரி அவர் பெயர் வஸ்தி சூரியின் மகள் என்று எழுதப்படுகிறது.அதை பினகாஸ் கண்டபோது, நடுச்சபையிலிருந்து எழும்பி ஒரு ஈட்டியை எடுத்து கொண்டு இருவவரையும் குத்தினான். இவருவரின் வயிற்றிலும் ஈட்டி குத்தப்பட்டவர்களாய் மரித்து போனார்கள். பினேகாஸின் இந்த நடவடிக்கை ஆண்டவருடைய கோபாக்கினையை குறைத்தது என பார்க்கிறோம். இப்படிப்பட்ட பினேகாஸ் பக்திவைராக்கியம் நமக்குதேவை.

## பக்தி வைராக்கியம் என்ன செய்தது?

1.பக்திவைராக்கியம் ஆண்டவரின் உக்கிரக் கோபத்தை அந்த வீட்டிலும், தேசத்திலும் மாற்றும். உனக்கும் உன் குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாய் மாறுவாய். (வசனம் 11)
2.ஆண்டவருடன் சமாதான உடன்படிக்கை, சமாதானவாழ்வு தனிப்பட்ட வாழ்விலும் உனக்கும் உன் தேசத்திற்கும் ஆசீர்வாதமாய் மாறுவாய். (வச 12)
3.ஆண்டவரின் நித்திய ஆசாரிய பட்டத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் ஆசீர்வாதமாய் தருவார். (வசனம் 13)
ஆகவே கிறிஸ்தவர்களாகி நமக்கு பரிசுத்தம் மிக அவசியமான ஒன்றாகும். எபி 12:14 வசனம். 2 கொரி 7:1 பரிசுத்தமாக்குதே தெய்வபயத்தோடு நிறைவேற்றுங்கள் என்று பைபிள் வலியுறுத்துகிறது.

பரிசுத்தம், இது இக்காலத்திற்கு சாத்தியமா? என்று ஒரு சிலர் யோசிக்கலாம். இதே சீத்தீமீலே கானானை வேவுபார்க்க சென்ற யோசுவாவும், காலேப்பும் ஒருவேசியின் வீட்டிற்கு சென்று பரிசுத்தமாக வெளிவர முடியும் என்றால் நமக்கும் சாத்தியமே (யோசுவா 2:1) பாவம் தலைக்குமேல் பறந்து கொண்டிருப்பதை தடுக்க முடியாது. ஆனால் என்மேல் கூடுகட்ட அனுமதிக்க கூடாது. இயேசு கிறிஸ்துவின் தம்முடைய சீர்களுக்காக ஜெபிக்கும் போது யோவா 17:17ல் உம்முடைய சத்தியத்தினாலே இவர்கள் பரிசுத்தமாக்கும் என்று ஜெபிக்கிறார். பரிசுத்த வைராக்கியத்தை நம்மில் துவக்கினான். அவர் வருகை மட்டும் நம்மை நடத்தி செல்ல வல்லவர் அவருடைய சத்தத்திற்கு கீழ்படிந்து பாவத்தை வெறுத்து, பாவத்திற்கு எதிர்த்து பரிசுத்தத்தை தரித்து பக்தி வைராக்கியம் காட்டுவோம்.

- Bro Selwyn




# கல்லிலிருந்து சதையான இதயத்திற்கு

இறைவனின் அருள் ஆட்சிமுறை அவரது படைப்பு துவங்கி இன்று வரை 6 முறை மாறியுள்ளது. படைப்பில் தேவனின் ஆட்சிமுறை என்பது மனிதனோடு நேரடியாக உரையாடியதாகும். அதாவது அதை Innocence "குற்றமற்ற நிலை" என்று கூறுவர். மனிதன் பாவத்திற்குள்ளான பிறகு ஏதேன் தோட்டத்திற்கு வெளியேயிருந்து சீனாய் மலைவரை பல மாற்றங்கள் ஏற்பட்டு 5வது முறையாக சீனாய் மலையிலிருந்து தேவன் தன் இறையாட்சி முறையை தோராவின் மூலம் தம் மக்களை வழிநடத்துதை காணலாம். இந்த தோராவின் காலம் மேல்வீட்டறையில் பரிசுத்த ஆவி இறங்கும் வரை நீடித்தது. பிறகு இன்றுவரை நாம் வாழ்வது கிருபையின் காலமாகும். நாம் எதிர்நோக்கியிருப்பது மேசியாவின் காலம் அல்லது நித்திய இறையாட்சியின் காலம். இந்த வார செய்தியில் நாம் "தோரா"வின் காலத்தை பற்றி படித்து நம்முடைய ஆவிக்குரிய வாழ்வை மேலும் பலப்படுத்துவோம்.

## தோராகாலம் (The Dispensation of Torah):

தோரா என்பது Teaching or Instruction என்று பொருள்படும். இந்த காலத்தில் தேவன் தமது ஜனங்களுக்கு கொடுத்த நடைமுறைகளை 3 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. ஒழுக்கக் கட்டுப்பாடு (Moral Code) பத்து கட்டளைகள்:

இது கிறிஸ்துவின் வெளிப்பாடு (1 கொரி 10:4)
Revelation from Christ

2. ஆவிக்குரிய கட்டுப்பாடு (Spritual Code)

7 பண்டிகைகள் 5 பலிகள் உள்ளடக்கியது. இது கிறிஸ்துவை உணர்தல் Realization in Christ(1 கொரி 5:7)

3. சமுதாய கட்டுப்பாடு (Social code) 613 சட்டதிட்டங்கள்:

இது கிறிஸ்து வரும் வரையுள்ள கட்டுப்பாடு
(Regulation until Christ) கலா 3:24.

### 1. ஒழுக்கக்கட்டுப்பாடு (பத்துக்கட்டளை):

முதல் கட்டளை தவிர மற்ற ஒன்பது கட்டளைகளும் கீழ்கண்ட முறையில் மூன்று மூன்றாக பிரிக்கலாம். இதில் கட்டளை 2வது, 5வது,10வது கட்டளை சிந்தனை நிலையில் உள்ளது (Thought) 3வது,6,வது, 9வது கட்டளைகள் பேச்சில்(Speach) உள்ளது. 4வது, 7வது, 8வது கட்டளைகள் செயல்(Action) வடிவில் உள்ளது. மேலும் 2,3,4 கட்டளைகள் மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள உறவையும், 5,6,7வது மனிதனுக்கும், குடும்பத்துக்கும் இடையே உள்ள உறவுகள் 8,9,10 கட்டளை மனிதனுக்கும், சகமனிதனுக்கும் இடையே உள்ள உறவை குறிப்பதாக உள்ளது. கடைசியாக நீ தெரிந்து கொள்ள வேண்டியது. தேவன் இந்த உலகை உடைக்க பயன்படுத்திய பத்து வார்த்தைக்கு இணையாக இந்த 10 கட்டளைகள் அமைக்கப்படும்.

### 2. ஆவிக்குரிய கட்டுப்பாடு:

ஏழு பண்டிகைகளில் முதல் பண்டிகை ஓய்வு நாள் (நாள் 7, வாரம் 44, வருடம் 50) ஆசரிப்பு தேவனின் முதல் பிரதானமான சிருஷ்டிப்பை நினைவுகூறுதலும், மற்ற ஆறு பண்டிக்கைக்கும் தேவனின் இரண்டாம் பிரதானமான மீட்பை (Redemption) மையப்படுத்தி கொண்டாடுவதாகும்.

பலிகளில் மூன்று பலிகள் (   ) தேவனோடு உள்ள நமது உறவை தக்கவைக்கவும் தொடர்ந்து வருகிறது. தேவனோடு உள்ள நமது உறவை புதுபிக்கவும் செலுத்திவிட்டது. மேலே உள்ள பண்டிகை பலிகள் கிறிஸ்துவில் நிறைவேறிற்று. நம் கிறிஸ்துவை பற்றிக்கொண்டு முன்னேற அழைக்கப்படுகிறோம்.

### 3. சமுதாய கட்டுப்பாடு:

613 ஒழுக்க நெறிகளை Mitzvot என்று அழைப்பர். இது இரு பெயர் பிரிவாக பெற்றது. 248 "செய்" என்றும், 365 "செய்யாதே" என்றும் அமைந்துள்ளது. மேலும் நாம் நினைவில் தொன்றும் வண்ணமாக 248 ஓர் சந்திரனை கொண்ட ஒரு வருடகால அளவை மேலும் நம் உடலில் 248 எலும்புகள், 265 தசைகளும் (Sinews) உள்ளது. 613படி என்னுள் விதை கனியை குறிக்கும். இதை தேவன் கானானில் தமது ஜனங்களுக்கு உன்ன கொடுத்த ஆவிக்குரிய 7 கனிகளில் (உபா 8:8)== இவை அனைத்தும் கிறிஸ்து வரும் வரை நம்மை ஒழுக்கத்துடன் வாழ வழிசெய்யும்.

### மனிதனின் இரு முக்கிய கடமைகள்:

ஒன்று தேவன் மோசே மூலம் கொடுத்த கட்டளைகள், நியாயப்பிரமாணத்தை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் (உபாகமம்). இரண்டாவது உபாகமம் 18:15,18-ல் சொல்லப்பட்ட போது ஓர் தீர்க்கதரிசியை எழுப்புவேன் அவருக்கு கீழ்ப்படியுங்கள் என்பதாகும்.

### மனித மீறுதல்:

இரண்டையும் மனிதன் மீறியதாக புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். முதலாவது கட்டளை நியாயப்பிரமாணத்தோடு தங்களின் பாரம்பரியத்தையும் சேர்த்து கொண்டார்கள் (ரோமர் 10:1-3, மத் 15:2, மாற்கு 7:3-5). அடுத்தபடியாக கிறிஸ்து என்னும் மேசியாவை பிசாசுகளின் தலைவன் என்று சிலுவையில் அறைந்தனர் (மாற்கு 3:22, யோவான் 7:1)

### கல் இருதயத்திலிருந்து சதையான இருதயத்திற்கு:

தோரா காலத்தில் எழுத்து படில் பட்டியலிடப்பட்ட சட்ட திட்டங்கள் யாவையும் இயேசு நிறைவேற்றி நமது இருதயத்தோடு உடன்படிக்கை செய்து கொண்டார். (புது உடன்படிக்கை ஏரேமிய) தோரா காலத்தில் பலிகள் மூலம் பாவம் மூடப்பட்டது. அவர் கிருபையின் காலத்தில் இயேசுவின் இரத்தத்தால் பாவம் நீக்கப்பட்டது.

சகோதரனே! சகோதரியே இந்த வார செய்தியை இத்துடன் முடிக்கிறேன். ஒன்றை நியாபகத்தில் வைத்துக் கொள். தோரா காலத்தை விட, கிருபையின் காலத்தில் வாழ்வது சற்று கடினமானது ஏனென்றால் கல்லில்/எழுத்தில் இருந்த கடைபிடிக்க வேண்டிய கட்டளைகள் யாவையும் தேவன் நம்முடைய இருதயத்தில் இடமாற்றம் செய்ததை அவர் மெல்லி சத்தத்தோடு நம்மோடு பேசுகிறார். சற்று கேட்க தவறினால் தேவன் நம்மிடம் பேசுவது கேட்காது. அது நம்மை விசாலமான பாதைக்கு அழைத்துச் செல்லும் அந்த பாதையில் செல்வோர் அநேகர் நீயும் அந்த கூட்டத்தில் ஒருவனாய்

- Bro.Isaac Kamalesh



# தலைக்கு தேவை

கிறிஸ்தவம் தலைமைத்துவத்திற்கு தவித்து கொண்டிருக்கிறது.தேவன் எதிர்பார்க்கும் தலைமைத்துவத்தின் பண்புகள் கொண்டோர் மிகவும் குறைவே. தலைமைத்துவத்திற்கு மோசே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. உபா 34:7ல் மோசே மரிக்கும் போது 120 வயது, அவன் கண் இருளடையவில்லை, அவன் பெலன் குறைவுமில்லை என்று எழுதியுள்ளது, காரணம் உபாகமம் 34:12ல் கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயை போல ஒருவனும் இல்லை என்று உபாகமம் முடிவடைகிறது.தேவன் அவர்களுக்காக எவ்வளவோ செய்திருந்தார்.மோசேயை அவர்களுக்கு தலைவனாக ஏற்படுத்தினார். அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி போட்டார்.ஆனால் அவர்களோ இவை அனைத்திற்காகவும் நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கு பதிலாக தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள் (எண் 11:1). ஆகவே அவர்களில் பெரும்பாலானோரை வனாந்திரத்தில் தண்டித்தார்.ஆனாலும் சொந்த ஜனம் எதிர்க்கும் போது, அவன் மனம் உடைந்தவனாய் அவன் ஒன்றும் பேசவில்லை. மாறாக தேவன் அவனுக்காய் பேசுகிறார். அவனை குறித்து சாட்சியும் கொடுக்கிறார். எண்ணாகமம் 12:1-13 மோசேக்கு ஆண்டவர் சிறப்பு சான்றிதழ்களை கொடுத்திருகிறார். அவை என்னவென்று பார்ப்போம்.

## 1. சகல மனிதரிலும் சாந்தகுணமுள்ளவன் (எண் 12:3):(Man of Meekness)

எண் 11:1ல் எல்லா இஸ்ரவேல் மக்களும் அவனுக்கு எதிராக எழும்பினார்கள். எண் 12:1-13. தன்னுடைய சொந்த குடும்பத்தில் அவனுக்கு எதிராக சகோதரனும், சகோதரி மிரியாமும் எழும்பினார்கள்.எண் 14:2ல் எல்லா இஸ்ரவேல் மக்களுக்கும் அவனுக்கு எதிராக எழும்புகிறார்கள். இப்படி அவனுக்கு எல்லாமே எதிராக வந்தாலும், ஆண்டவர் அவனோடு கூட இருந்து அவனுக்காக பேசும் வார்த்தைகள் 12ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். மோசேயின் தலைமைத்துவத்தில் அநேக குணாதிசயங்கள், பண்புகள் இருந்தாலும், தேவன் இவனை குறித்து சொல்லும் வார்த்தைகளை கொஞ்சம் கவனமாக வாசிப்போம்.ஆண்டவர் மோசேயை மட்டும் பயன்படுத்துவாரோ? எங்களை பயன்படுத்த மாட்டாரோ? எங்களை கொண்டும் பேசுவார் என்று சொன்னதை கர்த்தர் கேட்டார். மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் சாந்தகுணமுள்ளவன் மோசேக்கு ஆண்டவர் சிறப்பு சான்றிதழ்களை கொடுத்தார்.இப்படிப்பட்ட சாந்தகுணமுள்ளவர்களை பார்ப்பது மிகவும் அரிதாக உள்ளது.Meekness not Weekness என்பார்கள்.சாந்தமாய் இருப்பவர்களுக்கு ஒன்றும் பேசதெரியாது என்று அநேகர் நினைப்பர்.ஆனால் பைபிள் என்ன சொல்கிறது மத் 5:5ல் சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரிந்து கொள்வார்கள் என்றும்,சங் 37:11ல் பூமியை சுதந்தரிந்து,மிகுந்த சமாதானத்தினால் மகிழ்ச்சியாயிருப்பார்கள் என்றும் கூறுகிறது.கொரிந்தியருக்கு பவுல் எழுதும்போது, 2 கொரி 10:1 “Gentleness of Christ” (கிறிஸ்துவின் சாந்தம்) என்று எழுதுகிறார். இப்படிப்பட்ட கிறிஸ்துவின் சாந்தகுணம் நிறைந்தவர்களாய் வாழ அழைக்கிறார்.சாந்தத்தோடு பதிலளிக்கும் தலைவர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சாந்தம் அணிந்து சரித்திரம் படைப்போம்.

## 2. எங்கும் உண்மையுள்ளவர் எண் 12:7 (Man of faithfulness):

தேவன் மோசேயை குறித்து சொன்னது, என் தாசனாகிய மோசேயே அப்படிப்பட்டவன் அல்ல. என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்று கூறுவதை பார்க்கிறோம். நமக்கு தேவன் இப்படி இறங்கி வந்து பேசுவாரா என்று சிந்திப்போம்.மோசே 40 ஆண்டுகள் அரண்மனையிலும், 40 ஆண்டுகள் வானாந்திரத்தில் ஆடுகள் முன்பும், இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும் போதும் உண்மையாயிருந்ததை ஆண்டவர் கூறுகிறார். நாம் நமது ஊழியத்திலும், ஜெபத்திலும், உலக வேலைக்களிலும், குடும்பத்திலும், உறவுகளிலும் எங்கும் உண்மையுள்ளவன் என்று தேவன் உங்களை கூற முடியுமா? நீதி 28:20ல் உண்மையுள்ளவன் பரிபூரண ஆசீர்வாதத்தை பெறுவான்.லூக் 16:10ல் கொஞ்சத்தில் உண்மை அநேகத்தில் அதிகாரியாய் ம ற்றுவார். 1 தீமோ 1:12ல் உண்மையுள்ளவன் என்று எண்ணி தேவன் பணிகளை கொடுக்கிறார். வெளி 17:14ல் இராஜாதி ராஜாவாக இயேசு வரும்போது அவரோடு கூட இருப்பவர்களுக்கு 3 தகுதிகள் வேண்டும். 1.அழைப்பு பெற்றவர் 2. தெரிந்து கொள்ளப்பட்டவர் 3. உண்மையுள்ளவர்.தேவன் விரும்பும் உண்மைத்துவம் பணியாற்றும் இடங்களிலும், நண்பர்களிடமும், நம்முடைய உறவிலும், செழித்தொங்க வேண்டும், அப்பொழுது மட்டுமே இயேசு இராஜாதி இராஜாவாக வரும்போது அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்.

## 3. மன்னித்து ஜெபிப்பவன் (எண் 13): (Man of Prayer)

எண் 12:8ல் தேவன் மோசேயை குறித்து சொன்னது நான் அவனுடனே முகமுகமாக பேசுகிறேன்.கர்த்தரின் சாயலை கண்டான் இப்படி இருக்க நீங்கள் மோசேக்கு விரோதமாக பேச உங்களுக்கு எப்படி பயமில்லாமல் போனது என்று கேட்டு மிரியாமை தண்டித்தார். தமக்கு எதிராக பேசிய மிரியாமை மோசே குஷ்டரோகியாக பார்த்தான்(வசனம் 16).அப்பொழுது மோசே சந்தோஷப்படாமல் அவளுக்காக கெஞ்சும் ஜெபம் ஏறெடுக்கிறார்.(வசனம் 13) அதன் விளைவு அவளுடைய தண்டனையை 7 நாளாக குறைத்து தண்டித்தார். எதிரிக்காக ஜெபம்,மன்னிக்கிற மனபக்குவம் தலைவனுக்கு தேவை.பதவி கிடைத்ததும் பழிவாங்கும் எண்ணம் வேண்டாம்,மன்னித்து மறந்து அவர்களுக்காக நாம் மன்றாடி ஜெபிக்க அழைக்கப்பட்டவர்கள்.தலைமைத்துவ பொறுப்பில் இருப்பவனுக்கு நேரம், எதுக்கு மட்டும் கிடைக்காது என்றால் ஜெபத்துக்கு மட்டும் நமது வாழ்வில் More watches less time in prayer நம்முடைய Mobile, Watch, Laptop, Clock, Computer, Tablet என்று எல்லாவற்றிற்கும் Time இருக்கிறது. ஆனால் எவ்வளவு நேரம் நாம் தேவனோடு உறவாட ஒதுக்குகிறோம்.ஆண்டவரிடம் நேரத்தை செலவழிக்காமல்,தவறாக முடிவெடுக்கும் தலைவர்களும் உண்டு.மோசேக்கு எவ்வளவோ வேலை இருந்திருக்கும் அதன் மத்தியிலும் தேவனை முகமுகமாய் தரிசிக்க நேரம் எடுத்துக் கொண்டான்.அப்படி என்றால் நமக்கு என்ன? இயேசு கிறிஸ்துவும் பிதாவோடு அநேக நேரங்களை செலவிட்டார். லூக் 5:15-16ல் அநேக ஜனங்கள் இயேசுவை தேடி வருகிறார்கள். ஆனால் அவரோ வனாந்திரத்தில் தனித்து போய் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்.

மோசேயின் வாழ்வில் இப்படிப்பட்ட 3 குணாதிசயங்களை நமது வாழ்விலும்
அப்பியாசப்படுத்தி சாந்தமுள்ள, உண்மையான, ஜெபவீரனான
தலைவர்களாய் வாழ்ந்திட நமக்கு உதவி செய்வாராக.

– Bro Selwyn



# நாம பண்டிகைகாரங்க!

நம் வேதத்தில் 7 பண்டிகை கொண்டாட்டங்களும், அதன் முறைகளும் சொல்லப்பட்டுள்ளது. அதில் ஒன்று கூடார பண்டிகை. இதன் கொண்டாட்ட முறையில் சொல்லப்பட்ட ஓர் வசனத்தை இங்கே காணலாம். "முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும், பேரீச்சை ஓலைகளையும், தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும், ஆற்றலரிகளையும் கொண்டு வந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழு நாளும் மகிழ்ச்சியாயிருங்கள்" (லேவி.23:40). இங்கே சொல்லப்பட்ட நான்கு விருட்சங்களை சற்று பார்ப்போம்.

1. அலங்கார விருட்சத்தின் கனி (Etrog)
இது சிட்ரஸ் (Citrus) வகை கனி. நமக்கு புரியும்படி சொன்னால் எலுமிச்சை (lemon) போன்ற ஓர் வகை கனி. இது நம்முடைய இருதயத்தைக் குறிக்கக் கூடியது. இதன் உட்பகுதி சதை மற்றும் சாறு நிறைந்த பகுதி. நம்முடைய மனம் / ஞானம் (mind/wisdom) இவற்றை உள்ளடக்கிய கருத்து இது.

2. பேரீச்சை ஓலை (Palm Branch)
இதை எபிரேய மொழியில் Lulav என்று கூறுவர். இது நம்முடைய முதுகு தண்டு (spine) அதாவது நேர்மையைக் (Integrity) குறிக்கிறது.



3. தழைத்திருக்கிற விருட்சங்கங்களின் கிளை (Three myrtle branches)
இதை எபிரேய மொழியில் Hadassim என்று கூறுவர். இது நம்முடைய கண்களைக் குறிக்கிறது. அதாவது பகுத்தறியும் சக்தி (discernment power).

4. ஆற்றலரிகள் (Two willow branches)
இதை எபிரேய மொழியில் aravot என்பர். நம்முடைய உதடு, வார்த்தை அதாவது ஜெபம் (prayer) போன்றவற்றைக் குறிக்கும்.

மேலே சொல்லப்பட்ட நம்முடைய சரீர உறுப்புகள் அனைத்தும் நம்மை பாவத்திற்கு உட்படுத்த வல்லமையுடையவை (potential to sin). ஆனால் அவை அனைத்தும் நம்முடைய தேவனின் வார்த்தை / கற்பனை/ கட்டளைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே தேவ சித்தம். இதில் Etrog யை மட்டும், இடது கையில் பிடித்துக் கொள்ள வேண்டும். மற்ற மூன்று விருட்சங்களையும் ஒரே கட்டாக கட்டி வலது கையில் வைத்து, அதை மேல் -கீழ், முன்-பின் மற்றும் வலது -இடது பக்கங்களில் அதாவது நான்கு திசைகளிலும்- பக்கங்களிலும் அசைவாட்டி ( waving ) கர்த்தருடைய சந்நிதியில் ஏழு நாளும் மகிழ்ச்சியாயிருங்கள் என்று வேதம் சொல்வதைப் பார்க்கலாம்.மேலும் கீழும் அசைக்கும் போது, மேலே வானத்தின் மழையாலும், கீழே பூமியின் விளைச்சலாலும் எங்களை போஷிக்கிற தேவன் என்றும், நான்கு திசை என்பது உலகமெங்கும் உம்முடைய நாமமே அல்லாமல் வேறு நாமம் இல்லை என்பதையும் விளக்குவதாக உள்ளது.

(இதில் திசைகள் என்பது தேவனின் அரசாட்சி(divine rule) வானமண்டலத்தில் பூமி முழுவதும் உள்ளது என்பதை உணர்த்தும்)

இதில் விருட்சங்களை அசைக்கும் முன்பும், பின்னும் சொல்லப்படும் ஜெபம்...எங்கள் தேவனாகிய கர்த்தாவே நீர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், எங்களை உம்முடைய வார்த்தையால் பரிசுத்தமாக்குகிறவர், நித்திய ஜீவன் உடையவராகிய நீர் எங்களுக்கு உம் வார்த்தையால் ஜீவன் தந்து என்றென்றைக்கும் அரசாளுகிறவர், உம்முடைய நாமமே ஸ்தோத்தரிக்கப்படக்கடவது, என்ற முறையில் ஜெபம் இருக்கும்.

கூடாரம் (Tabernacle) என்பது எபிரேய மொழியில் Sukkot என்பதாகும். இந்த Sukkot என்பதற்கு மீட்பு(Redemption), உலகளாவிய சமாதானம், சகோதரத்துவம், மனிதனின் கடவுளின் முழு மையத்துவம் என்று பின்னிப் பிணைந்த பொருளடக்கமாகும். வேத அடிப்படையிலும், வரலாற்று பதிவு படியும், நமது மேசியாவாகிய இயேசு கிறிஸ்து இந்த கூடார பண்டிகையின் முதல் நாளில் தான் பிறந்தார் என்பதை யோவான் 1:14வது வசனம் நமக்கு உணர்த்துகிறது. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார் என்பது மூல மொழிப்பெயர்ப்பில் நமக்குள்ளே கூடாரமாயினார் (Tabernacled) என்று உள்ளது. இயேசு பிறந்த இடத்தில்கூட, சத்திரக்காரன் தான் கூடார பண்டிகை கொண்டாடப் போட்ட கூடாரம் என்பதை மறைமுகமாக சத்திரத்தில் இடமில்லை என்று சொல்லியிருக்கிறான்.

இந்த இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பது, பண்டிகை கொண்டாடுவது என்பது அவரின் மீட்பின் சுவிசேஷத்தை நான்கு திசைக்கும் எடுத்துச் சொல்வதே என்பதை மறவாதே. இப்போது மீண்டும் மேலே உள்ள வசனத்தை ஒரு முறை வாசி.

- New Begin
- Mr Isaac Kamalesh



என்ன? விளைவு காரணங்கள்

# கோபம்

## கோபத்தை குறைத்து கொள்வது எப்படி?



நம் எல்லோருக்கும் கோபம் வருகிறது. சில சமயம் நமது கோபம் சரியாகவும் தோன்றுகிறது. ஆனால் உண்மையாகவே கோபப்படுவது சரியா? தவறா?

கோபப்படுகிறவர்கள் கையை உயர்த்துங்கள் என்று சொன்னால் நம்மில் எத்தனைபேர் கையை உயர்த்தாமல்இருப்பீர்கள். கோபம் என்பது நம் இரத்தத்திலே கலந்த ஒரு வியமாகும். உலகத்தில் நடக்கும் கொலைகளாயிருந்தாலும் சரி, குடும்பத்தில் நடக்கும் சண்டைகளாயிருந்தாலும் சரி அடிப்படையாக இருப்பது கோபம் மட்டும்தான். குடும்பத்தில் காட்டப்படும் கோபம் சில நேரத்தில் விவாகரத்தை நோக்கி பயணிக்கிறது. சில நேரத்தில் தற்கொலைகளை நோக்கி பயணிக்கிறது. கோபத்தை குறைத்து கொள்வது எப்படி என்று பார்ப்பதற்கு முன்பு, கோபப்படுவதனால் ஏற்படும் விளைவு என்ன? என்பதை பார்ப்போம்.

ஒரு வீட்டில் ஒரு மகன் தனது தாயிடம் ஒவ்வொருநாளும் ரொம்ப கோபப்படுவான். இதை பார்த்த அவனது தந்தை சுவரில் ஒரு மரபலகையை மாட்டி, அவனிடம் எப்பொழுதெல்லாம் நீ அம்மாவிடம் கோபப்படுகிறாயோ அப்பொழுதெல்லாம் இந்த மரபலகையில் ஆணிகளை அறைந்து வை என்றார். அவனும் அவ்வாறே செய்தான். மறுநாள் அவனது தந்தை அவனை அழைத்து ஆணிகளையெல்லாம் பிடுங்க சொன்னார். உடனே அவன் அத்தனை ஆணிகளையும் பிடுங்கினான். அதன்பின்பு அவனை பார்த்து சொன்னார். இந்த மரப்பலகைதான் உன்தாயின் இருதயம் இந்த ஆணிகள் தான் உன்னுடைய கோபங்கள் என்றார். எப்பொழுதெல்லாம் நீ கோபப்படுகிறாயோ அத்தனை முறை உன்தாயின் இருதயத்தில் ஆணி அறைந்திருக்கிறாய் என்றார். பிரியமானவர்களே உன் தாயாயிருக்கலாம், உன் நண்பர்களாயிருக்கலாம், உன் சகோதர, சகோதரிகளாயிருக்கலாம், உன் தந்தையாயிருக்கலாம், உன் மனைவியாயிருக்கலாம் எத்தனைமுறை நீங்கள் கோபப்படுகிறீர்களோ அத்தனைமுறையும் நீங்கள் கோபப்படுகிறீர்களோ, அத்தனை முறையும் மற்றவர்களுடைய இருதயத்தில் ஆணிகளை அறைகிறீர்கள் என்பதை சிந்தித்துபாருங்கள்.

**கோபம் என்றால் என்ன?**

நவரச உணர்ச்சிகளில் மிகவும் வலிமையான உணர்ச்சியாகும். கோப உணர்ச்சி பாவம் அல்ல.கோபத்தில் நான் எவ்வாறு நடக்கிறோமோஅதுவே நம்பாவம்செய்கிறோமா இல்லையாஎன்பதை முடிவு செய்கிறன்றது.வேதாகமத்தில் 500க்கும் மேற்பட்ட முறை கோபத்தை பற்றி எழுதப்பட்டுள்ளது. ஆதி 4:5ல் முதலாவதாகவும், வெளி 19:15ல் கடைசியாகவும் கோபத்தை பற்றி வாசிக்க முடிகின்றது.சுற்றுப்புறசூழ்நிலைகளும் உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களும் கோப உணர்ச்சியை தூண்டுகிறது.

**கோபத்தை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்துகிறோம்:**

1. வீட்டில் உள்ள பொருட்களை தூக்கி எறிந்து உடைப்பது?
2. அறைக்குள் சென்று கதவை பூட்டிக்கொண்டு இருப்பது?
3. கத்தி(சத்தமிட்டு) வெளிப்படுத்துவது.
4. மனதிலே அடக்கிக்கொள்வேன்.
5. வேறுவழியில் செயல்படுவது.

**ஏன் கோபமடைகிறோம்?**

மனிதர்களின் செயல்கள், சம்பவங்கள், சூழ்நிலைகள், கற்பனையான எண்ணங்கள், நீதிகிடைக்காமை, கேலி, கிண்டல் ஒத்துழையாமை, பயமுறுத்துதல், அவமானம் மற்றும் நமது வாழ்க்கையில் பிறர் குறுக்கிடுவது போன்ற காரணங்களால் கோபமடைகிறோம்.

**கோபத்தின் பலநிலைகள்:** கோபம் நமக்கு உடல்ரீதியான மற்றும் மனரீதியான பாதிப்பைக் கொண்டு வருகிறது.

எதற்கெடுத்தாலும் கோபம்: சக மனிதர்களிடம் எப்போதுமே கோபப்பட்டுக் கொண்டிருத்தல்.

விளைவு: தலைவலி, வயிற்றுப்புண், இருதயநோய்

வெடிக்கும் கோபம்: வன்முறையைக் கையாளுதல்

விளைவு: பொருட்களைத் தூக்கியெறிதல், மற்றவர்களை வார்த்தையாலும், உடலிலும் காயப்படுத்துதல்.

அடக்கி வைக்கும் கோபம் : வெளிப்படுத்த முடியாத கோபத்தை மனதிற்குள்ளேயே அடக்கி வைத்தல்.

விளைவு: பதற்றம் அதிகரிப்பு, பிரச்சனை முடியாமை.

மறைமுகமான,கொதிக்கும் கோபம்: பழிவாங்கும் நோக்கத்துடன் மறைமுகமாக பேசுதல், காலம் கடந்து வருதல்,காரியங்களைக் காணா முகமாக இருத்தல்.

விளைவு: பிரச்சனைக்கு முடிவு வருவதே இல்லை

**செயல்படும் முறை:** கவனித்துபார்(See it),தாமதி(Dealy it), கட்டுப்படுத்து(Control it), நல்ல ஆலோசகரை,நண்பரை கண்டுபிடி (Own it)

**கோபத்தை குறைப்பது எப்படி?**

எல்லோருக்குமே ஏதோ ஒரு சூழ்நிலைதான் கோபப்படும்படியாக அமைகிறது. கற்பனை செய்து பார்ப்போம். உங்கள் இடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருந்தால் எப்படி நடந்து கொள்வாரோ, நீங்களும் அப்படியே நடந்து கொள்ளுங்கள். நம்மை படைத்த நமது ஆண்டவர் நிச்சயமாகவே கோபப்படமாட்டார். ஏனெனில் அவர் கைகளில் ஆணிகள் அறையும் போதே, அவர் கோபப்படவில்லை. எந்த சூழ்நிலையிலும் அவர் கோபப்படமாட்டார். உடனே நீங்கள் கேட்கலாம் அவர் கடவுள். நான் சாதாரண மனிதன் என்று சொல்லலாம். சாதாரண மனிதனானாலும் சாந்த குணத்துடன் வாழ முடியும் என்பதற்காகதான் கடவுள் மனிதனாக வாழ்ந்து காட்டினார். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம்செய்யா திருங்கள் என்று சங்கீதம் 4:4ல் வாசிக்கிறோம்.

**கோபத்தைபற்றி வேதத்தில் உள்ள வசனங்கள்:**

➔ அவன் எனக்கு செய்த பிரகாரம் நானும் அவனுக்குச்செய்வேன். அவன் செய்த செய்கைக்குத்தக்கதாக நானும் அவனுக்குச் சரிகட்டுவேன் என்று நீ சொல்லாதே. (நீதி 24:29)

➔ தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் ன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. (மத் 5:39) ஞானமும் பொறுமையும் தேவை

➔ வழியே போகையில் தனக்காடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான்.நீதி 26:17)பட்டணத்தை பிடிக்கிறவனை பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் (நீதி 16:32)

➔ சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது (எபே 4:26) ➔ நீதி.14:16,17; 14:29; 19:11 ; பிரசங்கி 7:9; யாக்கோபு 1:19,20

**நாம் எடுக்கும் தீர்மானம்:**

மற்றவரின் மனதை நொகடிக்கக்கூடிய எந்தவொரு கோபத்தையும் படமாட்டோன்.கெட்டவர்களாயிருந்தாலும் சரி ஆண்டவரின் மனதை நோகடிக்கக்கூடிய எந்த ஒரு கோபத்தையும் நான் படமாட்டேன். நாம் ஜெபிக்கம் ஜெபம் சாந்த குணமுள்ள இருதயத்தை எனக்கும் எங்களுக்கும் தாரும்

– Bro Selwyn

# தொங்கல்






எண்ணாகமம் 15: 38-41 வரை வசனங்களை நாம் வாசிக்கும் போது ஓர் காரியத்தை செய்யும் படி தமது ஜனங்களுக்கு தேவன் கட்டளையிடுவதாக உள்ளது. அது என்னவென்றால் உன் ஆடையின் ஓரத்தில் நான்கு பறங்களிலும், இளநீல நாடாவை கட்ட வேண்டும் (அதாவது தொங்கலை தொங்க விடுவாயா) என்பதே. இந்த தொங்கல் ஆங்கில வார்த்தையின் Hem, Fringe, Tzitzit, tassel, wing என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அது நாளைடைவில் ஜெப சால்வையில் இணைக்கப்பட்டு இன்று யூதர்களின் வழக்கத்தின் படி அவர்கள் ஜெபத்திற்கு பயன்படும் ஜெப சால்வையின் ஓர் அங்கமாக உள்ளது.

<u>இந்த தொங்கல் பழைய ஏற்பாட்டில்...</u>

- ★ ரூத் புத்தகத்தில் காணலாம். 3:9 உம்முடைய "போர்வையை" விரியும் என்றும்
- ★ தாவீது சவுலின் சால்வையைத் "தொங்கலை" அறுத்துக் கொண்டதாக 1 சாமு 24:1-22-ல் காணலாம்.
- ★ சாமுவேல் சரித்திரத்தில், சவுல் சாமுவேலின் சால்வை "தொங்கலை" பிடித்து அது கிழிந்து போயிற்று 1 சாமு 15:1-31 என்று படிக்கலாம்.
- ★ எலியா தன் "சால்வை" முறுக்கி தண்ணீரை அடித்தான் என்றும் 2 இராஜா 2:8-லும், எலியாவின் மேலிருந்த "சால்வை" கீழே விழுந்தது என்றும் 2 இராஜா 2:13ல் காணலாம்.
- ★ மல்கியாவில் 4:2ல் உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் "செட்டைகளின்" கீழ் (wing) ஆரோக்கியம் இருக்கும்.
- ★ சங்கீதம் 91:1-7ல் அவர் தமது "சிறகுகளால்" மூடுவார் என்பதிலும் "Wings" என்ற பதமும் இதன் மூலப்பொருளாகும்.

<u>இந்த தொங்கல் புதிய ஏற்பாட்டில்...</u>

மத் 9:20-22ல் பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஸ்தீரி அவருடைய வஸ்திரத்தை தொட்டாள். அது இயேசு அணிந்திருந்த ஆடையின் தொங்கல். மேலும் மத் 14:36 அவர் கெனசேரத்து நாட்டின் அவ்விடத்து மனுஷர் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொடும்படி உத்தரவாக வேண்டும் என்றும் படிக்கலாம். இது இயேசுவின் ஆடையில் உள்ள தொங்கல் என்று வேத மூலமொழிப்பெயர்ப்பில் உள்ளது.

<u>தொங்கல் அமைப்பு முறை:</u>

இளநீல நாடா என்பது மேசியாவாகிய கிறிஸ்துவை குறிக்கிறதாக உள்ளது. இதன் 4 இழை நூல் திரிக்கப்பட்டு இரண்டு நூல்கள் மொத்தம் 8 நூல் இழைகள் கொண்டது. இது 5 இடத்தில் முடிச்சிப் போடப்பட்டது. 5 முடிச்சிகளின் நடுவில் அதாவது 4 இடத்தில் 7,8,11,13 முறை நூல்களால் சுற்றப்பட்டிருக்கிறது. இது எண்ணியல் அடிப்படையில் பார்க்கும் போது, முதல் மூன்று நூல் சுற்றின் எண்ணிக்கை (7 + 8 +11 = 26) "Yahoveh" அதாவது "Jesus" குறிக்கும் வார்த்தை. கடைசி சுற்றின்(13) கடவுளின் இரக்கப் பண்புகளை (யாத் 34:6-8) குறிக்கும். Tzitzit என்ற வார்த்தையின் எண்ணியல் 600 ஆகும். இதனுடன் 8 நூல் இழை மற்றும் 5 முடிச்சிகளை கூட்டினால் மொத்த கூட்டுத்தொகை 613 ஆகும். இது தேவன் மனிதனுக்கு கொடுத்து, கடைபிடிக்க வேண்டிய கட்டளைகளைக் குறிக்கும். இன்று இந்த தொங்கலின் தேவை என்ன என்பதை காணலாம். எண் 15:38-41 நான்கு குறிப்புகள்

<u>1. கடவுளுக்கு முன்பாக தேவையான ஒன்று</u>
<u>(Requirements Before God V. 39)</u>

கடவுளுக்கு முன்பாக தேவையான ஒன்று, நாம் நம்முடைய இருதயத்திற்கும், கண்களுக்கும் ஏற்றபடி நடந்து சோரம்போகாமலிருக்க தொங்கல் தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்று நம் வாழ்வில் ஏன் தொங்கல் இல்லை என்று கேட்போமானால், இன்று பரிசுத்த ஆவியாகிய தேவன் நமது உள்ளத்திற்குள் வந்து நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகிறார் என்று யோவான் 16:13-15ல் வாசிக்கிறோம். இன்று தொங்கல் தேவையல்ல. ஆனால் நீ சோரம் போகாமல் கர்த்தருக்கு முன்பு உத்தமமாய் இருக்க பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வது அவசியமான ஒன்றாகும்.

2. கடவுளுக்கு முன்பாக நமது பொறுப்பு:
(Responsibities Before God V. 39(b)

தொங்கல் என்பது ஓர் வெளிப்புற அடையாளம். ஆனால் இது வெறும் வெளிப்புற அடையாளம் மட்டுமல்ல. இது உண்மையான உள்ளான கீழ்ப்படிதல் முக்கியம் என்பதை குறிக்கிறது. இதன் மறுபக்க செய்தி தொங்கலைத் தொங்க விட்டப்பிறகு கீழ்ப்படியாத வாழ்வு, மாய்மாலம் என்பதாகும். நம் தலைமுறைக்கு சொல்ல வருவது கிறிஸ்தவனாக பெயர் வைத்து கிறிஸ்தவ வாழ்வு வாழாமல் கீழ்ப்படிதல் இல்லை என்றால் அது மாய்மாலமான வாழ்க்கையாகும்.

3. கடவுளோடு நம்முடைய உறவு:
(Relationship with God V. 40)

கடவுளோடு நம்முடைய உறவு "நான் உங்களுக்கு தேவனாயிருக்கும்படி, உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதிலிருந்து "தொங்கல்" மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய செய்தி என்னவென்றால் நமக்கும், கடவுளுக்கும் இடையே உள்ள உறவு முறை, நாம் அவரின் ஆசாரிய கூட்டமாயும், ராஜரீக கூட்டமாயும் இருப்பதாக பேதுரு நிருபத்திலும், யோவான் வெளிப்படுத்தின விசேஷித்தி லும் குறிப்பிடுவதன் மூலமும் அறிந்து கொள்ளலாம். மேலும் இந்த உறவை நாம் கிருபையால் பெற்றிருக்கிறோம் என எபேசியர் 1:7ல் தெளிவடையலாம்.

4. கடவுளின் மீட்பின் செய்தி:
(Redemption of God V. 40)

தொங்கல் நமக்கு சொல்லும் செய்தி தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து அழைத்து வந்தவர் என்பதே உபாகமம் 6:23ல் தாம் நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்துக்கு எங்களை அழைத்துக் கொண்டு போய், அதை நமக்கு கொடுக்கும்படி, எங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார். இன்று இந்த சத்தியத்தை நமக்கு யோவான் 14:1-3 வசனங்களில் காணலாம். இந்த மீட்பின் செய்தியை நாம் தினமும் நினைவு கூற வேண்டும். மேல் சொல்லிய சத்தியத்தை ஒருமுறை மறுபரிசோதனை செய்வோம். நம்மிடம் வெளியான அடையாளம் உள்ளது. ஆனால் உள்ளான கீழ்ப்படிதல் இல்லை என்றால் நீங்கள் இன்று இயேசுவின் தொங்கலைத் தொட வேண்டும். உங்கள் வாழ்வில் அவரோடு உள்ள உறவு இல்லையென்றால் இன்று நீங்கள் இயேசுவின் தொங்கலைத் தொட வேண்டும்.

உங்கள் மீட்பில் சந்தேகமென்றால் இயேசுவின் தொங்கலைத் தொடுங்கள். பெரும்பாடுள்ள ஸ்தீரி இயேசுவின் தொங்கலைத் தொட்டு சொஸ்தமானாள். இன்று நீங்கள் "விசுவாசத்தில்" அந்த தொங்கலைத் தொடுங்கள்.

- Mr Isaac Kamalesh

# இந்தியாவில் பெண்கள்

(மார்ச் 8- சர்வதேச பெண்கள் தினம்)

ஆண்களைவிட பெண்கள் தெய்வ பக்தியிலும், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களைப் பின்பற்றுவதிலும் அதிக ஆர்வமுடையவர்கள். கிராமங்களிலுள்ள பெண்கள், ஆதிவாசி பெண்கள் பெரும்பாலும் பலவித கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். நகரங்களில் பெண்கள் வேலை செய்யும் இடங்களில் ஆண்களால் பாலியல் தொந்தரவுகளுக்கும், கிண்டல்களுக்கும் சில இடங்களில் பாலியல் பலாத்காரம் போன்ற வன்கொடுமைகளுக்கும் உட்படுகின்றனர்

## இந்தியாவில் பெண்களின் நிலை

இந்திய தேசத்தின் மக்கள்தொகையில் **50%** பேர் பெண்கள்.

யுனிசெப் எடுத்த அறிக்கையின்படி 50 மில்லியன் பெண் பிள்ளைகள் இந்திய மக்கள்தொகையிலிருந்து காணாமல்போய் உள்ளனர்.

உலகின் மற்ற தேசங்களில் குழந்தைகள் பிறப்பில் 100 ஆண் குழந்தைகள் 105 பெண் குழந்தைகள் என்ற விகிதம் இருக்கும்நிலையில் நமது இந்திய தேசத்தில் மட்டும் 1000 ஆண்களுக்கு 933 பெண்கள் மட்டுமே இருக்கின்றனர்.

பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளாக வரதட்சனைக் கொடுமை, பாலியல் வன்கொடுமை, சதி என்ற உடன்கட்டை ஏறுதல், பெண் சிசுக்கொலை, கருக்கலைப்பு, ஆண் குழந்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தல் போன்றவை கூறப்படுகிறது.

**56,000** பேருடைய பலாத்கார குற்றங்கள் நீதிமன்றத்தில் முறையிடப்படவேயில்லை.

இந்தியாவில் 23 லட்சம் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றார்கள். ஒவ்வொரு நாளும் 200 பெண்கள் புதிதாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

. பாலியல் வன்கொடுமை செய்யும் குற்றவாளிகளில் **97%** பேர் தண்டிக்கப்படுவதில்லை.

9000க்கும் அதிகமான பெண்கள் சிறையில் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் **50,000** பெண்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு **10 நிமிடத்திற்கும்** வரதட்சணை கொடுமையினால் ஒரு பெண் தற்கொலை செய்து கொள்கிறாள்.

வீட்டு வேலை செய்வோருக்கு நேரும் ஆபத்து!!!

ஆண் குழந்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்,பெண் சிசுவைக் கருவிலேஅழித்தல் பெருகி வருகிறதுஎன்பது தெளிவாகிறது. சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் 2013, பிப்ரவரி பிபிசி அறிக்கையின்படி 7200 சிறுமிகள் ஆண்டுதோறும் கற்பழிக்கப்படுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அநேக பெண்கள் கணவனாலும்,உறவினர்களாலும் விபச்சார தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். காணாமல்போகும் சிறுமிகளும் கடத்தப்படும் சிறுமிகளும் விபச்சாரத் தொழிலில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

நம் தேசத்தின் பெண்களுக்காக ஜெபிப்பது நமது கடமையாகும்.

வீடுகளில் கொடுமைப்படுத்தப்படும் பெண்கள்:வீடுகளில் பெண்களை அடிமையாக நடத்துவது, குடித்துவிட்டு வந்து கணவன் மனைவியை அடிப்பது, குடும்பத்தை நடத்த பொருளாதார தேவைகளைச் சந்திக்காமல், அவளை கொடுமைப்படுத்துவது, உரிமைகளை மறுப்பது, விதவைகளை கொடுமைப்படுத்துவது, மறுமணம் செய்து கொள்வதை தடுப்பது போன்ற பல கொடுமைகளை பெண்கள் சமுதாயத்தில் இன்றும் அனுபவித்து வருகின்றனர்.

இணையதளங்கள் மூலம் நடைபெறும் குற்றங்கள்: முன்னேறிய சமுதாயத்திலும்கூட கைபேசிமூலம் பெண்களை ஆபாச படம் எடுத்துவலைத்தளங்களில் போட்டு மிரட்டுவது, திருமண சம்பந்தங்களை வலைதளங்களில் தேடும்போது பெண்களை ஏமாற்றுவது போன்றவை தொடர்ந்து நடைபெறுகிறது. இதுபோன்று இன்னும் எத்தனையோ வகைகளில் பெண்கள் சமுதாயத்தில் பாதிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு காணப்படுகிறார்கள்.

வீட்டு வேலை செய்பவர்களில் படிக்காதவர்கள். **80%**

வறுமை காரணமாக, குடிகார கணவரின் காரணமாக அதிகமான பிள்ளைகள் காரணமாக வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது

இந்தியாவில் **சுமார் 3 கோடி பெண்கள்** வீடுகளில் வேலை செய்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 18 லட்சத்து 29 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள்.

சென்னையில் மட்டும் **8 லட்சம் பேர்** வீட்டு வேலை செய்து வருகிறார்கள்.

இப்படி வீட்டு வேலை செய்யும் பெண்களில் இந்தியாவில் மட்டும் ஒரு வருடத்திற்கு சுமார் 7.5 கோடி பெண்களுக்கு கருக்கலைப்பு செய்யப்படுவதாக புள்ளிவிபரம் கூறுகிறது.

நாம் வாழும் இந்திய தேசத்தின் பெண்களின் நிலைமை மிகவும் மோசமாக காணப்படுவதை அன்றாட வாழ்க்கையில் நாம் காண முடிகிறது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருக்காதபடி நம் தேசத்தின் பெண்களின் பாதுகாப்பிற்காகவும், ஷேமத்திற்காகவும் பாரத்தோடு ஜெபிப்போம். தேவன் பெரிய காரியங்களைச் செய்வார்.

-KTM

# தேவனுடைய திட்டத்தில் செங்கடல்

பிரியமானவர்களே! இயற்கையின் மேல் தேவனுக்கு அதிகாரம் உண்டு என்பதற்கு நமக்கு பெரிய சாட்சியாக இருப்பது செங்கடல் ஆகும். ஸ்டீவ் ரட் என்னும் ஆராய்ச்சியாளர் இஸ்ரவேல் மக்களுக்காக தேவன் கடலை இரண்டாக பிரித்த இடம் அகப்பா வளைகுடாவின் தென்பகுதியாகிய திரான் வளைகுடாவில் சேரும் இடமாகும் என்று கூறி அதற்கு சில ஆராதங்களையும் தருகிறார். செங்கடல் இரண்டாக பிரிந்து ஏற்பட்ட வறண்ட பாதை வழியே சுமார் பத்து லட்சம் மக்கள் தங்கள் பிள்ளைகளுடனும், ஆடுமாடுகளையும் ஓட்டிக் கொண்டு சென்ற இடத்தை சரியாக குறிப்பிட்டு கூற நாம் சில உண்மைகளை மனதில் கொள்ள வேண்டும். அங்கே காற்று தண்ணீரை விலக்கக் கூடுவதாகவும், மேலும் மகா பெரிய எகிப்திய சேனையை மூழ்கடிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். சூயஸ் வளைகுடாவும், அகாபா வளைகுடாவும் சுமார் 1800 மீட்டர் ஆழமானவை 10 லட்சம் மக்கள் 60% சரிவில் பெண்களையும், குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு, ஆடுமாடுகளைகளையும் கூட்டிக் கொண்டு எப்படி சென்றார்கள் என்பது நினைக்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

கி.பி 1978-ல் ரான் வயட் என்ற ஆராய்ச்சியாளர் திரான் ஜல சந்திக்கு வடக்காக அகாபா வளைகுடாவின் மத்திய பகுதியில் ஒரு நில பாலம் அமைந்திருப்பதையும், அதில் எகிப்திய சேனைகள் அமிழ்ந்து போனதின் தடையங்களும் கிடைக்க கண்டு, அந்த இடமே கர்த்தர் கடலை இரண்டாக பிளந்த இடம் என்று கூறுகிறார்.

யாத் 14:1,2-ல் கர்த்தர் மோசையை நோக்கி, நீங்கள் திரும்பி மித்தோலுக்கும், சமுத்திரத்திரத்துக்கும் நடுவே பாகால் சிலோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளையமிறங்க வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லு அதற்கு எதிராகச் சமுத்திரக்கரையிலே பாளையமிறங்குவீர்களாக என்று சொன்னார்.

சுமார் 400 வருடாங்களுக்கு மேலாக, சிறையிருப்பில் இருந்த ஜனங்களை தேவன் விடுவித்து வழிநடத்தி வருகின்றார். அவருடைய திட்டத்தின்படி, சிவந்த சமுத்திரத்தின் பக்கத்தில் பாளையமிறங்குகிறார்கள். மித்தோல் என்பதற்கு கோட்டை என்றும், ஈரோத் என்பதற்கும் விடுதலையின் இடம் என்றும் பொருள்படும். இந்த இடத்திற்குதான் தம்முடைய ஜனங்களுக்கு கோட்டையாக இருந்து விடுதலைக்கொடுத்த தேவன் இறங்கி வருகிறார்.

வானாந்திரம் அவர்களை அடைத்துப் போட்டது. அவர்கள் தப்பிக்க வழியேயில்லையென்று வேவுக்காரர்கள் மூலம் பார்வோன் அறிந்து அவர்களை பின்தொடரும்படிக்கு கர்த்தர் அவன் இருதயத்தை கடினப்படுத்தினார். (யாத் 14:4) தேவனின் வல்லமையையும், பயங்கரமான கரத்தின் கிரியையையும் கண்டும் தாங்க முடியாத தண்டனைகளை அடைந்த பின்னும் இன்னும் பார்வோனின் மனம் முழுவதுமாக மாறவில்லை. காரணம் இஸ்ரவேலர்கள் உழைப்பாளிகள், வீட்டை சுத்தம் செய்ய, உணவு சமைக்க, கட்டடம் கட்ட, தெருகூட்ட அடிமைகள் இல்லை. இஸ்ரவேலர்கள் இல்லாதது பெரும் கஷ்டமாக மாறிவிட்டது.

யாத் 14:5-7 நமக்கு வேலை செய்யாதபடிக்கு நாம் இஸ்ரவேலரை போகவிட்டது என்ன காரியம் என்றார்கள். அவன் தன் ரதத்தை பூட்டி தன் ஜனங்களை கூட்டிக் கொண்டு, பிரதானமான அறுநூறு ரதங்களையும், எகிப்திலுள்ள மற்ற சகல ரதங்களையும் அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரரையும் கூட்டிக் கொண்டு போனான். இவர்கள் இஸ்ரவேலரை துன்புறுத்தி வேலைவாங்கியவர்கள்.

சகல ரதங்களோடும், வீரர்களோடும் பார்வோன், ஏழைமக்களும், நிராயுதபாணிகளுமாகிய இஸ்ரவேலர்கள் யுத்தத்தில் பழக்கமில்லாதவர்கள், எந்த ஆயுதமும் படைகளும் இல்லாதவர்கள். பிள்ளைகளோடும் ஸ்திரிகளோடும் சென்றுகொண்டிருக்கிறார்கள். தங்களை தாங்களே காத்துக் கொள்ள எந்த விதத்திலும் தைரியமும், திராணியும் இல்லாதவர்கள் ஆனால் அவர்களுக்கு இருந்தது ஒன்றே ஒன்று கர்த்தரின் பலத்த கை. தேவனின் மகா பலத்த கரம் ஒன்றே அவர்களோடு இருந்தது.

யாத் 14:10-12 பார்வோன் சமீபித்து வருகிற போது, இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் கண்களை ஏறெடுத்து பார்த்து, எகிப்தியர் தாங்களுக்கு பின்னே வருகிறதை கண்டு, மிகவும் பயந்தார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். நாங்கள் வனாந்திரத்திலே சாகிறதை பார்க்கிலும், எகிப்தியருக்கு வேலை செய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்று இஸ்ரவேல் ஜனங்கள் புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள். தப்பிக்க வழியே இல்லை. எங்களை கொன்று போடவா அழைத்து வந்தீர் என்றார்கள். அவர்களுக்கு எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்த பலத்த கரம் மறந்து போய்விட்டது. வல்ல தேவன் செய்த 10 அடையாளங்கள் நியாபகத்தில் இல்லை. பின்னாலே பார்வோனின் சேனை, முன்னாலே செங்கடல் மீட்கப்பட்ட அது ஒரு சாதராண பரீட்சை அல்ல. அது ஒரு மிக கடினமான தாங்க முடியாத சோதனை அதுவரையில் மோசேக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் செங்கடலில் ஒரு வழி திறக்கும் என்று தெரியாது. நாம் நினைப்பதற்கும், ஜெபிப்பதற்கும் அதிகமாய் செய்கிறவர் நம் கர்த்தர் அப்பொழுது தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு வருகிறது.

யாத் 14:13,14 ...மோசே பயப்படாதிருங்கள். நீங்கள் நின்று கொண்டு, இன்றைக்கு கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பை பாருங்கள் இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள் கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். பின்பு மோசே தேவனிடம் முறையிடுகிறார். அப்பொழுது தேவன், நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தை பிளந்துவிடு என்றார். (யாத் 14:19) அப்பொழுது தேவதூதனும், மேகஸ்தம்பமும், எகிப்தியரின் சேனையையும், இஸ்ரவேலின் சேனையையும் ஒன்றோடொன்று சேராதபடிக்கு அவர்கள் நடுவில் வந்தது. செங்கடல் பிளந்து அவர்களுக்கு வழி விட்டது அதில் அவர்கள் பதறாமல் நடந்து சென்றார்கள், பத்திரமாக கரை சேர்ந்தார்கள்.

அவர்களை தொடர்ந்து பார்வோனின் படையும், துணிச்சலாக தன் படையின் வலிமையை நம்பி கடலில் இறங்கினார்கள். அமிழ்ந்து போனார்கள். இதனால் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. ஒரே செங்கடல் தேவனுடைய பிள்ளைகளின் ஜீவனை பாதுகாத்தது. அவருக்கு விரோதமானவர்களை விழுங்கிப்போட்டது.

நாமும் இந்த உலகத்தின் பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். இரட்சிக்கப்பட்ட நாம் சில வேளைகளில் தோல்விகளை சந்திக்கும் போதும், பிரச்சனைகள் வரும் போதும் நான் ஏன் இரட்சிக்கப்பட்டேன் என்று முறுமுறுக்க வேண்டாம். அப்படி செய்தால் பார்வோனின் சேனையை போல நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த பழைய வாழ்க்கை இன்னும் அதிக வல்லமையுடன் நம்மை மேற்கொள்ள வரும். நம்முடைய பிரச்சனைகளில் நாம் தேவனை நோக்கி, முறையிடும் போது, நம்முடைய இரட்சகர் நமக்கு ஒரு வழியை திறப்பார். நம்முடைய பிரச்சனைக்கும், நமக்கும் நடுவில் கர்த்தர் இருப்பார். அது நம்மை மேற்கொள்ளாது. அவர் நம்முடைய பாவங்களை கடலின் ஆழத்திலே போட்டுவிட்டேன் என்று நமக்கு நம்பிக்கை கொடுத்திருக்கிறார். இஸ்ரவேலருக்கு கடலின் நடுவே வழி திறக்கும் என்று தெரியாது. இதனை வாசிக்கிற நமக்கு கடலின் நடுவிலும் வழி திறக்கும் என்பது தெரியும். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அற்புதம் செய்ய தேவன் வல்லமையுள்ளவராயிருக்கிறார். கடலை பிளந்த தேவனுக்கு நம்முடைய பிரச்சனையில் நமக்கு உதவி செய்வது லேசான காரியம்.

கானானை சுதந்தரிக்கும் படி இஸ்ரவேலருக்கு தேவனுடைய பிரசன்னம் மேகஸ்தம்பமாகவும், அக்கினி ஸ்தம்பமாகவும் அவர்களுக்கு, பக்கத்தில் இருந்து வழிநடத்தியது. பரமகானானை நோக்கி பயணம் செய்யும் நமக்கு தேவன் சகல சத்தியத்திற்குள்ளும் போதித்து நடத்து சத்திய ஆவியானவராய் நமக்குள் வசிக்கிறார் எனவே நாம் பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் வேத வார்த்தைகளை படித்தும், ஜெபித்தும், தேவ சித்தத்தை தெரிந்து கொண்டு நாம் நம் பயணத்தை தொடருவோம்.

– Mrs.Stella




லேவியராகமம் புத்தகத்தின் கருப்பொருள் பரிசுத்தம். இப்புத்தகத்தில் 159 முறை பரிசுத்தம் என்னும் பதம் வருகிறது. தேவன் நம்மை பரிசுத்தமாய் வாழ அழைத்திருக்கிறார். பரிசுத்தமாய் வாழ தேவன் நமக்கு காட்டும் 5 பலிகளை குறித்து தியானித்து ஆண்டவர் பாதத்தில் சரணடைவோம்.

லேவியராகமத்தில் சொல்லப்பட்ட பலிகளில் முதல் 3 பலிகளான சர்வாங்க தகன பலி, போஜன பலி, சமாதானபலி என்பவைகள் ஆராதனைக்கடுத்த காரியங்களில் தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தும் பலிகளாக உள்ளன. ஆனால் பாவ நிவாரண பலி மற்றும் குற்ற நிவாரண பலிகளை மனிதனின் பாவத்திற்காக மட்டும் செலுத்தப்படும் பலிகளாக உள்ளன. இந்த 2வது பலிகள் மனிதனின் பாவத்தை சுத்திகரிப்பது மட்டுமல்ல. பாவமுள்ள மனிதனுக்கும், பரிசுத்த தேவனுக்குமான உறவை வளர்க்கும் பலிகளாவும் உள்ளன.

5 பலிகள் மூலமாய் வாலிபர்களாகிய நாம் அநேக காரியங்களை கற்றுக்கொள்ளலாமா.

## 1. சர்வாங்க தகன பலி (Total devotion to God)

இது மனிதன் தேவனுக்கு தன்னை முழுவதுமாய் அர்ப்பணிக்கும் அர்ப்பணிப்பை குறித்து சொல்லுகிறது. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து பலியாக்கினார். அது போல நாமும் ரோமர் 12:1 சொல்லப்பட்டதைப் போல் ஜீவபலியாக ஆராதனையில் ஒப்புக்கொடுக்க வேண்டும். தகனபலி என்றால் முழுவதுமாக ஒப்புக்கொடுப்பது. அது காளையாகவோ, ஆடு, புறாவாகவோ மனிதனின் capability பொறுத்து நீ செய்யும் ஆராதனையில் ஜீவபலியாக உன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுக்கிறாயா என்று இந்த வேளையில் யோசித்து பார். Completely உன்னை நிதானிக்கிறாயா இல்லையென்றால் just song பாடிட்டு enjoy பண்றோமா.

புத்தியுள்ள ஆராதனை என்பது நாம் பெற்றிருக்கிற நேரம் வேலை, பணம், plan, சிந்தனை, இச்சை, பாவம் எல்லாவற்றையும் முழுவதுமாக ஜீவபலியாக தகனிப்பது நம்முடைய உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஆண்டவரிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆராதனை என்பது பாடல் மட்டும் அல்ல, அவரை புகழ்வது மட்டுமல்ல, யாருடைய கட்டாயத்தின் பேரிலும் பலி செலுத்துவது மட்டும் அல்ல. அவரை நேசிப்பதினாலும், அனுபவிப்பதினாலும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பொங்கி வருவது. தேவன் என்னை கவனிக்கிறார், கேட்கிறார் என்ற உணர்வோடு ஆராதிக்கும் போது உகந்தபலியாக அவர் அங்கீகரிக்கிறார். Completely ஒப்புக்கொடுக்கும் பலியே சர்வாங்க தகனபலி.

**சிந்தனைக்கு:** கடைசியாக எப்போது உன்னை முழுவதுமாய் தகனபலியாய் அர்ப்பணித்தாய் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தன்னை ஒப்புக்கொடுத்தது போல உன்னை முழுவதுமாய் தகனபலியாக ஒப்புக்கொடுக்க ஆயத்தமா?

## 2. போஜன பலி (Respect)

இந்த பலியில் இரத்தம் இல்லை. தேவனுக்கென்று நாம் கொடுக்கும் மரியாதையை (respect) காண்பிக்கும் பலி போஜன பலி. அங்கே அவர்கள் மாவை கொடுக்கிறார்கள். (லேவி 2-ம் அதிகாரம்) flower, தூபம், salt கொடுக்கின்றனர். இதில் salt என்பது எப்பொழுதுமே நித்தியத்தை காண்பிக்கிறது. அது தேவனோடு கூட உள்ள நித்திய உடன்படிக்கையை குறிக்கிறது. லேவி 2:11-ல் நீங்கள் கர்த்தருக்கு செலுத்தும் எந்த போஜன பலியும் புளித்தமாவினால் செய்யப்படாதிருப்பதாக இந்த பாவத்திலிருந்து கொடுக்கப்படக் கூடிய விடுதலையை காண்பிக்கிறது.

**யோசிக்க:** தேவனை கனப்படுத்துகிறோமா? அல்லது salt-ல் நிலை நிற்கிறோமா? நித்தியத்திற்கு எப்பொழுதும் ஆயத்தமா?

## 3. சமாதான பலி (Gratitude)

இந்த பலியில் நாம் தேவனுக்கு நம்முடைய நன்றியை தெரிவிக்கிறோம். தேவனோடு கூட நாம் சமாதானம் பெற்றிருக்கிறோம். இது சிலுவையிலிருந்து நமக்கு கிடைக்கப்பெற்றது. எனக்கும் தேவனுக்கும் சமாதானம் வந்து விட்டது என்பதை காண்பிக்கிறது.

**யோசிக்க:** நமக்கும் தேவனுக்கும் ஏதாவது சமாதான குறை உள்ளதா? மற்றவர்களை தேவனோடு சமாதானம் பண்ண என்ன செய்கிறோம்?

## 4. பாவ நிவாரண பலி & குற்றநிவாரண பலி

இந்த இரண்டும் தேவனுடைய உறவுக்காக செலுத்தப்படும் பலிகள் கடைசிகாலத்தில் நிற்கிற நாம் செய்யும் பாவங்களுக்கு பலியிட வேண்டுமானால் மிருக ஜீவன்களே இல்லாமல் போயிருக்கும். எனவே கிறிஸ்துவானவர் பாவ நிவாரண பலியாக ஆனார். குற்ற நிவாரண பலியில் பாவத்தின் விளைவினால் வந்த தீமைக்காய் தன் ஆத்துமாவை குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்.

**யோசிக்க:**

- பரிசுத்த ஆவியை வேதனைப்படுத்தும் காரியங்களை செய்து தேவனுடைய உறவை துண்டித்தது எப்போது?
- அனுதினமும் நம்மை சுத்திகரித்து தேவனுடைய உறவில் நீங்க போராட ஆயத்தமாய் இருக்கிறோமா?
- கிறிஸ்துவானவர் என் பாவத்தை கழுவி இருக்கிறார் என்ற நிச்சயம் நமக்கு காணப்படுகிறதா? இன்றே தீர்மானம் செய்வோம்.

இவ்வகை பலியின் போது பலிசெலுத்துபவர்கள் பலி மிருகத்தின் மீது தங்கள் கைகளை வைத்தல் என்பது, பலியிடுபவனின் பாவங்கள் அந்த மிருகத்தின் மீது கடத்தப்பட்டு அப்பாவங்களை அது சுமக்கிறது என்பதை விட, பலியிடுபவன் பாவத்திற்கு பதிலாக அம்மிருகம் தண்டனை அனுபவித்து மரிக்கிறது என்பதே சரியானதாக இருக்கும் இவ்விதமான திட்டத்தின் அடிப்படையிலே இயேசுவும் நமக்காக சிலுவையில் மரித்தார் (எபி 9:20; 1 யோவா 2:1-2) அவரின் இந்த ஒரே பலியானது லேவியராகமத்தில் சொல்லப்பட்ட எல்லா பலிமுறைகளுக்கும் நிகரானது.

இந்த இயேசுவானவரின் சிலுவை பலி ஒரு தேசத்திற்கோ, ஒரு இனத்திற்கோ மட்டும் சொந்தமானதல்ல. அவரை விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொண்டு தேவனின் சித்தத்திற்கு செவிகொடுக்கும் ஒவ்வொருவருக்கும் உரியது (1 பேதுரு 3:18) இந்த நற்செய்தியை உலகுக்கு சொல்லும் உன்னதபணியை நிறைவேற்றுவோமா?

சகோதரி. எபசி ஷீலா

# வாகனங்கள் கண்டுபிடிப்புகள்

## கிறிஸ்தவர்கள் பங்கு

தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு உலக தோற்ற முதல் அறிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்க பயன்படுத்தியுள்ளார்.உலகில் நாம் பயன்படுத்தும் அத்தனையுமே அது யூதர்களாவது அல்லது கிறிஸ்தவர்களாகவே இருக்கும்.அப்படிப்பட்ட கண்டுபிடிப்புகளை குறித்த பகுதி இந்த பக்கத்தில் ஒவ்வொரு மாதமும் வெளியிட திட்டமிட்டுள்ளோம்.அந்த வரிசையில் பயணத்தின் காலத்தில் பயணத்திற்கு பயன்படும் வாகனங்களான சைக்கிள் முதல் விமானம் வரை கண்டுபிடித்தது யார் எனவும், அவர்களுக்காக ஆண்டவரை துதிக்கவும் என்னையும் இப்படிப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கு பயன்படுத்தும் என ஆசையாய் அவரிடம் ஜெபித்து அவருக்கு பிரியமானவர்களாக வாழ்வோம்.

### CYCLE

**மிதிவண்டி : விஞ்ஞானி மேக்மில்லன்**
**காலம்: 1839 – இடம் ஸ்காட்லாந்து**




தன் வீட்டிற்கு பக்கத்திலுள்ள சாலையில் ஒருவர் பொய்கால் குதிரையை நடத்திக்கொண்டு போவதை பார்த்தார். நமக்கென்று சொந்தமாக ஒன்றை நாம் செய்வோம் எனத் தீர்மானித்தவர், தன் கால்களை தரையில் வைக்காதபடி உந்தித்தள்ளும் இரு சக்கர வண்டியைச் செய்தார்.

முக்கிய நோக்கம்: யார் தயவுமில்லாமல் தனது அடிப்படை தேவையை நிவர்த்தி செய்யும் உபகரணமாக தன் கால்களாலே மித்து நகரச்செய்யும் வாகனத்தை கண்டுபிடிக்க தீர்மானித்தார்.

### CAR

**கார் : கண்டுபிடித்தவர்: விஞ்ஞானி கார்ல்பென்ஸ்**
**காலம் 1886 இடம்: ஜெர்மனி**




இவரது தயாரிப்பான கார் எரிவாயுவினால் வல்லமை உண்டாக்கப்பட்டு என்ஜினில் இயக்கங்களை ஏற்படுத்தி கார் ஊர்ந்து செல்கிறது.

முக்கிய நோக்கம்: டீசல் பயன்படுத்துவதால் ஏற்படும் காற்று மாசுவை கட்டுப்படுத்தவே இது கண்டுபிடிக்கப்பட்டது.

### TRAIN

**நீராவி என்ஜீன் : விஞ்ஞானி ரிச்சர்ட் த்ரிவிட்டிக்**
**காலம் 1804 – இடம்: லண்டன்**




ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி மூடியைப் போட்டு அடுப்பில் வைத்தால் அந்த தண்ணீர் கொதிக்கும் போது ஆவி உண்டாகி மூடப்பட்ட தட்டு தடதடவென்று ஆடும். இந்த வகையிலேயே அதிக அளவு நீராவியை உற்பத்தி செய்யும் கொதிகலனை கண்டுபிடித்து அதன் மூலம் உந்து தண்டை இயக்கும்படி செய்து நீராவி என்ஜீனை கண்டுபிடித்தார்.

முக்கியநோக்கம்: உந்துதலின் என்ஜினால் அநேக மக்கள் பயணிக்கும் வகையில் கண்டுபிடிக்கப்பட்டது.

### AUTO

**ஆட்டோ : கண்டுபிடித்தவர்:**
**விஞ்ஞானி ஜோனத்தான் ஸ்காட்யர்**
**காலம் 1869 –இடம்: ஜப்பான்**



அந்த காலத்தில் ஆட்களை உட்கார வைத்து கைகளாலே இழுத்துச் செல்லும் வண்டிகள் இருந்தது. இத்தகைய வாகனத்தை இழுத்துச் செல்வதினால் அநேகர் பலவீனமடைந்து இறந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் தானாக இயங்கும் ஒரு வண்டியை தயாரிக்க வேண்டும் என்ற வாஞ்சையில் கண்டுபிடிக்கப்பட்டதுதான் ஆட்டோ. நாம் சுகமாக அமர்ந்து பயணம் செய்கிறோம்.

முக்கிய நோக்கம்: மக்கள் வண்டியை இழுத்து அதனால் பலவீனமடைந்து மரிக்கும் நிலைக்கு செல்வதை தடுப்பதற்காகவே கண்டுபிடிக்கப்பட்டதுதான் இது.

### FLIGHT

**விமானம் : கண்டுபிடித்தவர் விஞ்ஞானி ரைட் சகோதரர்கள்**
**காலம் 1903 இடம்: டேர் நாடு, வடக்கு கரோலினா**




ரைட் சகோதரர்கள் நம்பகமான முறையில் ஒரு மனிதனால் கட்டுப்பிடிக்கப்பட்டு பறக்கும் விமானத்தை கண்டுப்பிடித்தனர். வல்லமையான என்ஜீனால் உருவாக்கப்படும் பெலத்தினால் பறக்க விடுவதைக் காட்டிலும் இது இறக்கைகளை பறக்க விட்டு அதனால் உந்துதலைப் பெற்று பறக்கும்படி செய்தனர்.

முக்கிய நோக்கம்: ஒருவர் சாலையில் எப்படி தன் மிதிவண்டியை பாதுகப்பாக இயக்குகிறாரோ அதைப்போல விமானி விமானத்தை சமமாக இயக்கிச் செல்லும்படி செய்கிறார் என்று ஆச்சரியப்படும்படி கண்டுபிடித்தனர். மேலும் சகோதரர் வில்பர் எப்படி ஒருவன் பட்டத்தை தன் கையில் பிடித்துள்ள ஒரு நூலினால் இயக்கி பறக்க விடுகிறானோ அதைப்போல விமானி இயக்கும்படி செய்தனர்.

கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் அவருக்கு பயந்து அவர் பயன்படுத்தும் பாத்திரமாய் அவர் கரத்தில் ஒப்பு கொடுப்போம். உங்களையும் தேவன் பயன்படுத்துவார்.

– Ms.Rini

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நடத்தும்

தமிழ்

# மாநில முகாம் 2020



21 வியாழன் காலை 10 மணி முதல் | 24 ஞாயிறு மதியம் 1 மணி வரை

இடம்

## காருண்யா பல்கலைக்கழகம், கோவை

வாழ்த்துரை

**Rt. Rev. Dr. சில்வான்ஸ்**

பேராயர், C.N.I. குஜராத் திருமண்டலம்

திருவிருந்து சிறப்பு செய்தி

**சகோ. Dr. பால் தினகரன்**

நிறுவனர் - இயேசு அழைக்கிறார்

செய்தியாளர்கள்

Rev. C. A. பெஞ்சமின்

சகோ. C. ரெஜினால்ட்

Rev. S. சுதர்சன் தாமஸ்

சகோ. Y. நவீந்தர்

மற்றும் பணித்தள மிஷனெரிகள்

கருப்பொருள்

**சாவதானமாயிருங்கள்**

[யோசுவா 22:5]

பெரியவர்கள், வாலிபர்கள்
இளம் வாலிபர் மற்றும்
சிறுவர்களுக்கென
தனித்தனி கூடுகைகள் உண்டு

- தரிசனமிகு பாடல்கள்
- அனலூட்டும் செய்திகள்
- பணித்தள ஊழியர்களின் பகிர்வுகள்
- இனிய சந்தியா வேளைகள்

பதிவுக்கட்டணம்
பெரியவர் ரூ. 300
சிறுவர் ரூ. 150

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும், மிஷனெரி தரிசனத்தில் வளரவும்
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக அணித்திரண்டு வாருங்கள்